

GOKULAM
ஏப்ரல் '95
ரூ. 5.00
கோகுலம்
குடையின் அருமை
கோடையில் புரியும்!

# JEEVAN MEIN BHAR LO RANG

## DIAMOND COMICS KE SANG




Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order all the five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six hooks at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not sent us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ______________________

ADDRESS ______________________

______________________

POST OFFICE ______________ PIN CODE ______________


I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ______________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

**DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020**

**DISTRIBUTORS : Madras :** Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore) **Hyderabad :** • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore :** Sapna Book Stall, Gandhi Nagar. • A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut :** Remzmi Agencies P.O. Arakinar Calicut. • Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்

1995
ஏப்ரல் இதழ்
மலர் : 13 இதழ் : 3



## அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

வாண்டுமாமாவின் "ரத்தினபுரி ரகசியமும்", ஜானகியின் 'இரண்டாவது சாவி'யும் இந்த இதழில் புதிய திருப்பத்திற்கு வருகின்றன. இவை உங்கள் மனத்தில் புதிய ஆவலைத் தோற்று விக்கும் என்பது உறுதி.

தேர்வு எழுதிய களைப்பெல்லாம் தீர்ந்து, விடு முறையை எப்படிக் கழிக்கலாம் என்று திட்டம் போட்டுக் கொண்டிருப்பீர்கள். நீங்கள் விடுமுறையை வெளியூருக்குப் போய்க் கழித்தாலும் சரி, இல்லை உள்ளூரில் கழித்தாலும் சரி, பயனுள்ள விதத்தில் கழியுங்கள். அதைப் பற்றி. எழுதியனுப்புங்கள். சிறந்தவற்றுக்குக் கண்டிப்பாக கோகுலத்தில் இடம் உண்டு.



கோகுலத்தில் போன இதழில் பிருந்தாவனக் கவியரங்கம் இடம்பெறாததைப் பலரும் கண்டித்துக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இடம் இல்லாத காரணத்தால்தான் இது நிறுத்தி வைக்கப்பட்டது. இதே போல் இந்த இதழில் இடம் இல்லாத காரணத்தால் உங்கள் நூலகம் பகுதி இடம்பெறவில்லை. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை இந்த இதழில் வெளியாகிறது.



எல்லோருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்! வழக்கம்போல் கோடை விடுமுறைப் போட்டி அடுத்த இதழில் உண்டு. மகிழ்ச்சிதானே?

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

கௌரவ ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்

# கோகுலம் 1995 ஏப்ரல்




* உண்டேன் உண்டேன்!
பக்கம் 13



* ரோபோ ரேவதி பக்கம் 17



* முத்துச் சிப்பி
எத்தனை முட்டை இடும்? பக்கம் 73



# இந்த இதழில்...









## யுவ ஆண்டே வாவா!

பங்குனி மாதம் கழிந்தது
பாங்காய் சித்திரை பிறந்தது
எங்கும் புதுமை மலர்ந்தது
எல்லார் மனமும் குளிர்ந்தது



மாவிலை தோரணங் கட்டி
மாங்காய் கொத்து பொங்கலும்
ஆவி பறக்கும் பண்டயலை
அன்பாய் உண்ண வா! வா!

இங்கு உழவர் ஏரிடும்
எங்கள் வயலைக் காண வா!
பொங்கிச் சிறுவர் மகிழ்ந்திடும்
புனித ஸ்ரீ யுவ வா!வா!

— வேட்டை நல்லூர்
தமிழன்பன்

# பேராசை



ஒரு விவசாயி, கடுமையாக உழைத்ததால் மர நிழலில் தூங்கினான். அவனுக்கு ஏழையாக இருக்கிறோமே என்று எப்பொழுதுமே வாழ்க்கை மீது வெறுப்பு.

திடீர் என்று அவன் முன் கடவுள் தோன்றிர். "என்ன வேண்டும்? கேள்" என்றார்.

சிறிது நேரம் யோசித்த விவசாயி, "நான் நினைப்பது எல்லாம் நடக்க வேண்டும்" எனக் கேட்டான்.

கடவுளும் "அப்படியே தந்தேன்" என்றார்.

உடனே விவசாயி நினைத்தான். "நான் உழுத நிலம். இப்பொழுதே பயிர் விளைய வேண்டும்" என்றான். உடனே விளைந்தது.

விவசாயின் ஆசை போகவில்லை. தான் ஒரு பெரும் பணக்காரனாக வேண்டும் என நினைத்தான். அப்படியே நடந்தது. அந் நாட்டுக்கே ராஜாவாக வேண்டும் என நினைத்தான். அதே போலவே அவன் ராஜாவாக ஆனான். உடனே ஒரு விபரீத பயம் வந்தது. எதிரி நாட்டுக்காரர் படையெடுத்தால், என நினைத்தான் உடனே படையெடுத்தார்கள்! நம் நாட்டில் பஞ்சம் வந்தால் என்னாகும் என நினைத்தான். அப்படியே பஞ்சம் வந்தது. மக்கள் எல்லாம் என்னை அடித்து சாகடிப்பார்களோ என நினைத்தான். அதே போலவே மக்களும் அவனை அடித்துக் கொன்றார்கள்.



கனவில் இருந்து விடுபட்டான் விவசாயி. அப்பாடா, கனவிலே சரியான பாடம் கிடைத்தது என எண்ணிக் கொண்டு உற்சாகமாக; கடுமையாக உழைக்கத் தொடங்கினான்.

— எம். கே. வேங்கவேல்.

இந்தப் பகுதிக்கு தம்பி தங்கைகளிடம் இருந்து வந்துள்ளவை பரிசீலனையில் உள்ளன. பெரும்பாலானவர்கள் நடக்க முடியாதவைகளைக்கூட எழுதுகிறார்கள். கோகுலத்தில் என்ன மாற்றங்களைப் புகுத்தலாம் என்பதை அறிவதற்காகவே இளம் வாசகர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. ஒருவர் கூறியதையே மற்றவர்களும் கூறுகிறார்கள். இவற்றை வெளியிட்டால் படிப்பவர்களுக்கு சலிப்புத் தட்டுவது உறுதி. தாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதை சென்னையில் உள்ள சுதோதயா வானொலிச் சிறுவர் சங்கக் குழந்தைகள் இங்கே கூறுகிறார்கள்.



# நான் கோகுலம் ஆசிரியரானால்...

வீட்டில் பெரியவர்களிடம் பணிவாக நடந்து கொள்வது எப்படி என்பதைக் கதைகள் மூலம் தெளிய வைப்பேன். உடல் ஊனமுற்றவர்களுக்கு எந்தெந்த வகைகளில் உதவக் கூடும் என்பதை உணர வைப்பேன். படிப்பு மட்டும் முக்கியம் என்று இருக்காது ஆசிரியர், நண்பர்கள், உறவினர்களிடம் எப்படியெல்லாம் அன்புடனும் பண்புடனும் பழக வேண்டும் என்பதைக் கதைகள் நாடகம் வாயிலாகப் புரிய வைப்பேன். எத்தகைய துன்பம் வந்தாலும் கலங்கிவிடாது துணிவுடன் போராடி வெற்றி கொள்ள வைக்கும் அளவுக்கு அவர்களைத் தயார் படுத்துவேன்.

—எஸ்.செந்தில் குமார்.

எனக்கு கோகுலம் பத்திரிகை தான் வேண்டும் என்று எல்லாச் சிறுவரும் கேட்கும்படி நான் கோகுலத்தை வெளியிடுவேன். அதிக அளவில் நகைச் சுவைக் கதைகள், நாடகங்களைச் சேர்ப்பேன். குழந்தைகளின் கவிதைகளையும், இன்னும் அதிகமாக அவர்கள் புகைப் படங்களுடன் வெளியிட்டு அவர்களை உற்சாகப் படுத்துவேன். அறிஞர்களைப் பற்றியும், தேசத் தலைவர்களைப் பற்றியும் கதைகளின் மூலம் கூறுவேன். பள்ளிச் சிறுவர்களுக்கு மனக்கணக்கு, ஓவியப் போட்டிகளை நடத்துவேன்.



• வை. கிருத்திகா • எஸ். ஹேமலதா • சி. ரேணுகாதேவி

குழந்தைகள் என்ன விரும்பிப் படிக்கிறார்கள் என்பதைக் குழந்தைகளிடமே கேட்டு அவைகளைச் சேர்ப்பேன். வினாடி-வினா நடத்தி அதையும் வெளியிடுவேன். பத்திரிகைக்குப் புதிதாக அதிக வாசகர்களைத் தேடுவேன்.

—சி.ரேணுகா தேவி.

**நா**ன் கோகுலம் ஆசிரியரா ஆனேன்னா, மொதல்ல எல்லாத்தையும் சின்னக் குழந்தைங்களுக்கும் புரியுற மாதிரி எழுதுவேன். அவங்களுக்குப் புரியாத மாதிரி வார்த்தைகளோ, வாக்கியங்களோ கோகுலத்துல இருக்கவே இருக்காது. அடிக்கடி கடிதம் எழுதுற குழந்தைகளை எல்லாம் தனியா குறிச்சு வெச்சுக்கிட்டு அவங்களையெல்லாம் கூப்பிட்டு அடிக்கடி ஆலோசனை நடத்துவேன். அதுல, கோகுலத்துல வேற என்னென்ன எல்லாம் போடலாம்னு அவங்ககிட்ட யோசனை கேட்பேன்.

இன்னிக்கு, கவிதைங்கற பேர்ல கண்டதை எழுதறாங்க. அப்படி இல்லாம இருக்கணுங்கறதுக்காக, குழந்தைங்களுக்கு படிக்கிற முறையில, புரியிற முறையில கோகுலம் மூலமா யாப்பிலக்கணம் கற்பிக்க ஏற்பாடு செய்வேன். ஏன்னா, இந்தக் காலத்துல, எல்லாக் குழந்தைகளுக்கும் தப்பில்லாம தமிழ் எழுதப் படிக்கத் தெரிஞ்சிருக்கணும். அது நமது தாய் மொழியாச்சே!

—சந்திரமௌளி.

**64** கலைகள் என்றால் என்ன என்று சிறுவர்களுக்குத் தெரியவில்லை. நமது நாட்டுக்குப் புகழ் தருபவை இவைதானே? இவைகளைப் பற்றித் தெளிவாக எழுதிக் குழந்தைகளுக்குப் புரியவைப்பேன். நாடகங்களை அதிகம் வெளியிடுவேன். பள்ளி மாணவர் அனைவரும் கோகுலத்தை வாங்கும் வகையில் போட்டிகளை வைப்பேன். அவர்கள் எழுதும் படைப்புகளுக்கே முதலிடம் தருவேன்.

—எஸ்.ஹேமலதா.

**ப**த்திரிகை ஆசிரியர் பதவி என்பது ஒரு நாட்டின் பிரதமர் பதவியை விட மிகவும் சிரமமானது என்பது ஆசிரியராய் இருப்பவர்க்கே தெரியும். ஒவ்வொரு விஷயத்தையும் பல இடங்களிலிருந்து திரட்டி அதைப் பத்திரிக்கைக்குக் கொண்டு வர வேண்டும். அதிலும் குழந்தைகள் பத்திரிக்கை என்றால் நல்ல விஷயங்களை மட்டுமே கொண்டு வர வேண்டும்.

குழந்தைகளுக்குப் பிடித்தது விளையாட்டு. பின்பே படிப்பு. ஆகவே, நான் கோகுலம் ஆசிரியரானால்

குழந்தைகளுக்குப் பிடித்த விளையாட்டின் மூலமாகக் கல்வியை வளர்க்கக் கோகுலத்தின் மூலமாக முயல்வேன். குறுக்கெழுத்துப் போட்டி, அறிவு பூர்வமான போட்டி, முதலிவைகளை, அதிக அளவில் வெளியிட்டுக் குழந்தைகளின் அறிவை வளர்ப்பேன். எப்படியும் கோகுலம் பத்திரிகையில் திருக்குறளுக்கு என்று ஒரு பக்கத்தை ஒதுக்குவேன். என் வீட்டில் ஐம்பதாயிரம் புத்தகங்களுக்குமேல் அற்புதமான தமிழ்ப் புத்தகங்கள் உள்ளன. அவைகளில் இருந்து மாதாமாதம், இலக்கியத் தகவல்களை ஒரு பக்கம் எளிமையாக வெளியிடுவேன். பாட்டி, தாத்தாக்களைக் கதை கேட்டுத் தொந்தரவு செய்யும் குழந்தைகளுக்காக சிறு கதைகளுடன் ஒரு தொடர்கதையும் வெளியிடுவேன். இதில் தொடர் கதையானது மாயா ஜாலக்கதையாக இருக்கும். மேலும், ஜாதி மத பேதங்களை ஒழிக்க எல்லா மதங்களிலும் இருக்கும் நல்ல கருத்துக்களை, ஒத்த கருத்துக்களை அவ்வப்போது வெளியிடுவேன்.

TEMPLE — (6 எழுத்துக்கள்) GITHA — (5 எழுத்துக்கள்)

CHURCH — (6 எழுத்துக்கள்)BIBLE— (5 எழுத்துக்கள்)

MOSQUE — (6 எழுத்துக்கள்)QURAN — 5 எழுத்துக்கள்

வழிபாட்டுத் தலங்களும், ஞானநூல்களும் எப்படி ஒற்றுமையாக இருக்கின்றன பாருங்கள்! இவைகளையெல்லாம் புரியவைத்தாலே பெரிய தொண்டு. குழந்தைகளைத் தலைசிறந்த குடிமக்களாக்குவேன்.

—பி.பரத்குமார்

முதலில் தொடர்களுக்குக் கூடுதல் படங்களுடன் இன்னும் அதிக முக்கியத்துவம் தருவேன். குழந்தைகளுக்கு அதிகம் பிடித்தவை சித்திரக் கதைகள். அதனால் சித்திரக் கதைகள் வாயிலாக, பொய் திருட்டு போன்ற தீய பழக்கங்களால் விளையும் தீமைகளை உணர வைப்பேன். விட்டுக் கொடுக்கும் குணத்தைக் குழந்தைகளிடம் வளர்க்கக்கூடிய கதை, நாடகங்களை அடிக்கடி வெளியிடுவேன். உலக நீதிக் கதைகளை அதிக அளவில் பிரசுரிக்க வழி செய்வேன். பொது அறிவு வளர்ச்சிகளுக்கு அதிக பக்கங்களை ஒதுக்குவேன்.


எல்லாப் பள்ளி, கல்லூரி நூல் நிலையங்களிலும் கோகுலம் படிக்க இருக்கும்படி ஆவன செய்வேன்.

—வை.கிருத்திகா.

-பேட்டி, புகைப்படங்கள்
ஹைமாவதி வெங்கட்ராமன்,
சுதோதயா வானொலிச் சிறுவர் சங்கம்,

• பரத்குமார் • எஸ். செந்தில்குமார் • சந்திரமௌலி





# குடையின் அருமை கோடையில் புரியும்!

இன்று வெயில் மழையின் தாக்குதலில் இருந்து தப்பப் பயன்படுத்தும் குடை, நம் நாட்டில் புராணகாலந்தொட்டே இருந்து வருகிறது. 'சத்ரம்' என்ற சொல் குடையைக் குறிப்பதாகும். சிவாஜி மன்னரை 'சத்ரபதி' என்றே குறிப்பிட்டனர்.

தெய்வங்களுக்கு உரிய சின்னங்களுள் ஒன்றாகக் குடை கருதப்படுகிறது. மன்னர் தெய்வ அம்சமுடையவர் என்று கருதப்பட்டதால், மன்னர்களின் சிங்காதனத்திற்கு மேல் குடை பிடிக்கும் வழக்கம் இருந்தது. பல அரசர்களை வென்று ஒரு குடைக் கீழ் ஆண்டவர் என்று மன்னர்களின் அதிகார வரம்பைக் குடையை வைத்தே குறிப்பிட்டனர். திருவிழாக்களில் மங்கலச் சின்னமாக வண்ணக் குடைகள் முன்னே செல்ல சாமிபுறப்பாடு நடப்பதை இன்னமும் காணலாம்.

ஐரோப்பிய நாடுகளில் குடை என்பது பெண்களுக்கு உரிய பொருளாகவே கருதப்பட்டு வந்துள்ளது. ஆனால், ஜப்பானில் இது ஓர் அலங்காரப் பொருளாகவே மதிக்கப்பட்டு வந்தது. குறிப்பாக விழாக்காலங்களில் கேளிக்கை நடனங்களில், அலங்காரக் குடைகளை வைத்துக் கொண்டு ஆடும் ஆட்டங்கள் போற்றப்பட்டு வந்தன.

ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகே நமது நாட்டில் குடைகளில் பல மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின என்பதை யாராலும் மறுக்க முடியாது. கறுப்புத்துணி போட்ட மடக்குக் குடை அவர்களின் அறிமுகமே. பிரம்புப் பிடி, கட்டைப்பிடி, பித்தளைப் பிடி என பிடிகள் வேலைப்பாடு



மிக்கவையாக இருந்தாலும் மேலே இருந்த கறுப்புத் துணி மட்டும் மாறாமலேயே இருந்து வருகிறது.

செயற்கை நூலிழைகளின் கண்டு பிடிப்பும் பிளாஸ்டிக்கின் அறிமுகமும் கிடைத்த பிறகு குடைகளில் கிடுகிடு வென்று பல மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. சிறுவர் விரும்பும் வகை களில் வண்ணக் குடைகள் விதம் வித மாக வெளிவர ஆரம்பித்து விட்டன.

உலகப்புகழ் பெற்ற தாய்வான் குடை தயாரிப்பாளர்களுடன் இணைந்து 'சன் பிராண்டு' நிறுவனம் இந்தியாவில் மிகச் சிறந்த குடை வகை களை அயல் நாட்டினரும் விரும்பும் வகையில் தயாரித்து வருகிறார்கள். குறிப்பாக இவர்களது 'குழந்தைகளுக் கான குடைகள்' கண்கவர் வடிவமும் வண்ணமும் கொண்டவை. வால்ட் டிஸ்னியின் 'மிக்கி மௌஸ்', 'டொனால்டு டக்' போன்ற சிறுவர் விரும்பும் பாத்திரங்களை இந்தக் குடைகளின் வண்ணத் துணிகளிலும், கைப்பிடிகளிலும் கண்டு மகிழலாம்! நூற்றாண்டைக் கடந்து விட்ட இந்த நிறுவனத்தின் குடைகளுக்கு உலகெங் கும் கிராக்கி உள்ளது. வாடிக்கையா ளர்களுக்கு புத்தாண்டு நினைவுப் பரிசாக இவற்றை வழங்க விரும்பும் பெரிய நிறுவனங்களுக்கு, அந்த நிறுவனத்தின் பெயரைப் போட்டும் தருகிறார்கள். குடை என்றாலே கறுப் புத் துணி போட்டதாக இருக்கும் என்ற நம்பிக்கையை இந்த நிறுவனத் தின் தயாரிப்புகள் தகர்த்து விட்டன. குடை என்பதை சிறுவர்க்குப் பரிசாக வழங்கக் கூடிய பொருளாக மாறி விட்ட சாதனை இந்த நிறுவனத்துக்கு உண்டு.

அட்டையில் வண்ணக் குடைகளுக்கு நடுவே சிரிப்பது சிறுமி நாராயணி.
அட்டை வண்ணப்படம் காமரா திருஞானம்.

## குறில் நெடிலைச் சேருங்கள்— போட்டி முடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட வர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தை எட்டிவிட்டது! இதுமட்டுமா? கலந்து கொண் பெரும்பாலோர் சரியான விடையை எழுதி அயர வைத்துள்ளனர். பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறைதான் கை கொடுத்தது.

**சரியான விடை :**

பலம்; பாலம், அணி; ஆணி, கொடி; கோடி, மலை; மாலை, படம்; பாடம், பரி; பாரி, கொடு; கோடு, முடி; மூடி, சிட்டு; சீட்டு, சட்டை; சாட்டை, மடி; மாடி, குடை; கூடை.

**ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:**

1. சா. சந்தோஷ், செக்காணூரணி.
2. க. அரவிந்த், விஜயவாடா.
3. ஜெ. வெங்கடேஷ், சிவகாசி - 23.
4. பா. ஆதித்யா, கொச்சி - 14.
5. விக்டர் ஜெகராஜா, பாண்டி - 10.
6. கே. ஹரீஷ், ஹைதராபாத்.
7. ஏ. மேரி அருள் பிரியா, மூங்கில் துறைப்பட்டு.
8. துரை. குமர குருபரன், நெய்வேலி - 3.
9. கே. அவிநாஷ், புதுதில்லி - 58.
10. டி. எஸ். முகமத் சலீம், கடையநல்லூர்.
11. ஜே. ஆலிவர், உசிலம்பட்டி.
12. ஜே. கனி, நாலு மாவடி - 1 போஸ்ட்.
13. என். அபுல் பசல், அரியநாயகிபுரம்.
14. ப. செண்பக முருகன், சின்னாளப்பட்டி.
15. ஸ்வேதா ரவீந்திரன், சூரத்.
16. ஜே. எம். ஃபார்சான், வாலாஜாபாத்.
17. சா. ஷைனி, முதலூர்.
18. எம். ஆல்வின், ஆழ்வார் திருநகர்.
19. எஸ். ப்ரசன்னா, காரைக்கால்.
20. ந. ஷீலா, சிங்கப்பூர்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

# நிழல் யாருக்குச் சொந்தம்?

ரெசாக்கிடம் ஒரு கழுதை இருந்தது.


ரெசாக் தன் கழுதையைக் கடுமையாக வேலை வாங்கினான். அதனால் அதற்கு வெறுப்புண்டாயிற்று. வாய்ப்புக் கிடைத்தால் ஓடி விட அது காத்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் வெளியூரில் இருந்து வியாபாரி ஒருவன் வந்தான். அவன் உடனே பக்கத்து ஊருக்குச் செல்ல விரும்பினான். அதனால் ரெசாக்கின் கழுதையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டான். வியாபாரி கழுதை மேல் ஏறிப் பயணம் செய்ய, ரெசாக் கழுதையைப் பிடித்துக் கொண்டு அருகில் கூடவே வந்தான்.

அது கோடை காலம். வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. வெயிலின் கொடுமையால் வியாபாரி தவித்துச் சோர்ந்து போனார். எங்கேயாவது ஒரு நிழலில் சில நிமிஷங்களாவது தங்கி இளைப்பாற அவர் துடித்தார்.

சுற்றிலும் பரந்தவெளி. எங்கும் ஒரு துளி கூட நிழல் இல்லை. வியாபாரியின் கண்ணில் கழுதையின் நிழல் பட்டது.

ரெசாக்கிடம் கழுதையை நிறுத்தச் சொல்லி இறங்கினார் வியா



# படிக்க ஓர் ஈசாப் கதை!

பாரி. கழுதையின் நிழலில் கால்களை வைத்துக் குந்திட்டு உட்கார்ந்து இளைப்பாற முயன்றார்.

ஆனால், வியாபாரி தன் கழுதையின் நிழலில் இளைப்பாற முயன்றது ரெசாக்குக் கோபத்தை வர வழைத்தது.

"உனக்குக் கழுதையை மட்டும் தான் வாடகைக்குத் தந்தேனே தவிர, அதன் நிழலையும் அல்ல. அந்த நிழல் எனக்குச் சொந்தமானது. அதை நீ அனுபவிக்க முடியாது" என்றான் ரெசாக்.

"முட்டாள்தனமான வாதமாக இருக்கிறதே! கழுதையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டால் அதன் நிழலுக்கும் சேர்த்துத்தான் என்பது பொருள். அதன் நிழல் எனக்கே உரிமையானது" என்று வாதாடினார் வியாபாரி.

ரெசாக் இதை அனுமதிக்கவில்லை. வியாபாரியும் விடவில்லை. விவாதம் வலுத்து, வாய்ச் சண்டையானது. அதுவும் வளர்ந்து கைச் சண்டையானது. இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு கட்டிப் புரண்டனர்.


தப்பி ஓட வாய்ப்பை எதிர் பார்த்திருந்த கழுதை, இதுவே நல்ல நேரம் என்பதை உணர்ந்தது. நாலு கால் பாய்ச்சலில் ஓட்டமாக ஓடி மறைந்தது!


வெகுநேரம் பொறுத்துத்தான் கழுதை ஓடி விட்டதை இருவரும் கவனித்தனர்.

"ஐயோ என் கழுதை!" என்று அலறினான் ரெசாக்.

"என் சரக்கை அதில் கட்டியிருந்தேனே? சரக்கோடு ஓடிப் போய் விட்டதே!" என்று அலறினான் வியாபாரி.

விட்டுக் கொடுக்கா விட்டால் இழப்பைச் சந்திப்பது உறுதி.





# டீ.வியும் ஃப்ரிஜ்ஜும்!

அந்த மாடி வீட்டில் வெகு நாட்களாக ஒரு டீ.வி. இருந்தது. பிள்ளைகளும், பெரியவர்களும் அதற்கு முன்னால் வந்து அமர்ந்து டீ.வி. பார்ப்பார்கள். அவர்கள் டீ.வி.யைப் பார்ப்பதே அன்பு நிறைந்ததாக இருக்கும்.

டீ.வி.க்குப் போட்டியாக திடீரென்று ஒருநாள் அந்த வீட்டுக்கு ஒரு ஃபிரிஜ் வந்து சேர்ந்தது. அதை டீவிக்கு அருகே வைத்தார்கள். டீ.வி.க்கு ஒரே கோபம். பெரியவர்களும் பிள்ளைகளும் அடிக்கடி ஃபிரிஜ்ஜைத் திறந்து குளிர்பானம் குடித்து மகிழ்ந்தார்கள். இது டீ.வி.க்குப் பொறுக்கவில்லை.

ஒரு நாள் டீவியும், ஃபிரிஜ்ஜும் கடுமையாக வாக்குவாதம் செய்து கொண்டன. "நான் குளுமையானவன். எல்லோருக்கும் நான் பிடித்தமானவன். தெரிந்து கொள்" என்றது ஃபிரிஜ். டீ.வி. சொன்னது, "ரொம்ப அலட்டிக்காதே அப்பனே! நீ குளுமையானவனாக இருக்கலாம். மறுக்கலே. ஆனால், என்னைத்தான் அதிகம் விரும்பிப் பார்ப்பார்கள். பிறகுதான் தாகம் எடுக் கும் போது உன்னிடம் வருவார்கள் புரி கிறதா?" என்றது.

பிரிஜ் பேசியது. "உன்னைப் பார்த்தால் கண்ணுக்குத்தான் கெடுதல்! அதனால் நானே மக்களுக்கு மிகவும் பயனுள்ளவன். தெரிந்து கொள்" என்றது.

டீவி. சொன்னது, "குளிர்காலத்தில் உன்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்கள். அப்ப என்ன பண்ணுவே...?" என்று கேட்டது.

இப்படியே இரண்டும் மிகவும் பயங்கரமாக ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்டு சண்டை யிட்டன. அந்தச் சமயம் பார்த்து, மின்னல் மின்னி இடி இடித்தது. மழை பெய்தது. மின்சாரம் நின்றது.

இரண்டும் பேச முடியாதபடி, "ஊமை"யாயின. மின்சாரம் சொன்னது, "அட முட்டாள்களே! நான் இல்லாது போனால் நீங்கள் இயங்கவே முடியாது. வெறும் கல்தான். யாருமே உங்களைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்கள். என்னால்தான் உங்களுக்கு இயக்கமே. என் நட்பு இருப்பதால்தான் மதிப்பும் கூட. புரிகிறதா?" என்றது.

இரண்டும் தலையை ஆட்டி ஆமோதித்தன. இப்பொழுது எல்லாம் டீ.வி.யும் பிரிஜ்ஜும் சண்டை போட்டுக் கொள்வதே இல்லை.

— எம். கே. வி.



# உண்டேன்! உண்டேன்!

பூவேளூரில் பூதன் என்று ஓர் உழைப்பாளி. அவன் மனைவி பொன்னி. ஒரு நாள் பூதன் தோப்பில் நெடுநேரம் கடுமையாக உழைத்தான். பசி எடுத்தது.

அவன் மனைவி பொன்னி, பக்கத்து ஊரில் உள்ள வழுதி என்பவரின் வீட்டுத் திருமணத்திற்காகக் காலையிலேயே புறப்பட்டுச் சென்று விட்டாள். போகுமுன் வரகரிசிச் சோறும், புளித்த மோரும், தொட்டுக் கொள்ளக் கத்தரிக்காய் வதக்கலும் செய்து கலயத்தில் கொடுத்தனுப்பியிருந்தாள். பசி எடுத்த பூதன், கலயத்தை எடுக்கக் கழனி மேட்டுக்கு வந்தான். அங்கே கிணற்று மேட்டில் மா மரத்தடியில் ஒரு மூதாட்டி உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

கூர்ந்து பார்த்தபோது அது ஔவைப் பாட்டி என்று புரிந்தது.

'காலையில் இவரும் வழுதி விட்டுத் திருமணத்திற்குப் போனவராயிற்றே! இதற்குள் திரும்பி விட்டாரே! ஔவையை வரவேற்று, முதல் பந்தியிலேயே அமர்த்தி அறுசுவை விருந்து கொடுத்துப் பரிசும் தந்து விரைவாகவே வீடு போய்ச் சேர அனுப்பியிருப்பார்களோ?'

பூதனுக்குப் புரியவில்லை. தலையில் கட்டியிருந்த துண்டை எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டு ஔவை இருந்த பக்கத்துக்கு ஓடினான். இவனைப் பார்த்த அவர், லேசாக முறுவலித்தார். ஆனால், அவர் முகத்தில் களிப்பு இல்லை. களைப்புத் தெரிந்தது! விருந்துண்ட திருப்தி தெரியவில்லை; பசிக் கிறக்கம் தெரிந்தது!

"என்னம்மா - வழுதி கல்யாணத்தில் விருந்து உண்ணவில்லையா?"

ரா. பொன்ராசன்



"உண்டேன்" என்றார் ஔவை சோகமாக.

"என்ன உண்டீர்கள்?" - பூதன்.

"வண் தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்து உண்ட பெருக்கம் உரைக்கக் கேள்....."

ஔவையின் அனுபவம் பாட்டாகவே வந்தது. பூதன் புலன்களையெல்லாம் கூராக்கிக் கொண்டு கேட்டான். ஔவை தொடர்ந்தார்....

"நெருக்குண்டேன், தள்ளுண்டேன் நீள் பசியாலே - அண்டி சுருக்குண்டேன், சோறுண்டிலேன்...."

ஔவை சொல்லி முடித்த போது பூதன் மனதில் குபீரென வேதனை சூழ்ந்தது. 'எவ்வளவு பெரும் புலவர் இந்தப் பாட்டி! இவர் அந்த வழுதி கலியாணத்துக்குப் போய்ச் சோறு உண்ணாமல் வந்து விட்டாரே' என்னும் வேதனை.

ஒரே கணம் - மறு கணமே அந்த வேதனை மகிழ்ச்சியாக மாறியது. அந்த - உண்ணாத அனுபவம் கூட எவ்வளவு அருமையான பாட்டாகப் பரிணமித்து விட்டது!

பூதன் ஏக சந்தக் கிரகி. அதாவது ஒரு தடவை ஒருவர் ஒரு பாடலைக் கேட்டால், மறுமுறை கேட்காமலே மனதில் பதித்துக் கொள்ளும் திறம் பெற்றவன். பாட்டியின் பாட்டை மீண்டும் ஒரு முறை வாய்விட்டுச் சொல்லிப் பார்த் தான்.

"வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலி
யாணத்து
உண்ட பெருக்கம் உரைக்கக் கேள் - அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன்
நீள் பசியாலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்."

உண்ணாத ஒரு விருந்தை வைத்து இந்தப் பொல்லாத ஔவைப் பாட்டி எத்தனை முறை 'உண்டேன், உண்டேன்' என்று பாட்டிலேயே சொல்லி விட்டார்! சோறு உண்டிலேன் என்று சொல்ல வந்த அவர் மூன்று முறை உண்டேன், உண்டேன், உண்டேன் என்று சொல்லி விட்டாரே!

ஔவையாரின் அந்தச் சொல்லாட்சித் திறமையை மிகவும் ரசித்த பூதனுக்கு இன்னும், ஔவை பசியாகத்தான் இருக்கிறார் என்னும் உண்மை உறுத்தியது. ஓடிப் போய் மரத்தடியிலிருந்த கலயத்தை எடுத்துத் திறந்து பார்த் தான். உள்ளே வரகரிசிச் சோறு. அதுவும் புளித்த மோரில், தொட்டுக் கொள்ளக் கத்தரிக்காய் வதக்கல். பைந்தமிழ்ப் பாட்டிக்கு இந்தப் பழைய கஞ்சியை எப்படிப் பரிமாறுவது? கூசினான். இருந்தாலும் கூழையும் ரசித்து உண்டு வாழ்த்திப் பாடுபவர் அல்லவா ஔவையார்? கைகளை அலம்பிவிட்டு கலயக் கஞ்சியைக் கரைத்து ஔவைப் பிராட்டிக்குப் பரிமாற முன்வந்தான் பூதன்.

ஔவை மறுத்தார்.

பூதா. நீதான் முதலில் சாப்பிட வேண்டும். உழைத்துக் களைத்திருப்பவன் நீதான். அதனால் முதலில் நீ சாப்பிடு. நான் உனக்குக் கூழை ஊற்று



கிறேன். அப்புறம்தான் எனக்கு. உழைப்பவருக்குத்தான் முதலில் உண்ணும் உரிமை" -

"முதியவர்க்கும் சான்றோர்க்கும் உணவு தர வேண்டியது எல்லார்க்கும் கடமை அல்லவா?" - பூதன் கேட்டான்.

இதற்கு மேலும் தான் உண்ண மறுத்தால் பூதனும் உண்ணமாட்டான். பாவம், உழைத்துக் களைத்து வந்திருக்கும் அவன், இன்னும் பசித்திருக்க நேரும். மேலும் விவாதிக்காது கை அலம்பிக் கொண்டு பூதன் முன் கைகளைக் குழித்துக் குவித்துக் கஞ்சியை ஏற்கத் தயாரானார் ஔவைப் பாட்டி.

பொங்கி வரும் பெருமிதத்தோடு ஔவைக்கு அந்தப் பழைய சோற்றை பூதன் பரிமாற, ஔவைப் பாட்டி ரசித்து, ருசித்து மகிழ்ந்து உண்டார்.

மூன்றே கைகள். ஔவையின் வயிறு அவ்வளவுதான் கொண்டது!

தான் சாப்பிட்டு முடித்த சுருக்கில் கையலம்பிக் கொண்டு பூதனைக் கை குழிக்க வைத்து அதில் அந்தக் கரைத்த கஞ்சியைக் கைகளால் எடுத்து ஊற்ற....

வீட்டிலிருந்து தோப்பு நோக்கி வந்து கொண்டிருந்த பொன்னியின் கண்களுக்கு இந்தக் காட்சி தெரிந்தது. அவளுக்கு ஒரே ஆச்சர்யம்.

தமிழ்ப் பெரும் மூதாட்டி ஔவைப் பாட்டி பரிமாற அதை ஏற்று உண்ணும் பேறு எல்லார்க்கும் எளிதில் வாய்க்கக் கூடியதா? தன் கணவனுக்கு அந்தப் பேறு வாய்த்ததில் பொன்னிக்கு நெஞ்சு கொள்ளாத ஆனந்தம்.

பணிவாக புடவைத் தலைப்பை இழுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டு அந்த கிணற்று மேட்டுக்கு ஓடியவள், அப்படியே கை குவித்து கண் பனிக்க ஔவையைக் கேட்டாள்.

"நீங்க... நீங்க... சாப்பிட்டீங்களா தாயி?" என்று குழறினாள்.

"ஓ!" என்றார் ஔவை ஒற்றைச் சொல்லில், முகமெல்லாம் மகிழ்ச்சி பொங்க.

"புளித்த மோர்.... வரகஞ்சோறு - எப்படி இருந்திச்சு?" - பொன்னி கேட்டாள்.

"எல்லா உலகும் பெறும்" என்றாள் பொல்லாத பாட்டி அந்த மகிழ்ச்சி மாறாமல்!


"என்ன சொல்றீங்க தாயி" என்று பொன்னி குழம்பிப் போய்க் கேட்க. ஔவை கூறினார்.

"நான் பசியால் களைத்திருக்கிறேன் என்பதை, நான் சொல்லாமலேயே புரிந்து கொண்டு, பூதன் எனக்கு விருந்து இட்டான். அதற்கு இந்த உலகம் எல்லாவற்றையும் பதிலாகக் கொடுத்தாலும் ஈடாகாது" என்றார்.




* பசுவின் அம்மைப் புள்ளிகளிலிருந்து எடுக்கப்பட்ட சீரத்தை மனித உடலில் செலுத்தி (Inoculation) பெரியம்மை நோயை அக்காலத்தில் தடுத்தார்கள். அதுவே Vaccination என்றழைக்கப் பட்டது. லத்தீன் மொழியில் Vacca என்றால், "பசு" எனப் பொருள். ஆனால் தற்போது போடப்படும் எல்லா நோய் களுக்கான தடுப்பு ஊசிகளையுமே Vaccination என்று அழைக்கிறார்கள்!

— எம்.ஜி.ஆர், சங்கமங்கலம்





★ உஜ்ஜெயினியில் கழுதைகள் பற்றிய ஆராய்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. மூவாயிரம் கழுதைகளை ஆய்வுக்கு உட்படுத்தியதில் கிடைத்த தகவல்கள்; கழுதை ஒரு நாளைக்கு முப்பது நிமிடங்கள் வரையில்தான் தூங்குகிறது. இதற்கு சிவப்பு முள்ளங்கியைக் கொடுத்தால் ஜலதோஷம் பிடித்துக் கொள்கிறது. கழுதை மொத்தம் இருபது வருடங்கள்தான் உயிர் வாழ் கின்றது!

— அ. நவ்சாத், மொரப்பூர்

* பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்ளும் வேகம் எவ்வளவு தெரியுமா? செகண்டுக்கு 1523 அடிகள்! இந்த வேகம் இருப்பது பூமத்திய ரேகையில்தான். துருவங்களை நோக்கிப் போக போக வேகம் குறையும். 30 டிகிரி வட தென் அட்ச ரேகையில் செகண்டுக்கு 1322 அடியும், 60 டிகிரியில் 764 அடியுமாக சுற்றும் வேகம் இருக்கும்.

— அ. முஸ்தபா, தக்கோலம்




பொன்னி சிரித்தாள். சிலிர்த்தான். கை குவித்துக் கும்பிட்டுக் கெஞ்சினான்.

"அம்மா... நீங்க இங்கே வந்தது, இருந்தது, உண்டது எல்லாம் நாளாக, நாளாக எங்களுக்கே கூட மறந்து போகும். இதை எப்பவுமே நிலைக்கப் பண்ணுங்க தாயி."

பொன்னி என்ன சொல்ல வருகிறாள் என்பதை ஔவைப் பாட்டி புரிந்து கொண்டார். பூதன் உழைப்புக்கு அஞ்சாத விவசாயிதான். எனினும், அவன் நன்கு படித்தவன். அவ்வப் பொழுது மற்றவர் கூறும் கவிதைகளைக் கேட்டவுடனே அவைகளை எழுதி வைத்துக் கொள்ள வசதியாக கழனி மேட்டில் உள்ள மரத்தடியில் ஓலைக் கட்டும், எழுத்தாணியும் வைத்திருந்தான்.

ஔவைப் பாட்டி பொன்னியின் வேண்டுகோளுக்கு மனமிறங்கி விட்டாள் என்பதை அறிந்து கொண்டதும், பூதன் தாமதிக்கவில்லை. ஓடிச் சென்று ஓலைச் சுவடிக்கட்டையும், எழுத்தாணியையும் எடுத்து வந்து ஔவையாரிடம் கொடுத்தான்.

ஔவையார் அரை நொடி கூடச் சிந்திக்க நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. அவர் உள்ளத்தில் ஊறிப் பெருகிய மகிழ்ச்சிப் பெருக்கு அற்புதமான பாடலாக உருவாயிற்று.

*"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்*
*முரமுரெனவே புளித்த மோரும் - திறமுடனே*
*புலவேளூர்ப் பூதன் புரிந்து விருந்திட்டான் ஈது*
*எல்லா உலகும் பெறும்."*


பொன்னி, பூதன் இருவருக்குமே ஏட்டில் எழுதப் பெற்ற இந்தப் பாட்டைப் படித்ததும் மகிழ்ச்சி வானில் வேறு எவருமே எட்டியிராத உயரத்தில் பறப்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

அந்தப் பரவசச் சிலிர்ப்பில் பொன்னி சொன்னாள் -

"வரகரிசிச் சோறும், கத்தரிக்காய் வதக்கலும் எந்த உலகம் பெறுமோ, பெறாதோ. இந்த அருமையான பாட்டு உண்மையில் எல்லா உலகும் பெறும்!"

# திருவாழத்தான்

**இது இப்போதைக்கு நடக்க முடியாத கற்பனைக் கதையானாலும் சுவையானது. அளவுக்கு மீறி கம்ப்யூட்டர் விளையாட்டுக்களிலேயே ஈடுபட்டு, ரோபோவாகிவிட்டால் (ஆக முடியாது) என்னவாகும் என்பதைக் கற்பனை செய்தால் இப்படித்தான் இருக்கும்.**




தன் அலுவலக வேலைக்காக அப்பா சின்னதாக அழகான பி.சி. கம்ப்யூட்டர் ஒன்றை வீட்டுக்குக் கொண்டு வந்து வைத்திருந்தார். அக்கம்ப்யூட்டரில் சில விளையாட்டுக்களும் ப்ரோக்ராம் செய்து வைக்கப்பட்டிருந்தன.

அவற்றை எப்படி விளையாடுவது என்று அப்பா பரமேஷுக்கும் ரேவதிக்கும் சொல்லிக் கொடுத்தார். 'கம்ப்யூட்டரில் எப்போதும் விளையாடிக் கொண்டிருக்கக் கூடாது. பாடங்களையும் படிக்க வேண்டும்' என்று கூடவே அப்பா எச்சரித்தும் இருந்தார்.

ரேவதியும் பரமேஷும் கம்ப்யூட்டர் விளையாட்டில் மும்முரமாக ஈடுபட்டனர். இருந்தாலும் அப்பாவின் அறிவுரைப்படி பாடங்களிலும் கவனம் செலுத்தினார்கள். ஆகவே அப்பாவும் அம்மாவும் அவர்களைக் கண்டிக்கும்படியான நிலை ஏற்படவே இல்லை.

அந்தக் கம்ப்யூட்டர் விளையாட்டுக்களில் ஒன்று ரோபோ ரன்னர். அதாவது கம்ப்யூட்டருள் ஒரு ரோபோ வீட்டுக் காரியங்கள் அனைத்தையும் அழகாகச் செய்தது. ரேவதி அந்த ரோபோ விளையாட்டில் அதிகமாக ஈடுபட்டாள்.

'ரோபோ, துணிகளைத் துவைத்து உலர்த்து' என்பதாகப் பட்டன்களைத் தட்டினால், அழுக்குக் கூடையிலிருந்து அத்தனை துணிகளையும் அது எடுத்துச்

செல்கிறது. தவறிக் கீழே விழுந்த கைக் குட்டையையும் காலால் ஒயிலாக எடுத்துச் சேர்த்துக் கொள்கிறது. வாஷிங் மெஷினை இயக்குகிறது. திறந்து நீரில் துணிகளைப் போடுகிறது. டிடர்ஜெண்ட் தூளுடன் அலசுகிறது. பிழியும் பகுதிக்கு மாற்றுகிறது. ஒவ்வொன்றாக எடுத்து உதறிக் காயப் போடுகிறது. காற்றில் ஆடித் துணிகள் பறந்து போய் விழாமலிருக்க, துணிகளுக்குக் கம்பியோடு சேர்த்துக் கிளிப் மாட்டுகிறது. அதிசயம்!

'ரோபோ, நான்கு நபர்களுக்கு ப்ரேக் ஃபாஸ்ட் ஏற்பாடு பண்ணு' என்றால், மேஜையை இழுத்து வந்து போடுகிறது. வெள்ளை மேஜை விரிப்பை உதறி விரிக்கிறது. மேஜையைச் சுற்றி நான்கு நாற்காலிகளை வைக்கிறது. தலையில் நீண்ட குல்லாயை மாட்டிக் கொண்டு, கழுத்தில் அப்ரான் கட்டிக் கொண்டு, கையில் கத்தியை எடுத்துக் கொள்கிறது. ரொட்டியை எடுத்து அழகாக வெட்டுகிறது. துண்டு போடுகிறது. துண்டு போடப்பட்ட ரொட்டிகளின் பக்கங்களில் அழகாக வெண்ணெய் தடவுகிறது. ஜாம் தடவுகிறது. அழகான சாண்ட்விட்ச்கள் தயாரித்து, பீங்கான் தட்டுக்களில் வைத்து, மேஜை மீது பரிமாறுகிறது.


'குளிர்ச்சியாக பானம் ஏதாவது கொண்டு வா.'

ரோபோ அசைவதில்லை.

'ரோபோ. குளிர்ச்சியாக பானம் கொண்டு வரச் சொன்னேன்.'

அப்போதுதான் அது இயங்குகிறது. 'ரோபோ' என்று அழைத்து உத்தரவு தர வேண்டும். இல்லாவிடில் வேறு எவருக்கோ சொன்ன வார்த்தைகள் என்பதாகப் பேசாமல் இருந்து விடுகிறது.

இந்த விளையாட்டை மாற்றி மாற்றிப் போட்டுப் பார்ப்பதில் ரேவதிக்கு வெகுவாக ஆர்வம். இவ்விதம் ரோபோ ரன்னர் விளையாட்டில் ஈடுபட்டதில், ரோபோவை எப்படி எல்லாம் ஆட்டு விக்கலாம் என்பது அவளுக்கு அத்துபடி ஆயிற்று. முறுக்குப் பண்ண ரோபோவுக்குக் கற்றுத் தந்தாள். அவள் கற்றுத் தந்தபடி மாவு பிசைந்து, தட்டுக்களில் அழகாக இரண்டு சுற்று, ஐந்து சுற்று, பதின்மூன்று சுற்று என்று



மாவைச் சுற்றிப் பண்ணி, கொதிக்கும் வாணலி எண்ணெயில் போட்டு எடுத்தது.



இப்படி ரோபோ, ரோபோ என்று ரோபோ வுடன் பழகியதில், ரோபோவாகப் பிறக் காமல் போனோமே என்ற ஏக்கம் அவளுக் குள் எழுந்தது. அந்த ஏக் கத்தின் விளைவாக ரோபோவின் இயல்பு ரேவதியையும் தொத்திக் கொள்ள ஆரம்பித்தது.

ஒருநாள் காலையில் அவள் படுக்கையி லிருந்து விழித்து எழுந்த போது, ரோபோ ஆகி விட்டாள். பார்ப்ப தற்குச் சின்னப் பெண் ணாகத் தெரிந்தாலும், செயலில் ரோபோ ஆனாள். இந்தப் பக்கம், அந்தப் பக்கம் திரும்பாத வெறிச்சிட்ட பார்வை. உணர்ச்சி இல்லாத கண்கள், அசையாது நிற்பது ஆகிய ஜடத் தன்மைகள் அவளைக் கவர்ந்து கொண்டன.

அன்று அம்மா, "ரேவதி, பாத்ரூம் காலி யாக இருக்கு. வெந்நீர் ஆறி விடும். போய்ச் சீக்கிரம் குளிச்சுட்டு வா. மச மசன்னு நிக்காதே. பள்ளிக்கூடத்துக்கு நேரம் ஆறது" என்று சொன்னாள்.

"இதோ போகிறேன்" கரகரத்த குர லோடு லேசான கிணுகிணுத்த ஒலி வர, ரேவதி பதில் சொன்னாள்.

அம்மா சிரித்தாள். செந்தமிழில் மகள் விளையாட்டாக, கம்ப்யூட்டரில் பேசப் படுவது போலப் பேசுகிறாள் என்று நினைத்தாள்.

காலைச் சிற்றுண்டிக்கு எல்லாரும் உட்கார்ந்த போது, "ரேவதி, இன்னொரு இட்லி போட்டுக் கொள்" என்றாள் அம்மா.

"வேண்டாம், வயிறு நிரம்பி விட்டது" கரகரப்புடன், கிணுகிணுக்கும் குரல்.

சிரித்தார்கள்.

"சாதாரணமா நாலு இட்லி சாப் பிடுவியே! இன்னிக்கு ஏன் ரெண்டோடு நிறுத்திட்டே?"

பதில் இல்லை. ரேவதி தூரப் பார்வை யைச் செலுத்துபவளாக இருந்தாள்.

"ரேவதி, உன்னைத்தான் கேட்கறேன்."

"என்ன?"

"ஏன் மூணு இட்லியோட நிறுத்தி னுட்டே?"

"போதும் என்றுதான்" கரகரப்பு, கிணு கிணுப்பு.

"ரேவதி, என்னடீ ஆச்சு உனக்கு?"

அம்மா அவளுடைய தோளில் கை வைத்துக் குலுக்கினாள்.

"நான் ரோபோவாகி விட்டேன்."

"ஐயோ, என் குழந்தைக்கு என்னவோ ஆகி விட்டதே!" - அம்மா அவளைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு கவலையுடன் அப்பாவைப் பார்த்தாள்.

"சும்மா இரு. விளையாடுகிறாள். இல்லையா ரேவதி?"

"நான் விளையாடவில்லை. மெய்யாகவே சொல்கிறேன். ரோபோ ஆகி விட்டேன். ஆனால் நீங்கள் என்னைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. நார்மல் ஹ்யூமன் பீயிங்காகச் செயல்படுவேன்."



பள்ளிக்குச் சென்றாள். எவருடனும் பேசவில்லை. நேராக வகுப்புக்குப் போய் தன் இருக்கையில் உட்கார்ந்து கொண்டாள். பார்வை கரும்பலகையைப் பார்த்தபடி இருந்தது.

நான்காம் வகுப்புப் படிப்பவள் ரேவதி.

முதல் பாடம் கணிதம். மாணவியர் அங்கு ஒருத்தி, இங்கு ஒருத்தி என்பதாகக் குறிப்பிட்டு ஆசிரியை பதினாறாம் வாய்ப்பாடைச் சொல்லச் சொன்னார்.

"பதினாரோண் பதினாறு. பதினாறு ரெண்டு முப்பத்திரண்டு..." என்று சொல்லினர்.

"ரேவதி, நீ சொல்."

எழுந்தாள். "பதினாறு பெருக்கல் ஒன்று சமம் பதினாறு, பதினாறு பெருக்கல் இரண்டு சமம் முப்பத்திரண்டு..." காப்பிக் கொட்டை அரைக்கும் மெஷின் ஒலியுடன் ஒப்பித்தாள்.

கொல்லென்று சிரித்தனர் மாணவியர்.

"ரேவதி! என்ன இது? உனக்கு என்ன ஆயிற்று? பெருக்கல், சமம் என்று சொல்லாமல், சாதாரணமாக மற்றவர்கள் வாய்ப்பாடு சொல்வது போல் சொல்" என்றார் ஆசிரியை.

"அப்படிச் சொல்ல வராது, மேடம்! எண்களுக்கு நடுவே இருக்கும் குறிகள் கூட்டலா, கழித்தலா, பெருக்கலா, வகுத்தலா அல்லது சமமா என்பதை உணர்ந்து தான் என்னால் வாய்ப்பாடு சொல்ல இயலும்."

"இயலுமா?!"

"இயலும்."

மாணவியர் சிரிப்பு.

"ரேவதி, உனக்கு என்ன நேர்ந்தது?"

"நான் ரோபோ ஆகி விட்டேன்."

"என்னது?"

"நான் ரோபோ ஆகி விட்டேன்."

வகுப்பில் ஓசையின்மை. ஆசிரியையும், மாணவியரும் வியப்புடன் அவளை நோக்கினர்.

"உட்கார்."

அவள் உட்காரவில்லை. வெறித்து நோக்கியபடி நின்றாள்.

"ரேவதி, உன்னைத்தான், உட்கார்."

உட்கார்ந்தாள்.

கணித நேரம் முடிந்ததும், ஆசிரியை ரேவதியைத் தலைமை ஆசிரியை அறைக்கு அழைத்துச் சென்றார்.



"என்ன?" என்று கேட்டார் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார் தலைமை ஆசிரியை.

"இவள் பெயர் ரேவதி. நான்காம் வகுப்பு மாணவி. தான் ரோபோ ஆகி விட்டதாகச் சொல்கிறாள்" என்று ஆசிரியை தலைமை ஆசிரியைப் பார்த்துச் சொன்னார்.

"அப்படியா!" ரேவதியைப் பார்த்து வியப்புடன் கேட்டார் தலைமை ஆசிரியை.

ரேவதி பதில் சொல்லவில்லை.

"தலைமை ஆசிரியை கேட்கிறார் அல்லவா? பதில் சொல் ரேவதி."

"என்ன கேள்வி?" கரகரத்த கிணு கிணுக்கும் குரல்.

தலைமை ஆசிரியையும், ஆசிரியையும் தங்களுக்குள் பார்த்துக் கொண்டனர்.

"நீ ரோபோவாகி விட்டாயா?"

பதிலில்லை.

"ரேவதி, நீ ரோபோ ஆகி விட்டாயா?"

"ஆமாம்."

"எதையுமே இரு தடவை கேட்டால் தான் பதில் சொல்வாயா?"

பதிலில்லை.

"ரேவதி, எதையும்மே இரு தடவை கேட்டால்தான் பதில் சொல்வாயா?" தலைமை ஆசிரியை மீண்டும் கேட்டார்.

"அப்படி இல்லை, மேடம்! ரேவதி என்பதாக என் பெயரை விளித்துக் கேட்டால்தான், என் செல்கள் இயங்கி நான் பதில் சொல்ல முடியும்."

"நீ மனித இனம் இல்லையா, ரோபோவா... உம்... ரேவதி?"

"இரண்டும்தான். எனக்கு உணர்ச்சி இருக்கிறது. அறிவு உண்டு. என்னால் சிந்திக்க முடியும்."

"இந்த நிலையில், பள்ளியில் நீ பிரச்னை ஏற்படுத்துவாய் என்று பயப்படுகிறேன், ரேவதி!"

"அச்சமுறத் தேவை இல்லை. என்னால் எந்தப் பிரச்னையும் ஏற்படாது. தேவையானால் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் நான் உங்களுக்கு உதவுவேன்."

தலைமை ஆசிரியை ஆசிரியையை நோக்கினார். "அழைத்துப் போங்க" என்றார்.

**வ**குப்பு நேரத்துக்குப் பிறகு மாணவியர் ரேவதியைச் சூழ்ந்து கொண்டனர்.

"ரேவதி, உனக்கு என்ன ஆச்சு?" ஒருத்தி கேட்டாள்.

"நான் ரோபோ ஆகி விட்டேன்."

"எப்படி ரோபோ ஆனாய், ரேவதி?"

"கம்ப்யூட்டரில் ரோபோவுடன் விளையாடியதில் ரோபோ ஆகி விட்டேன்."

"ரோபோன்னா என்ன?"

ரேவதியிடமிருந்து பதில் இல்லை.

"ரேவதி, ரோபோன்னா என்ன?"

"ரோபோ என்றால், என் மூளை கம்ப்யூட்டராக வேலை செய்கிறது என்பது பொருள்."

"ஏன் நீ செந்தமிழில் பேசுகிறாய், ரேவதி?"

"நான் பொறி. அதாவது யந்திரம். எனக்குக் கொச்சையாகப் பேச வராது. என் மூளையிலுள்ள கீ போர்டு தமிழ், ஆங்கில எழுத்துக்களையும் ரோமன் எண்களையும் கொண்டுள்ளது. ஆகவே நல்ல மொழியில்தான் பேச முடியும்" கரகர, கிணுகிணு குரலில் அவள் உணர்ச்சியற்றுப் பேசிய மாணவியருக்கு வேடிக்கையாக இருந்தது.

"ரேவதி, நான் ஒரு ஜோக் சொன்னால், நீ சிரிப்பியா?"

"சிரிக்க மாட்டேன்."

"ரேவதி, உனக்கு அழுகை வருமா?"

"எனக்கு அழுகை வராது."

"ரேவதி, நீ கோபித்துக் கொள்ளுவியா?"

"கோபிக்க மாட்டேன். சினம் என் இயல்பு அல்ல."

"ரேவதி, உனக்கு எல்லாம் தெரியுமா?"

"எல்லாம் தெரியும் என்பது இல்லை. தெரியாதனவும் ஏராளமாக உண்டு. 'கற்றது கை மண் அளவு, கல்லாதது உலகு அளவு என்று உற்ற கலை மடந்தை ஓதுகிறாள்.' இந்த ரோபோ ரேவதி எந்த அளவுக்கு! 'ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்' போயத்தைப் பதினாறு ராகங்களில் என்னால் பாட முடியும்."

"எங்கே பாடு ரேவதி!"

பாடிக் காண்பித்தாள். அதில் ஒன்று வேதமந்திரங்கள் சொல்வது போல இருந்தது.

மாணவியர் சிரித்தனர்.

"கதை சொல்லுவியா, ரேவதி?"

"சொல்வேன்."

"சரி, ஒரு கதை சொல்லேன், ரேவதி!"

"என்ன கதை வேண்டும்?"

"குருவிக் கதை, ரேவதி!"

"ஒரே ஓர் ஊரில் ஒரு குருவி இருந்தது. அது குப்பையைக் குப்பையைத் தோண்டியது. அக்குப்பையில் ஓர் அரிசி கிடைத்தது. அந்த அரிசியை எடுத்துப் போய் அம்மையார் பாட்டியிடம் கொடுத்து, 'பாட்டி, பாட்டி! இந்த அரிசியை வைத்துக் கொண்டு எனக்குப் பாயசம் பண்ணிக் கொடுங்கள்' என்றது குருவி. பாட்டியும் குருவியிடம், 'சரி, பாயசம் பண்ணி வைத்திருக்கிறேன், நீ போய்க் குளித்து விட்டு வா' என்றாள்."

"போதும், போதும் கதை."

"குருவி சென்று குளித்து விட்டு..."

"ரேவதி, கதை போதும்" கத்தினாள் அந்த மாணவி.

நிறுத்தப்பட்ட டேப்-ரிக்கார்டராக

"சே...! 95-ஆம் வருஷம் பிறந்ததே சரியில்லைடா."

"ஏன்டா...?"

"ஞாயிற்றுக்கிழமையில வருஷம் பிறந்து நம்ம லீவைக் கெடுத்துடுச்சே!"

\- சீர்காழி வி. ரேவதி



கதை சொல்வதை நிறுத்தினாள்.

**மா**லை பள்ளி விட்டதும் வீடு சென்றாள். சீருடைகளைக் களைந்து விட்டு மாற்றுடை அணிந்தாள்.

"ரேவதி, வா, போர்ன்விடா குடிச்சிட்டுப் போ."

சென்று நின்று அருந்தினாள்.

"வீட்டுப் பாடம் செய்ய உட்கார். விளையாடப் போயிடாதே."

பதிலில்லை. வெறித்துப் பார்த்தபடி நின்றாள்.

"ரேவதி, உங்கிட்டத்தான் சொல்றேன். எங்கேயோ பார்த்திட்டு நிக்கறியே?"

"எங்கோ பார்த்துக் கொண்டு நிற்கவில்லை. நீங்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டுதான் நிற்கிறேன். 'மாலை முழுதும் விளையாட்டு' என்று பாரதியார் பாப்பா பாட்டில் சொல்லி இருக்கிறார்."

"என்ன விளையாட்டு விளையாடப் போறே?"

"கம்ப்யூட்டர் ரோபோவுடன் விளையாடப் போகிறேன்."

"அதான் வேண்டாங்கறேன். கம்ப்யூட்டரில் விளையாடி விளையாடித்தான் இப்போ நீ அந்த ரோபோ மாதிரியே மாறிட்டே. வேணாம். போய் வீட்டுப் பாடத்தைச் செய்."

ரேவதி திரும்பி நடந்தாள்.

"ரேவதி!" அம்மா சற்றுக் கடுமையான குரலில் அழைத்தாள்.

முகம் திருப்பிப் பார்த்தபடி நடந்து கொண்டே இருந்தாள்.

"நில்"

நின்றாள்.


"இந்த விளையாட்டு போதும். நீ ரோபோ இல்லை. பெண். ஒரு பெண் மாதிரி நடந்துக்க. பெண் மாதிரி பேசு. உன்னை ரோபோன்னு நினைச்சுக்காதே."

"நினைத்துக் கொள்ளவில்லை, தாயே! நான் ரோபோவாகவே ஆகி விட்டேன்."

"ஆகவில்லை என்று நினைத்துக் கொள். வெறிச்சுப் பார்க்காதே. யந்திரமா நடக்காதே. கரகரத்த குரல்லே பேசாதே. அப்பா வந்ததும் டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போகச் சொல்றேன்."

நட்டகல்லாக நின்றாள் ரேவதி.

"சரி, போ. போய் ஒரு இடத்துலே உட்காரு."



"உன் பெயர் என்னப்பா?"
"அடைக்கலசாமிங்க."
"பேங்க் கடனை அடைச்சுட்டியா?"
"'அடைக்கல' சாமி!"
??!!

- நா. சுவாமிநாதன்

நகர்ந்தாள். "ஒரு இடம் என்று சொல்லாதீர், தாயே! இலக்கண வழு அது. ஓர் இடம் என்று சொல்லுங்கள்."

**அ**ப்பாவும், அம்மாவும் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். படுக்கப் போகும் முன் ரேவதி அப்பா அருகில் நின்று ஆட்டத்தைக் கவனித்தாள். அம்மா சட்சட்டென்று படைகளை நகர்த்த, அப்பா நகர்த்துவதற்கு நேரம் எடுத்துக் கொண்டார். ஒரு சந்தர்ப்பத்தில் ரேவதி இடையில் குறுக்கிட்டு அப்பாவிடம் சொன்னாள், "நைட்டை ருக்சிக்ஸ்ஸுக்கு நகர்த்தி செக் சொல்லுங்கள், அப்பா!"

"நகர்த்தினால், அம்மா பிஷப்பால் வெட்டுவாளே!"

"அப்போது பானை நகர்த்தினால், ஆட்டம் முடிந்துவிடும்."

வியப்போடு மகளைப் பார்த்து விட்டு, அப்பா அவள் சொன்னபடி குதிரையை வைத்தார். அம்மா திகைத்தாள். "இந்த ரோபோ சொல்லிக் கொடுக்கிறான். நான் விளையாடலே" என்று சொல்லி ரேவதியின் கன்னத்தைக் கிள்ளி விட்டு சதுரங்க அட்டையைக் கவிழ்த்துப் போட்டு விட்டு, அம்மா அகன்றாள்.

"என்னம்மா இப்படிக் கிள்ளறே! எனக்கு வலிக்கிறது" என்று கூறிக் கொண்டே படுக்கையில் இருந்து எழுந்தாள் ரேவதி.

அப்படியானால் அதுவரை கண்டது எல்லாம் இனிமையான கனவா! எல்லாம் இந்த ரோபோவுடன் ஈடுபாடு கொண்டதால் வந்த வினை! இனிமேல் இப்படி இருக்கக் கூடாது என்ற முடிவுடன் எழுந்தாள் ரேவதி.

# கேளுங்கள் சொல்லப்படும்

○ சிறுவர் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவரான அமரர் தி.ஜ.ர. சிறுவர் பத்திரிகை நடத்துவதைப் பற்றி வழிகாட்டி நூல் ஏதும் எழுதியிருக்கிறாரா? - *தா. ராஜமாணிக்கம், சிம்மக்கல்.*

நீங்கள் கேட்டுள்ளது புதிய செய்தி. நான் அறிந்தவரை தி.ஜ.ர. அவர்கள் இப்படி ஒரு வழிகாட்டி நூலை எழுதியுள்ளதாகத் தகவல் இல்லை. ஆனால், அவர் 'சக்தி' என்ற மாத இதழின் ஆசிரியராக இருந்த போது "எங்கள் தொழில் - பத்திரிகாசிரியர்" என்ற தலைப்பில் கலைமகள் மாத இதழில் (செப்டெம்பர் மற்றும் அக்டோபர் 1943). தொடர் கட்டுரை வெளியிட்டார். இது நூலாக வெளிவந்ததாகத் தெரியவில்லை.

○ *டால்பின்களால் மட்டும்தான் நாம் பேசுவதைப் புரிந்து கொள்ள முடியுமா? மற்ற விலங்குகளுக்கு அந்த ஆற்றல் இல்லையா? - சா. கல்ஹூர் ரஹ்மான், பரங்கிப்பேட்டை.*

பழக்கப்படுத்தினால் நாம் பேசுவதை விலங்குகளுக்குப் புரியவைக்க முடியும் என்பதை மிஸ்ஃபார்ஃப் (MISS FARFF) என்ற விலங்கு அபிமானி நிரூபித்துக் காட்டியுள்ளார். இவர் பழக்கிய சீல் 35 சொற்களையும், எலி ஆறு சொற்களையும், அணில் 5





சொற்களையும் புரிந்து கொண்டு நடந்து கொண்டனவாம். ஆனால், இவையெல்லாமே ஒரு சாதனைக்காகத்தானே தவிர, பொது விதி என்று எடுத்துக் கொள்ள இயலாது.

○ *உவர்நிலம் களர் நிலம் இரண்டும் ஒன்றுதானா? இதற்குப் பொருள் என்ன? - கு. நடராஜ் தம்பி, விக்கிரவாண்டி.*

உப்புத்தன்மை ஏறிய மண் நிறைந்த நிலம் என்பது பொருள். இதில் எதையும் விளைவிக்க முடியாது. அறிவியல் வளர்ச்சி காரணமாக இப்பொழுது இதையும் விளை நிலமாக மாற்றிப் பயிரிடுகிறார்கள். உவர் நிலம், களர்நிலம் இரண்டும் ஒன்றே.


○ *ஒரு முடியை இழந்து விட்டாலும் உயிரிழந்து விடும் என்று நம் இலக்கியங்கள் கூறும் 'கவரிமான்' இப்பொழுது இருக்கிறதா? எங்கு அதைக் காணலாம்? - வா. ஸ்ரேஷ்டா, திருவரங்கம்.*

இதை இலக்கியங்களில் மட்டுமே காணலாம். இப்பொழுது இல்லை. நேபாளம், திபெத் போன்ற இமயமலைப் பகுதிகளில் முடி அடர்ந்த ஒருவகை மான் இனம் இருக்கிறது. இதை ஆங்கிலத்தில் யாக் (YAK) என்கிறார்கள். இதுவே "கவரிமான்" என்று




பானங்களை அருந்தப் பயன் படுத்தும் "ஸ்டிரா" என்ற உறிஞ்சு குழல் பற்றி நமது முன்னோர் கள் அறிந்திருந்தனரா? - தா. திருமகள் செல்வன், காரைக்கால் - 2.

இப்பொழுது நாம் பயன்படுத்தும் "ஸ்ட்ரா" இருபதாம் நூற்றாண்டின் அன்பளிப்பே. ஆனால், இதுபோன்ற ஓர் ஓட்டை உள்ள குச்சி இருந்தால் உறிஞ்சிக் குடிக்கப் பயன் படும் என்பதை நம் முன்னோர் அறிந்திருந் தனர். கம்பராமாயணத்தில் "ஊன்றிய கழுநீர் நாளத் தாளினால் ஒருத்தி உண்டாள்" (உண் டாட்டுப் படலம்) என்று வரும் பாடலில், "கழுநீர் நாளத்தாள்" என்று குறிப்பிடப்படுவது




# சேரநம்பி

சிலர் குறிப்பிட்டாலும் இதன் இயல்புகள் பொருத்தமாக இல்லை.

○ ஈயம்பூசுவதற்குப் பயன்படுத்தப் படும் உலோகம் ஈயம்தானே? - வி. சந் திரிகா, மாயூரம்.

ஈயம்பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் கலப்பு உலோகப் பூச்சின் பெயர் வெள் ளீயம்.

○ வெள்ளை யானை ஒன்று பர்மா வில் இருப்பதாகச் செய்தியைப் படித் தேனே? இது உண்மையாக இருக்குமா? நம் நாட்டில் ஏன் வெள்ளை யானை இல்லை? - கு. சாந்தி, வெட்டவலம்.

நானும் இந்தச் செய்தியைப் படித்தேன். இதற்கு வெள்ளை உடல் வண்ணம் எப்படி ஏற்பட்டது என்பது ஆராய்வதற்கு உரியது. வெளிர் தன்மை காரணமாகவும் இப்படி ஏற் படுவது உண்டு. காகங்களில் கூட "வெள் ளைக் காகங்கள்" என்று நாம் குறிப்பிடுவது இதைத்தான். இதன் வாரிசுகளும் இப்படி வெள்ளையாகப் பிறந்து, இவற்றின் "நிறமிகள்" மற்ற கருப்புக் காகம், கறுப்பு யானைகளில் இருந்து மாறுபட்டதாக இருப்பின் அதற்குப் பிறகே இதைத் தனி வெள்ளை இனம் என்று ஏற்கலாம். இல் லையேல் இது வெளுத்துப் போன யானைதான்! ஆராய்ச்சியாளர்களே இதற்குப் பதில் கூறலாம்.

○ இப்பொழுது நாம் பாட்டில்

ஓட்டை உள்ள தாமரையின் தண்டு. இதை வைத்து உறிஞ்சிக் குடித்தார்களாம்.

○ *புழுக்களுக்குக் கண்களோ, காதுகளோ இல்லை என்பது உண்மைதானா? - மா. சின்னிக்குட்டி, கருங்கல்பாளையம்.*

உண்மைதான். மிக நுண்ணிய அதிர்வுகள், ஒளி ஆகியவையே இவைகளை நெளிய வைக்கின்றன.

○ *மகா அலெக்சாண்டரின் குதிரையின் பெயர் என்ன? - தா. ஹாலாஸ்யம், திருக்கடவூர்.*


புசிபலாஸ் (BUCEPHALUS) என்பதுதான் அலெக்சாண்டரின் குதிரையின் பெயர்.

○ *நீருக்கடியில் உள்ள ஒரு நாணயத்தைப் பார்த்தால், மிக அருகில் இருப்பதைப் போன்ற ஒரு தோற்றம் ஏற்படுகிறதே! இது எப்படி? - மா. அடைக்கலாம், தம்மம்பட்டி.*

நிலத்தில் உள்ள பொருள்களைக் காணும் போது நம் பார்வை நேராக வளைசல் இன்றி ... னால் நீருக்கடியில் நம் பார்வை செல்லும் ... விடுகிறது. இதன் விளைவாகவே நீரில் உள்ளகாசு மேலாக இருப்பது போல் ஒரு மாயத் தோற்றத்தைத் தருகிறது.

○ *வெப்பக் காற்று அடைக்கப்பட்ட பலூன் மட்டும் அதிக உயரத்தில் எளிதாகப் பறக்கிறதே! இது ஏன்? - மா. பரசுராமன், கோவை.*

காற்றை சூடாக்கினால், அது விரிவடைகிறது; இலேசாகிறது. இதுவே பலூனை உயரே செல்ல வைக்கிறது. உயரே பறக்கும் பலூன்களில் பெரும்பானவை வெப்ப மூட்டப்பட்டவையே.




○ *சோனார் டிடெக்ஷன் (SONAR DETECTION) என்பது என்ன? - மு. தங்கபாண்டி, சாத்தூர்.*

நீருக்கடியில் உள்ளவைகளைப் பற்றி அறியும் முறையே சோனார் டிடெக்ஷன். கிட்டத்தட்ட ரேடார் மாதிரி. ஆனால் இதில் ரேடியோ அலைகளைப் பயன்படுத்துவது இல்லை. ஒலி அலைகளையே பயன்படுத்துகிறார்கள்.

கேளுங்கள் சொல்லப்படும் பகுதியில் கேள்வி கேட்போர் ஒரு கார்டில் ஒரு கேள்வியை மட்டும் தான் எழுத வேண்டும். கேள்வி கேட்போர் தங்கள் முழு முகவரியையும் அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி : 'கேளுங்கள் சொல்லப்படும்', கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

*** காலிக் குடத்தைத் தட்டினால் பெரிய சத்தம் கேட்கிறது. அதே குடத்தில் நீரை நிரப்பித் தட்டினால் அந்த அளவுக்கு சத்தம் கேட்பதில்லையே! ஏன்? —சு.மாணிக்கம், எதிராஜபுரம்.**

காலிக் குடத்தின் உள்ளே காற்று இருக்கிறது. வெளியே தட்டினால் இது அதிர்ந்து அதிர்வலைகளால் உள்ளேயும் சத்தத்தை எதிரொலிக்க வைக்கிறது. குடத்தில் நீரை நிரப்பித் தட்டினால், உள்ளே ஏற்படும் அதிர்வலைகளால் இந்த அளவுக்கு சத்தத்தை எதிரொலிக்க வைக்க இயலாது. இதுவே காரணம்.

*** டெல்லியில் உள்ள நேஷனல் மியூசியம் எப்பொழுது தொடங்கப்பட்டது? —சு.தேவிபிரசாத், பண்ருட்டி.**

1947ஆம் ஆண்டு லண்டனில் ராயல் அகடமி நடத்திய கலைக் கண்காட்சிக்கு, அற்புதமான பல கலைப் பொருள்களைத் திரட்டி சுதேச மன்னர்களும், பிரபுக்களும், கலை அன்பர்களும் அனுப்பிவைத்தார்கள். சில ஆண்டுகளுக்குப்பின் இவை திரும்பி வந்ததும், இவைகளை ஒரே இடத்தில்




வைத்து மக்கள் எல்லோரும் காணும்படி செய்ய வேண்டும் என்ற ஆவல் அரசுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக எழுந்ததே நேஷனல் மியூசியம். இதற்கான அடிக்கல்லை நேருஜி 1955 ஆம் ஆண்டு மே 12ஆம் நாள் நிறுவினார்.

*** ஒரு யுகம் என்பது காலக் கணக்கில் எத்தனை ஆண்டுகள்! இதற்கு என்ன ஆதாரம்? —த.தாமோதரன், வேலூர்-2.**


ஒரு யுகம் என்பது 43,20,000 ஆண்டுகள் என்கிறது ஆரியபட்டர் இயற்றிய ஆரியபட்டீயம் என்ற நூல். பின் வந்தவர்களும் இதையே உறுதிப்படுத்தியுள்ளனர்.


*** எல்லா நாடுகளுமே துக்கத்தை வெளிப்படுத்த கறுப்பு வண்ணத்தைத்தான் பயன்படுத்துகின்றனவா? — கு. அடைக்கலம், கொத்தமங்கலம்.**

இல்லை. சீனாவில் வெள்ளையும், துருக்கியில் நீலமும், எகிப்தில் மஞ்சள் வண்ணமும் துக்கத்தை வெளிப்படுத்தும் வண்ணங்கள்.

# தனித்திருப்பது எது?

## போட்டி





## தனித்திருப்பது எது? - போட்டி

இங்கே உள்ள பத்துப் பொருள்களையும் பாருங்கள். இவைகளுக்குள் உள்ள பொது வான ஒற்றுமை என்ன என்பதை எழுதுங்கள். அதோடு, இவைகளில் ஒன்று மட்டும் மாறுபட்டு உள்ளதைக் கண்டு பிடித்து, அது எந்த வகையில் என்பதற்கான காரணத்தையும் எழுதுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் நண்பர் அல்லது உறவினரின் இந்திய முகவரியைத் தர வேண்டும். கூப்பனில்லாது வருபவை ஏற்கப்பட மாட்டா. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

தனித்திருப்பது எது? – போட்டி

பெயர் : .............................. வயது : ......

முகவரி : ..........................................

..................................................

பின்கோடு : ......................................

**முடிவு தேதி : 30.4.95**

பொதுவான ஒற்றுமை..............................

தனித்திருப்பது ...................................

காரணம்..........................................

# ராமு வா!

ராமு பள்ளி மாணவன். அவனுக்கு ஒரு கெட்ட குணம் உண்டு. அடுத்தவர்கள் துன்பப் படுவதைக் கண்டு, மகிழ்ச்சி அடைவான். தினமும் யாராவது ஒருவர் துன்பப்பட வேண்டும். அதைக் கண்டு ரசிக்க வேண்டும். இதுதான் ராமுவின் இலட்சியம். எவரும் துன்பப்படாவிட்டால் யாரையாவது இவனே துன்பப்படுத்திச் சிரித்து மகிழ்வான்.

அப்படித்தான் ஒருநாள், பள்ளிக்கூட வாசலில் முள்ளைப் போட்டு வைத்து ஒளிந்து கொண்டான் ராமு. பள்ளியில் பெல் அடித்த அவசரத்தில் ஓடி வந்த மாணவர்கள் முள்களைக் கவனிக்கவில்லை. முள் மேல் மிதித்து, முள் குத்திய மாணவர்கள் வலியால் துடிப்பதை மறைந்திருந்து பார்த்துக் கைதட்டி ரசித்தான் ராமு!



ஒருமுறை ஆற்றிலிருந்த நண்டை ஒரு டப்பாவில் பிடித்து வந்து வகுப்பில் கண்ணனுடைய புத்தகப் பையில் போட்டு விட்டு அமைதியாக இருந்தான். வகுப்பு ஆரம்பமானதும் பைக்குள் கையை விட்ட கண்ணனின் விரல்களை நண்டு கடிக்க, கண்ணன் வேதனையில் அலற, ராமுவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாமல் போய் விட்டது. பெற்றார் என்ன கண்டித்தும் அவன் மாறவில்லை.

அன்று ராமுவிற்கு ஒரு தேள் கிடைத்தது. காலித் தீப்பெட்டியில் அதைப் பிடித்து பள்ளிக்கு எடுத்து வந்தான். சாக்பீஸ் இருந்த பெட்டியைப் பார்த்ததும் தீப்பெட்டியைத் திறந்து தேளைப் போட்டு விட்டான். 'யார் இன்று தேள் கடிப்படப் போகிறார்களோ?' என்று ஆவலாகக் காத்திருந்தான்.

தினமும் ஒரு மாணவன் சாக்பீஸை எடுத்து கரும்பலகையில் அன்றைய கிழமை, தேதியை எழுத வேண்டும். ஆசிரியர் வந்தார். 'யாரையாவது சீக்கிரம் எடுக்கச் சொல்லுங்க சார்...' என மனதுக்குள் கூறிக் கொண்டான் ராமு.

ஆசிரியர் மாணவர்களைப் பார்த்தார். "ராமு வா...! வந்து கரும் பலகையில் இன்றைய தேதி, கிழமையை எழுது" என்று தன்னையே கூப்பிட்டதும் அதிர்ந்து போனான் ராமு.

"ஐயோ, என்னையே எடுக்கச் சொல்கிறாரே! எடுத்தால் தேள் கடிக்குமே! இப்போது சாக்பீஸ் எடுத்து எழுதாவிட்டால், ஆசிரியர் சந்தேகப் படுவார். சாக்பீஸ் எடுத்தால் தேள் கொட்டும். ஐயோ, நான் செய்தது எனக்கே வந்து விட்டதே! அடுத்தவர் துன்புறும் போது, நாம் சிரித்தது எவ்வளவு முட்டாள்தனம்? எவ்வளவு பெரிய கொடுமை...! அவர்கள் எப்படித் துடித்திருப்பார்கள்? கடவுளே, நான் இதுவரை செய்து வந்த காட்டு மிராண்டித்தனத்திற்கு, என்னை மன்னித்து விடு. இனிமேல் நல்ல ராமுவாய், அடுத்தவரைத் துன்புறுத்தாமல் அவர்கள் துன்பத்தைக் கண்டு, உதவும் ராமுவாய் இருப்பேன். என்னை மன்னித்து விடு" என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டு நிற்கையில் ஆசிரியர் அவசரப் படுத்தினார்.

ராமுவின் கண்களில் நீர் பெருகியது. ராமு அழுததைப் பார்த்ததும் ஆசிரியர் திகைத்தார். ராமு அழுது கொண்டே காரணத்தைக் கூறினான். மன்னிப்புக் கேட்டான். இப்பொழு தெல்லாம் ராமு யாரையும் துன்புறுத்துவது இல்லை.

**எஸ்.ஜின்னா**

ஓய்வு நேரங்களில் 'நாமு'வின் அம்மா அவனுக்கு நல்ல கதைகளைச் சொல்வாள். கூடவே, நன்னெறிகளையும், எடுத்துக் கூறுவாள்.

ஒருநாள், "நாமு! நம் உடலில் உயிர் இருக்கிறதைப் போல், மிருகங்கள், பறவைகள், செடி-கொடிகள் எல்லாவற்றின் உடலிலும் உயிர் இருக்கிறது. ஆகவே, உயிருள்ள எதனுடைய மனமும் துக்கப்படும்படியான செயல் எதையும் ஒருபோதும் நீ செய்யக் கூடாது" என்றாள் அம்மா.

அம்மாவின் இந்தக் கருத்துக்கு நாமுவிடம் நல்ல பலன் இருந்தது. பெரியவனானதும் எந்த ஒரு பிராணியையும் துன்புறுத்தக் கூடாது என்று அவன் மனதுக்குள் நிச்சயித்துக் கொண்டான்.

சில நாட்களாயின. அவன் அம்மாவின் கை-கால்களில் அரிப்பு நோய் ஏற்பட்டது. நாட்டு வைத்தியர் ஒரு மருந்து சொன்னார். அதைத் தயாரிக்கப் பல

# மரத்திற்கு வலிக்குமா?



வித மூலிகைகள் தேவைப்பட்டன. அவற்றில் ஒன்று பலாச மரத்தின் ஈரமுள்ள பட்டை.

அவர்கள் ஊருக்கு அருகில் ஓர் அடர்ந்த காடு. "காட்டுக்குப் போய், பலாச மரத்தின் ஈரப்பட்டையைக் கொஞ்சம் செதுக்கி எடுத்துவா..." என்று கோடலியைக் கொடுத்து அனுப்பினாள் அம்மா.

நாமு ஐந்தாறு பலாச மரத்தின் பட்டைகளைச் செதுக்கிச் சேகரித்தான். ஒவ்வொரு மரத்திலும் பட்டையைச் செதுக்கும்போதும் அவன் மனம் நடுநடுங்கியது. 'நமக்கு உயிர் இருப்பது போன்று இந்த மரங்களுக்கும் உயிர் இருப்பதாக அம்மா சொன்னார்களே... இப்போது அவர்களே மரத்தைக் கோடலியால் செதுக்கிப் பட்டையைக் கொண்டுவா என்கிறார்களே! இது நியாயமா? இந்த மரங்கள் நமக்கு எந்தத் தீமையும் செய்யவில்லையே... அப்படியிருக்க, நாம் ஏன் அதைக் கோடலியால் செதுக்கித் துன்பப்படுத்துகிறோம்...? நமக்கு வலிப்பது போல் தானே, இவைகளுக்கும் வலிக்கும்? இப்படி அவன் மனதுக்குள் ஆயிரம் கேள்விகள் எழுந்தன. மனம் வேதனைப்பட்டது.

நாமு மரப்பட்டைகளைக் கொண்டு போய்க் கொடுத்தான். அம்மா கஷாயம் செய்து, பூசினாள். அரிப்பு குணமாகி விட்டது.

நாட்கள் நகர்ந்தன.

ஒரு நாள், நாமு நொண்டி நொண்டி வீட்டுக்கு நடந்து வந்தான். அம்மா திடுக்கிட்டாள். அவன் வேட்டியில் அங்குமிங்குமாக ரத்தக் கறை காணப்பட்டது.

---

**ஜானகிமணாளன்**

---



அவள் பதறிப் போனாள். "ஏன்டா இப்படி நொண்டுகிறாய்? என்ன ஆயிற்று உனக்கு...? எங்கேயாவது விழுந்து விட்டாயா?"

நாமு சிரித்துக் கொண்டே சொன்னான். "இல்லை அம்மா இல்லை... எனக்கு எந்த இடத்திலும் அடிபடவில்லை..''

"பிறகு ஏன் நொண்டுகிறாய்...? ரத்தக் கறை எப்படி ஏற்பட்டது?"

"நம் உடம்பில் கிறல் ஏற்பட்டால், நமக்கு எப்படி வலிக்கும் என்பதை உணர, நானே என் காலில் கிறிப் பார்த்துக் கொண்டேன்..." என்றான் நாமு.

''முட்டாள் தனமா இருக்கே! வலியை உணர வேண்டிய அவசியம் உனக்கு என்ன?"


நாமு நிதானமாகச் சொன்னான். "அம்மா! நீ அன்றொரு நாள் பலாச மரப்பட்டை செதுக்கிவரச் சொன்னாய் அல்லவா? நான் போய்ச் செதுக்கி வந்து விட்டேன். ஆனால், அப்போது என் மனம் என்ன சொன்னது தெரியுமா? 'நாமு! காரணம் இல்லாமல் பலாச மரத்தை இப்படிக் கொத்தித்துன் புறத்துகிறாயே? அதுவும் உயிருள்ள ஜீவன் தானே...? அதற்கு எப்படி வலித்திருக்கும்?' என்று என் மனம் வேதனைப் பட்டது அம்மா...'' என்றான் நாமு.

"அது மரம் தானேடா! அதுக்கு வலிக்குமான்னு பார்க்க இப்படியா உன்னை வெட்டிக்கிறது! எல்லா ஜீவராசிகளிடமும் இரக்க உணர்வு கொள்வது அவசியம்தான். அத்துடன் நீயும் உன் கை கால்களைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ள வேண்டாமா?" என்றாள் அம்மா ஆதங்கத்துடன்.


"இருந்தாலும், என்னால் தானே அந்த மரத்துக்குத் துன்பம் ஏற்பட்டது...? அதே துன்பம் எனக்கு வந்தால் எப்படி இருக்கும் என்பதை அறியவே எனக்கு நானே கிறிப் பார்த்துக் கொண்டேன்..." என்றான் நாமு.


மகனின் இரக்க சுபாவம் கண்டு தாய் பூரித்துப் போனாள். ''சரி வா... காயத்துக்கு மருந்து தடவி விடுகிறேன்..." என்று அவள் அவனை உள்ளே அழைத்துச் சென்றாள்.

நாமு என்ற அந்தச் சிறுவன் யார் தெரியுமா? பிற்காலத்தில், மிருகங்கள்-பட்சிகள் செடிகொடிகள் போன்ற எல்லாவற்றினிடமும் அன்பு காட்டி அவற்றின் நலனுக்காகத் தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த துறவி 'நாம தேவர்'தான் அந்தச் சிறுவன்.



"நேற்று கணக்கு தப்பா போட்ட துக்குத்தான் 25-முறை இம்போசிஷன் செய்துட்டியே? இன்னைக்கு ஏன் மறுபடியும் அதே கணக்கை போடறே?"
"நேற்று சரியா எண்ணாமல் 25க்கு 24-தடவைதான் இம்போசிஷன் செய் திருக்கேன்...!"
-சீர்காழி வி. ரேவதி.
"சிரிச்சா இப்படியாங்க அடிபடும்."
"ஆமாம் நான் சிரிச்சது விழுந்து. விழுந்து."
—எஸ்.தட்சணா மூர்த்தி
"உங்க பையன் ரொம்ப மெதுவா நடப்பானே? இப்ப என்ன பண்றான்?
"ரோடு ரோலர் ஓட்டறான்!"
—பி. ஞான மூர்த்தி
"அந்த பாகவதர் பாட்டுப்பாட ஆரம்பிச்சதும் ஏகப்பட்ட சுண்டெலி வர ஆரம்பிச்சிடிச்சு."
"அவரோட பாட்டுக்கு (மவுசு) MOUSE வந்துடிச்சுன்னு சொல்லு...?"
—சீர்காழி வி.ரேவதி
சிரிப்பு...


FOOD!
FAST FOOD!
All about popular Fast Foods
GOKULAM
The monthly magazine for children
APRIL '95 ISSUE!
96 pages for just Rs. 5!
GOKULAM, Ekkaduthangal, Madras - 600 097.
MILK
YOGURT



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை.



# எனக்கு அடிமை!

பள்ளியில் உணவு இடைவேளை. மாணவர்கள் ஆங்காங்கே அமர்ந்து தாங்கள் கொண்டுவந்த உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கோபுவும் தன் நண்பர்களோடு ஒரு மரத்தடியில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"டேய் கோபு, நேத்து டீ.வி.யில் படம் பார்த்தியாடா? சூப்பர் சண்டை இல்ல?" –சீனு சுவாரசியமாகக் கேட்டான். கோபு பதில் கூறு முன் மற்ற நண்பர்கள், "ஆமாண்டா. கடைசில, அந்தப் புலிய ஹீரோ அப்படியே தூக்கிப் போடுவாரே, அது தாண்டா படு சூப்பர்!" என்று ஆமோதித்தனர்.

கோபு அவர்கள் பேசுவதை ஏக்கத்தோடு கேட்டுக் கொண்டிருந்தான். அவன் வீட்டில்தான் டீ.வி.யே இல்லையே? அவனுக்குள் அந்த ஏக்கம். மரம் போல் பெரிதாக வளர்ந்திருந்தது. மற்ற நண்பர்கள் டீ.வி. பற்றிப் பேசும்போதே இவ்வளவு சுவாரசியமாக இருக்கிறதே! இன்னும் டீ.வியைப் பார்த்தால் எப்படி இருக்கும்? கோபுவின் வீட்டில் டீ.வி. இல்லை. அதோடு அவன் பெற்றோர் அவனை எங்குமே டீ.வி. பார்க்கவும் விடுவதில்லை? எப்பப் பாரு 'படி, படி' என்று விரட்டல்தான்!' கோபு தவித்தான்.

கோபுவின் தந்தை சுந்தரம் ஓர் அரசு அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தார். அவர்

**கடலூர் கி.கணேஷ்ராம்**

நினைத்தால் அந்தப் பதவியில் வரும் லஞ்சத்தில் குபேரனாகியிருக்கலாம். ஆனால், அவரது நேர்மை அவரைத் தடுத்தது. சம்பளம் குறைவு. கோபுவின் தாய், தையல் போன்ற வேலைகளைச் செய்து சம்பாதித்தாள். அப்படி உழைத்தால்தான் கோபுவின் பாட்டி, மற்றும் அத்தை என்று அவர்களுடன் சேர்ந்த பெரிய குடும்பத்தைப் பராமரிக்க சரியாக இருக்கும். இருந்த போதிலும், டீ.வி. இல்லாத ஏக்கம் கோபுவைத் துளைத்தது. வகுப்பில் எப்போதும் கோபு இரண்டாம் இடத்தைப் பிடிப்பவன்.

சீனு கோபுவைப் போல் நடுத்தரக் குடும்பப் பையனல்ல. அவன் தந்தை நகரிலேயே பெரிய ஜவுளிக்கடை வைத்திருந்தார். சீனுவன் வீட்டில் சகல வசதிகளும் இருந்தன. ஆனாலும், முதல் இடத்தைப் பெற்று விடுகிறோனே என்று கோபுவின் மேல் அவனுக்கு அவ்வளவு பொறாமை. என்னமாவது பண்ணி எப்படியாவது கோபுவைப் படிப்பில் பின்னுக்குத் தள்ளிவிட வேண்டும் என்று சீனு துடித்துக் கொண்டிருந்தான்.

"கோபு, நாங்கள்ளாம் நேத்து டீ.வி.ல பார்த்த சினிமாவைப் பத்திப் பேசிக்கிட்டிருக்கோம். நீ ஏண்டா ஒன்றுமே பேசலை! படம் பார்த்தியா?" என்று ராஜா கேட்டான்.

கோபுவுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. "எங்க வீட்டில் டீ.வி.யும் இல்லே. யாராவது நண்பன் வீட்டுக்குப் போய்ப் பார்க்கலாம்னாலும் அனுமதிக்கமாட்டேங்கறாங்க. எங்கும் சென்று டீ.வி. பார்க்கக்கூடாது, படின்னு சொல்லிட்டாங்கடா," என்று வெறுப்போடு சொன்னான் கோபு. அன்று வகுப்பில் கோபுவுக்குப் பாடத்தில் மனது செல்லவில்லை. பள்ளிக்கூடம் விட்டது. வெறுப்போடு வீடு திரும்பினான்.

கோபத்துடனும், வெறுப்புடனும், கோபு பையை வைத்தான்.

"கோபு, இந்தா சூடா தோசை," என்று அம்மா, தோசையைத் தட்டில் வைத்தாள்.

"எனக்கு தோசையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்," என்று தட்டைத் தள்ளி விட்டான், கோபு.




என்றுமே, அவன் இப்படி இருந்தது கிடையாது. அதனால் கோபுவின் அம்மா கவலையோடு அவன் அருகில் வந்தாள்.

"கோபு, ஸ்கூல்ல வாத்தியார் அடிச்சாரா? இல்ல எந்தப் பசங்களோடயாவது சண்டை ஏதாவது போட்டியா?" என்று கோபுவின் அம்மா கேட்டாள்.

கோபு பதில் கூறாது மௌனம் சாதித்தான். கோபத்துடன் எதையோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

மீண்டும் அம்மா ஏதோ பேச



முயன்றபோது கோபு குறுக்கிட்டான்.

"எனக்கு டீ.வி.வேணும். நான் டீ.வி. பார்க்கணும். கிளாஸ்ல, பசங்க எல்லாம் டீ.வி.பார்க்கறாங்க. அவங்க வீட்டிலெல் லாம் டீ.வி. இருக்கு. நம்ம வீட்ல மட்டும் ஏன் இல்ல?" –கோபு ஏக்கத்தோடு கேட் டான்.

வீட்டில் டீ.வி.இல்லையே என்று அம்மாவுக்கும் பயங்கர ஏக்கம்தான். ஆனால், கோபுவின் படிப்பையும், குடும்ப சூழ்நிலையையும் அப்பாவின் கடுமையையும் எண்ணி அம்மாவும் டீ.வி.யை மறந்திருந்தாள்.

கோபு இப்படி வருத்தமாக இருப் பதற்கு வீட்டில் டீ.வி. இல்லாததுதான் காரணம் என்பதை அறிந்து கொண்ட தும் அம்மாவின் வருத்தம் அதிகரித்தது. "எப்படியும் இன்னும் ஒரு மாசத்தில் டீ.வி.வாங்கிடுவோம்'' என்று அப் போதைக்கு கோபுவுக்கு உற்சாகமாகப் பதில் சொல்லி வைத்தாள்.

அதற்குப் பிறகுதான் கோபுவின் முகம் சற்று மலர்ச்சியானது. "அம்மா, அப்பா சொல்ற மாதிரி சொல்லி

ஏமாத்தக்கூடாது. சீக்கிரம் வாங்கிட ணும்'' என்று கோபு மகிழ்ச்சியோடு கூறிவிட்டு தோசையைத் தின்ன ஆரம் பித்தான்.

அப்பா அலுவலகம் விட்டு வந்தார். இரவு அனைவரும் சாப்பிட்டுவிட்டுப் படுத்தாயிற்று. கோபு தூங்கிப் போய் விட்டான். அப்பா விழித்துக் கொண் டிருந்தார். அம்மா மெல்ல ஆரம்பித் தாள்:

"நம்ம கோபு நல்லா படிக்கிறான், எல்லா பரிட்சைகளிலேயும் கிளாஸ்ல அவன்தான் பர்ஸ்ட். இரண்டாவது இடத்தில் இருக்கிறான்."

"இதெல்லாம் எனக்குத் தெரியுமே? அதுக்கென்ன இப்போது?'' என்று அப்பா கேட்டார். "அவன் நண்பர்கள் வீட்ல எல்லார்கிட்டேயும் டீ.வி. இருக் காம். எல்லாரும் தினமும் டீ.வி. பார்க்கறாங்களாம். கோபுவுக்கு நம்ம வீட்ல டீ.வி. இல்லையேன்னு ஒரே ஏக்கமா இருக்காம். அதனால்...."

அம்மா சொல்லி முடிக்குமுன் அப்பா கேட்டார். "அதனால, நம்ம வீட்டிலயும் டீ.வி. வாங்கிப் போடச் சொல்றியா? அவன் படிப்பு பத்தி, நம்ப குடும்ப சூழ்நிலை பத்தியும் கொஞ்சம் நினைச்சுப் பாரு."

அப்பா கடுப்பானார். "இப்ப, முதல் ரேங்க் வாங்கறான். நான் மறுக்கலே. டீ.வி. வந்தவுடன் கடைசி ரேங்க் போவான். இப்போதிருந்தே, அவனை முதல் ரேங்க் வாங்க வைச்சாதான், பத் தாவதுல நல்லா மார்க் வாங்குவான். பிரி யப்பட்ட குரூப்பை எடுத்தும் படிக்க முடியும். இது தெரியாம அவனுக்கு டீ.வி. வாங்க சிபாரிசு பண்றியே! எனக்கு மட்டும் ஆசை இல்லையா?'' என்று அப்பா விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அம்மாவுக்கு ஏக்கம் புரட்டி எடுத்தது. கோபு சாக்கிலாவது வீட்டுக்கு டீ.வி.வராதா என்று அம்மாவுக்கும் உள்ளூர ஏக்கம்! ஆனால், அதற்கு மேல் வற்புறுத்தத் துணிவு வரவில்லை.

**கோ**பு, வகுப்பில் ஏதோ சிந்தனை யுடன் உட்கார்ந்திருந்தான். சீனு யாரி டமோ சுவாரசியமாகப் பேசிக் கொண் டிருந்தான். டீ.வி.யைப் பற்றிப் பேச்சுத் திரும்பியதும் கோபு தன்னை அறியாது சிந்தனை கலைந்து சீனுவிடம் சென் றான்.

'சீனு, இந்த ஞாயிறு டீ.வி.யில் என்ன படம்டா போட்டாங்க? ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையுமா படம் போடு வாங்களா? சினிமா மட்டும்தானா? இல்லே சர்க்கஸ்லாம் கூடக் காண்பிப் பாங்களா?" கோபு ஆவலோடு சீனுவைக் கேட்டான்.

"ஏன் கோபு, நீ டீ.வி.யே பார்க்கற தில்லையா?"-சீனு கேட்டான்.

"எங்க வீட்டில் டீ.வி.யே முதல்ல இல்ல சீனு. எங்க அப்பா எங்கயும் வெளியில் கூட டீ.வி. பார்க்க விடமாட் டார்."- கோபு ஆதங்கத்துடன் சொன் னான்.

"ஐயய்ய! உங்க வீட்டில டீ.வி.யே இல்லையா!" – ஒரு மாதிரி ஏளனத்தோடு கேட்டான் சீனு.


"இல்லே, சீனு. ஆனா இன்னும் ஒரு மாசத்துல வாங்கிடறதா எங்கம்மா சொன்னாங்க" என்று கோபு சொன் னான்.

"அப்படியா! சரி இன்னிக்கு சாயந் திரம் ஸ்கூல் விட்டதும் எங்க வீட்டுக்கு வாயேன் கோபு?" -சீனு கேட்டான்.

"எதுக்கு?"

**"நாமதான் முட்டை போட றோம்னு நினைக்காதே. இந்த பள்ளிக்கூட வாத்தியாரும் நமக் குப் போட்டியா முட்டை போட றாரு!"**

**–எஸ்.நவஹறல்.**



"டீ.வி.ல தினமும் சாயந்திரம் நல்ல, நல்ல ப்ரோகிராம் போடறாங்க கோபு. நீ இன்னிக்கு மட்டும் வந்து பாரேன்." சீனு, கோபுவின் மனதில் ஆசைப் புயலைக் கிளப்பினான்.

"இன்னிக்கு சாயங்காலமா? உங்க வீட்ல, உங்க அப்பா, அம்மா இருக்க மாட்டாங்களா?"

"எங்கப்பாவுக்கு எப்பவும் வெளியூர்லதான் வியாபார விஷயமா அலைச்சல் வேலை. எங்கம்மாதான் வீட்டில. ஏன் பயப்படற? ஒன்றும் சொல்லமாட்டாங்க. என்னோட அறையிலேயே நாம டீ.வி. பார்க்கலாம். நீ கண்டிப்பா எங்க வீட்டுக்கு இன்னிக்கே வரே" என்று சீனு சொல்லி விட்டான்.


அன்று பள்ளி விட்டதும்...சீனு, சைக்கிளில் கோபுவோடு தன் வீட்டிற்கு விரைந்தான்.

கோபு, சீனுவின் வீட்டைப் பார்த்து மலைத்து நின்றான். அது பங்களாதான். சீனு, கோபுவைத் தன் வீட்டினுள் அழைத்துச் சுற்றிக் காண்பித்தான் கர்வமாக. கோபு மலைத்து நின்றான். அவனுடைய வீட்டில் இல்லாத புதிய பொருட்கள் அங்கு பல இருந்தன. கோபுவின் வீட்டில் பழைய டேப் ரிக்கார்டர் ஒன்று இருந்தது. இங்கு சீனுவின் வீட்டில் டீ.வி. டெக் என்று உயர்ரக எலக்ட்ரானிக் சாதனங்கள் அனைத்தும் இருந்தன.

"வா,, கோபு, என் அறைக்குப் போகலாம்" என்று சீனு கோபுவைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றான். சீனு, அறையை நன்றாக அலங்கரித்து வைத்திருந்தான். ஒரு மேஜையில், கலர் டீ.வி. வைக்கப்பட்டிருந்தது. சீனு, டீ.வியைப் போட்டான். "உட்கார் கோபு."" என்று கோபுவை நாற்காலியில் உட்கார்த்தி விட்டுத் தானும் அமர்ந்தான்.

டீ.வி.யில் கார்ட்டூன் படம் ஓடிக் கொண்டு இருந்தது. கோபு கண் இமைக்காமல், அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.'

கோபுவை மட்டம் தட்ட நினைத்த சீனு, "கோபு, நீ கார்ட்டூன் பார்த்ததே இல்லையா?" என்று சிறிது கேலியாகக் கேட்டான். கோபு அதைக் கண்டு கொள்ளாமல் கார்ட்டூனையே பார்த்துக்





"வாசல்ல சைக்கிள் வெச்சிருக்கேன்; பூட்டிருக்கேனா இல்லையான்னு ஓடிப்போய் பார்த்துட்டு வாடா கண்ணா..."

"சைக்கிள் இருந்தால்ல பூட்டியிருக்கா, இல்லையான்னு பார்க்க முடியும்...?"

-சீர்காழி வி.ரேவதி

கொண்டிருந்தான். திடீரென, கார்ட்டூன் நின்றது. சீனுவை ஏன் என்று ஏறிட்டான் கோபு.

"இது தொடர் கார்ட்டூன். இன்றைக்கு இவ்வளவுதான். மீதித் தொடர் நாளைக்கு இதே நேரத்துல."

கோபு ஏமாற்றமடைந்தான். கார்டூனில் அந்த எலி, பூனையிடமிருந்து தற்காலிகமாகத் தப்பித்து விடுகிறது. பூனை விட வில்லை. இன்னும் துரத்துகிறது. அதோடு நிறுத்தி விட்டார்களே! சே...! ஆர்வம் குன்றிப் போனான் கோபு.

அதற்குள், உதக மண்டலம் பற்றி ஒரு செய்திப்படம் போட்டார்கள். உதகைக்கு இது வரை சென்றிராத கோபு, அதையும் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். சில மணித்துளிகள் சென்று தொடரும் என்று போட்டு விட்டு அதையும் நிறுத்தினார்கள். கோபு மீண்டும் ஆர்வம் குன்றினான்.

பச்சைப் பசேல் என உதகைக்கு தானே நேரே சென்று விட்டது போன்ற உணர்வு தோன்றியது அவனுக்கு.

"இதை அடுத்த வாரம் இதே நாள் இதே நேரத்தில் மறுபடி போடுவார்கள் கோபு!" என்றான் சீனு. எத்தனை விதமான நிகழ்ச்சிகள் டீ.வி. யில்! இது நம் வீட்டிலும் இருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தான் கோபு. "மணியாகிறது சீனு. நான் கிளம்புகிறேன்," என்று வீட்டிற்கு விருப்பமில்லாமல் கிளம்பினான் கோபு.

"இன்னும் விதவிதமான நிகழ்ச்சிகள் தொடர்ந்து இருக்கும் கோபு" என்றான் சீனு.

அவனுடைய நோக்கமே கோபுவின் ஆவலைத் தூண்டி விட்டு அவனைப் படிக்கவிடாமல் செய்து விட வேண்டும் என்பது தானே? அப்பத்தானே முதல் ரேங்க் அவனுக்குக் கிடைக்கும்? இருந்தாலும் கோபு, தன் ஆர்வத்தை அடக்கிக் கொண்டு கிளம்பினான். அன்று இரவு படிப்பிலேயே அவன் மனம் செல்ல வில்லை. தான் சீனுவின் வீட்டில் பார்த்த டீ.வி. காட்சிகளே நினைவுக்கு வந்து ஏங்கித் தவிக்க வைத்தன. தன் நண்பர்கள் வட்டாரத்தில் எல்லாரிடமும் டீ.வி. இருக்கிறது. நம் வீட்டில் மட்டும் இல்லையே என்ற ஆதங்கம் கோபுவை அடிமை கொண்டது.

கோபு ஒரு மாதிரியாக இருப்பதைக் கவனித்த அம்மா விஷயத்தைப் புரிந்து கொண்டாள். டீ.வி. வாங்கும்படி தந்தையைத் தொந்தரவு செய்ய கோபுவிற்கு தைரியமே கிடையாது.

அன்று இரவு, அப்பா, எதற்கோ கடைக்குச் சென்றிருந்தார். கோபு, தன் அம்மாவிடம் ஆரம்பித்தான். "அம்மா, நண்பர்கள் எல்லார் வீட்டிலயும் டீ.வி. இருக்கும்மா. ஆனா நம்ம வீட்டுல மட்டும்தான் டீ.வி இல்லை! எப்பத்தான் நம்ம வீட்டுல டீ.வி. வாங்கப் போறீங்க?"

"நான்தான் முன்னாடியே சொல்லியிருக்கிறேனே கோபு? இன்னும் ஒரே மாசத்துல நாமும் கண்டிப்பா டீ.வி. வாங்கிடலாம்."

அம்மா பழைய பல்லவியையே மீண்டும் பாடினாள். இதைக் கேட்டு கோபு சமாதானமாகவில்லை. மீண்டும் அவன் தன் ஏக்கத்தை வெளியிட நினைத்த போது வாசலில் அப்பா வருவது கண்டு நிறுத்திக் கொண்டான். அம்மா மன உளைச்சலோடு, உள்ளே சென்று விட்டாள்.

கோபுவிற்கு அடுத்த வாரம் பள்ளியில் வாரத் தேர்வு நடத்தப்பட்டது. திருத்தப்பட்டதும் விடைத்தாள்கள் தரப்பட்டன. வழக்கமாக முதல் ரேங்க் எடுக்கும் கோபு, அதில் ஒரேயடியாகப் பின்வாங்கிப் போயிருந்தான். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தூக்கிவாரிப்போட்

டது. கோபு, வகுப்பில் பத்தாவது இடத்தில் இருந்தான். இது பெற்றோர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் அதிர்ச்சியைத் தந்தது. ஆனால், சீனு முதலிடத்தில் வந்திருந்தான்!

அம்மா உடனே காரணத்தைப் புரிந்து கொண்டாள். கோபுவின் இந்த நிலைக்கு, அவன் டீ.வி. ஆசையே காரணம் என்பது அவளுக்கு நன்கு தெரிந்து விட்டது.


கோபுவோ திகைத்தான். முதல் ரேங்க் எடுக்கும் நாம், எப்படிப் பத்தாவது ரேங்குக்குப் போனோம் என்பது தெரியாது கோபுவும் தடுமாறினான். இது அவனுக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

ஆனாலும், மனத்தின் அடித் தளத்தில், படிக்க வேண்டிய நேரத்தைப் படிப்பில் செலவிடாது, சீனு வீட்டில் டீ.வி. பார்க்கச் செலவழித்ததால் வந்த விளைவுதான் என்று ஒரு உணர்வு குத்திக் காட்டிக் கொண்டே இருந்தது.

முதல் மாணவனான தன்னிடம் சந்தேகம் கேட்கவரும் மற்ற மாணவர்கள், இப்பொழுதெல்லாம் சீனுவிடம் போக ஆரம்பித்த காட்சி அவனுக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அவனைக் கொண்டாடி, மதிப்பு வைத்திருந்த மாணவர்களும், ஆசிரியர்களும் இப்பொழுது அவனை அலட்சியப் படுத்தியது அவன் மனதைக் குத்தியது. சாப்பாடு நேரத்தின்போது தற்செயலாக சீனு, தனது நண்பன் ஒருவனிடம் "இனிமேல் கோபுவோட ஆதிக்கம் அஸ்தமித்துப் போச்சுடா. ஐயாதான் முதல் ரேங்க். ஐயாவை இனிமே அசைக்க முடியாது" என்று பெருமையாகக் கூறுவதை கோபு கேட்டான்.

"எப்படிடா சீனு இப்படிச் உறுதியாச் சொல்றே? ஏதோ உடம்பு சரியில்லாம இருந்து ஒரு தேர்வில் பின்னுக்குப் போனால், மறுபடி முதல் ரேங்குக்கு வராமலா போயிடுவான்? கோபு நல்லா உழைச்சுப் படிப்பவன். தெரியுமா?" என்றன் நண்பன்.

"அதெல்லாம் அந்தக் காலம் தம்பி. இப்போ கோபு, டீ.வீக்கு அடிமை. அவ



னால ஒரு நாள்கூட மாலையில் டீ.வி. பார்க்காம இருக்க முடியாது. எங்க வீட்டுல, நான் டீ.வி. பார்க்காம படிக்கப் போனால்கூட, கோபு தவறாமல் வந்து விடுகிறான். 'நீ படி சீனு. நான் பாட்டுக்குப் பார்க்கிறேன். டீ.வி போடு என்கிறான். இப்ப இருக்கற நிலையில் அவனுக்காகவாவது டீ.வி. போட்டாகணும் போல இருக்கு. இந்த அளவுக்கு டீ.வி. பித்துப் பிடிச்சுப் போன இவனாவது இனிமே முதல் ரேங்க் எடுக்கிறதாவது? ஐயாதான் இந்த ஆண்டு முழுவதும் முதல் ரேங்க்" என்று சட்டைக் காலரைத் தூக்கிக் கொண்டான் சீனு.

சீனுவின் எகத்தாளமான; பெருமையான பேச்சு, கோபுவைச் சிந்திக்க வைத்தது. அவனுக்குள் உறங்கிக் கிடந்த தன்மான உணர்வை, தன்னம்பிக்கை தட்டி எழுப்பியது.

பள்ளி விட்டதும் வழக்கப்படி சீனு கோபுவைத் தேடி வந்தான்.

"என்ன கோபு, வீட்டுக்குப் போகலாமா? இன்னிக்கி புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சிகளின் சில பகுதிகளை மறுபடி காட்டறாங்களாம்" என்று அழைத்தான்.

"இல்லே சீனு. நான் வரலே. நான் படிக்கப் போறேன்."

சீனு கோபுவைத் திகைப்புடன் பார்த்தான்.

"பிரபல திரைப்பட குட்டி நட்சத்திரம் பாலகுமாரின் சிறப்புப் பேட்டி இருக்காம் கோபு. பார்க்க வேண்டாம்?"

"வேண்டாம் சீனு. படிக்க ஒதுக்கியிருக்கும் நேரத்தில் எத்தனை நல்ல நிகழ்ச்சிகள் காட்டினாலும் பார்க்க இனிமேல் நான் தயாராக இல்லை."

அன்று கோபு வீடு திரும்பிய போது ஒரு மகிழ்ச்சியான அதிர்ச்சி அவனுக்குக் காத்திருந்தது. வீட்டின் முன்னறையில் ஒரு கலர் டீ.வி. பெட்டி, அதற்கான அழகிய ஸ்டாண்டில் அமர்ந்து அவனை வரவேற்றது!

டீ.வி.யைக் கண்டதும் அவன் மகிழ்ச்சிப் பெருக்கில்துள்ளிக் குதிப்பான் என்று எதிர்பார்த்திருந்த பெற்றோர்களுக்குப் பெரிய ஏமாற்றம்.


"கோபு, டீ.வி. இல்லாத ஏக்கத்தால் தான் நீ படிப்பில் கவனம் செலுத்தாம இருந்து முதல் ரேங்கைக் கோட்டைவிட்டேன்னு அம்மா சொன்னா. அதுனால தான் இதைத் தவணை முறையிலே வாங்கிக் கொண்டு வந்தேன். நம்ம வீட்டுல, நீ கேட்ட பொருளை வாங்கியிருப்பது உனக்கு மகிழ்ச்சியாக இல்லையா?" என்று ஆதங்கத்துடன் கேட்டார் அப்பா. கோபு துள்ளிக் குதிக்காதது அவருக்கு ஏமாற்றமாக இருந்தது.

"என்னுடைய ஆசையைப் பூர்த்தி பண்ண நீங்கள் சக்திக்குமேல் செலவழித்திருப்பது எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்குது அப்பா. நான் டீ.விக்கு ஏங்கினேன் என்பதும் உண்மைதான். படிக்க வேண்டிய நேரத்தில் படிக்காமல், நண்பன் வீட்டில் டீ.வி. பார்த்து, படிப்பைக் கோட்டை விட்டதும் உண்மைதான். படிக்க வேண்டிய நேரத்தில், அது எத்தனை சிறப்பான நிகழ்ச்சியாக இருந்தாலும் நான் இனிமே டீ.வி. பார்க்க மாட்டேன். அதற்கு நான் அடிமையல்ல; எனக்குத்தான் அது அடிமை. சாப்பிடும் நேரத்தில் செய்தியைப் பார்க்கிறேன். இதை உங்கள் அறையிலேயே வைத்துக் கொள்ளுங்கள் அப்பா'' என்று கோபு அமைதியாக ஆனால் உறுதியாகக் கூறியதைக் கேட்டு அம்மாவும் அப்பாவும் பெருமகிழ்ச்சிக் கடலில் மிதந்தனர்.

''நீதான் சாமர்த்தியசாலி ஆயிற்றே. எப்படி மாட்டிக் கிட்டே?''

''தங்கச் சங்கிலியை அறுத்துக்கிட்டு சைக்கிள்ல போகும் போது சைக்கிள் ''செயின்'' அறுந்து போச்சு.''

—ச.கதிர்வேல்



த. ஜானகி

# 2வது சாவி



## 9. கடத்தப்பட்டான்

அன்று ஷஷ்டி. சந்திப்பைக் கடத்த திட்டம் போட்ட ராஜாவுக்கு இப்பொழுது ஏனோ, சந்திப்பைக் கடத்தத் தயக்கமாக இருந்தது. அவனுக்கே இது அதிசயமாக இருந்தது. இதைப் பற்றி யோசித்தபடியே சண்முகத்தின் டீ கடையைத் தாண்டி அரிசி வியாபாரம் செய்யும் பெருமாள் வீட்டைத் தாண்டி, கீற்று பின்னிக் கொண்டிருக்கும் முதியவர் ராமசாமி வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தான்.

இந்தத் தள்ளாத வயதிலும் ராமசாமி சோம்பி இராது சுறுசுறுப்பாக வேலை செய்வதைக் கவனித்த அவன் "ஏன் தாத்தா! உன் மவன்தான் பட்டணத்திலே வேலை பாக்குதாமே? நீ ஏன் இந்த வயசிலே இப்படிக் கஷ்டப்பட்டு கீத்தைப் பின்னிக்கிட்டிருக்கணும்?" என்று கேட்டான்.

"நல்லா இருக்கே தம்பி நீ பேசற நியாயம்! திருடாம, பொய் சொல்லாம, மத்தவங்க உழைப்பிலே சொகுசா வாழாம, ஆண்டவன் கொடுத்திருக்கிற கை கால்லே உழைச்சு சாப்பிடறது தப்பே இல்லே. கை கால்லே தெம்பு இருக்கிற வரைக்கும் உழைக்கறது பாவமில்லை."

அவர் கூற்றில் இருந்த உண்மை ராஜாவின் உள்ளத்தைத் தொட்டது. இருப்பினும் சந்திப்பைக் கடத்தியே தீருவது என்று தீர்மானித்து விட்டான். எனவே சந்தீப் இருக்கும் தெருவிற்குள் நுழைந்தான்.

வாய்க்காலுக்குக் குளிப்பதற்காக வந்து கொண்டிருந்த அந்தக் காளைமாடு கறுப்பு வேட்டியில் இருந்த ராஜாவைப் பார்த்து விட்டது. அவ்வளவுதான்! இந்த உலகத்திலே அதுக்குப் பிடிக்காத நிறம் கறுப்பு.

மறுவினாடி தன்னுடைய எஜமானன் கந்தன் கையிலிருந்த கயிற்றை படாரென்று உருவிக் கொண்டு ராஜாவைத் துரத்த ஆரம்பித்தது.

இதைச் சற்றும் எதிர் பாராத ராஜா அரண்டு போய்... உயிரைக் கையில்

பிடித்துக் கொண்டு வந்த வழியே ஓட.....

இருவருக்கும் இடையில் உள்ள இடை வெளி குறைந்த கொண்டே வர... வழியில் சிலர் மிரண்டு ஒதுங்கிக் கொள்ள, இரண்டு பக்கங்களிலும் இருந்த வீடுகளிலிருந்து ஆட்கள் எட்டிப் பார்த்து காளையை அடக்க ஒரு சிலர் சத்தம் போட......

ஊஹூம்! எதற்கும் மசியாத காளை கறுப்புத் துணியில் வைத்த கண்ணை எடுக்காது ராஜாவைத் துரத்திக் கொண்டிருந்தது.

மயிலு வீட்டில் பேசிக் கொண்டிருந்த சந்திப், சற்றுத் தொலைவிலேயே இந்தக் காட்சியைப் பார்த்து விட்டான்.

என்ன செய்வது எப்படி ராஜா அண்ணனைக் காப்பாற்றுவது என்று சந்திப் துடித்தான். மயிலின் தந்தை தன் வீட்டு மாடுகளுக்காக அகத்திக்கீரை வாங்கி அருகில் இருந்த கட்டிலில் வைத்திருப்பது சந்திப் கண்ணில் பட்டு விட்டது.

இதோ... இதோ... ராஜா... மயிலு வீட்டிற்கு முன் பக்கம் வரும் போது கால் தடுக்கி விழ... மாடு... அவனை நெருங்க...

அதற்குள் மின்னல் வேகத்தில் சந்திப் செயல் பட்டான். அகத்திக்கீரைக் கட்டுகளை அள்ளி மாட்டிற்கு முன்னால் குறி தவறாது வீசி எறிந்தான். தன் பங்கிற்கு மயிலும் ஒரு கட்டை எடுத்து வீசினான். பசுந் தழையைப் பார்த்த காளையின் கோபம் மெதுவாகத் தணிய, ராஜாவை மறந்து விட்டு நின்றபடி, அது கீரையை மெதுவாகத் தின்ன ஆரம்பித்தது.



"வீட்டில மொத்தமா எத்தனை பேர் இருக்கீங்க?"

"யாருமே மொத்தமா இல்லே. எல்லோரும் ஒல்லியாத்தான் இருக்கோம்!"

— எஸ். தட்சணாமூர்த்தி

"ராஜா... அண்ணே!" என்று கூவியபடி தன்னைத் தூக்கி விட்டு, மயிலு வீட்டுக் கட்டிலில் படுக்கச் சொன்ன சந்திப்பைப் பார்த்த ராஜாவுக்கு விழிகள் பனித்தன. மரணத்தின் வாயிலிருந்து தன்னைக் காப்பாற்றியவனைப் பார்க்க முடியாது விழிகளில் நீர்த் திரை மறைத்தது.

அன்று மதியம் தன் பள்ளி ஆசிரியருடன் சந்திப் மாவட்ட அளவில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள புதுக்கோட்டை சென்றான். ஒரு பள்ளிக்கு ஒரு மாணவர் என்று தேர்வு செய்யப்பட்டதில் பாரதியார் உயர்நிலைப் பள்ளியில் சந்திப்தான் தேர்ந்தெடுக்கப்பட்டான். 'அன்பு என்ற தலைப்பில் சிதம்பரம் தாத்தா சொன்ன கருத்தின் அடிப்படையில் அருமையாகப் பேசினான்.

பலத்த கை தட்டல்களுக்கு இடையே சந்திப் முதல் பரிசைப் பெற்றுக் கொண்டு பஸ் ஏறினான்.

மதியம் கிளம்பும் பொழுது தாத்தாவும், ஊரிலிருந்து வந்திருந்த பாட்டியின் தம்பி குமரேசன் மாமாவும் சந்திப்பை முதல் பரிசு வாங்க முயற்சி செய்யும்படி கூறினார்கள்.

"கவலையே படாதீங்க. வெளுத்துக் கட்டி விடுவேன். பரிசு எனக்குத்தான்" என்று மிகுந்த தன்னம்பிக்கையோடு கூறினான் சந்திப்.

"அப்புறம் சந்திப்! இன்னிக்கு சஷ்டி. அதனால குமரேசனும் நானும் சாயந்திரமா விராலி மலைக்குப் போய் முருகனுக்கு அர்ச்சனை செய்யப் போகிறோம். நீ எப்ப திரும்பி வருவே என்று திட்டவட்டமாகத் தெரியாது இல்லையா? முடிந்தால் உன்னை சந்திச்சுக் கூட்டிக் கொண்டு போறோம். இல்லாவிட்டால் போலீஸ் காரர் துணையோடு வீட்டிற்கு வந்து விடு" என்று தாத்தா வழியனுப்புகையில் சொன்னார்.

தான் முதல் பரிசு பெற்றிருப்பதை அறிந்தால் தாத்தாவும் குமரேசன் மாமாவும் எத்தனை சந்தோஷப்படுவார்கள். ஏன்... பாட்டிக்குக் கூட சந்தோஷமாகத்தான் இருக்கும். இந்தச் செய்தியை தங்கை சத்தியா கேட்டால், எத்தனை



மகிழ்ச்சி அடைவாள்! ராஜா அண்ணாவிடம் நான் பேசியதை அப்படியே பேசிக் காண்பிக்க வேண்டும்... என்று எண்ணக் கடலில் நீந்தியபடியே வந்தவன் விராலிமலை வந்ததைக் கூட கவனிக்கவில்லை.

"சந்தீப்! என்ன பஸ்சை விட்டு இறங்க இன்னும் மனம் இல்லையா?" என்று ஆசிரியர் குரல் கேட்ட பிறகே அவசர அவசரமாகக் கீழே இறங்கினான்.



**ஒ**ளி விடை பெற்று இருள் மெதுவாக வந்து கொண்டிருக்கும் நேரம். தெருவில் விளக்குகள் அப்பொழுது தான் எரியத் தொடங்கியிருந்தன. முருகனுக்கு ஏற்ற சஷ்டி தினமாதலால் அன்று வழக்கத்தை விட கும்பலும் போக்குவரத்தும் அதிகமாகவே இருந்தன.

"ஸார்! நீங்க வீட்டிற்குப் போங்க. நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் யாரையாவது அழைத்துக் கொண்டு போகிறேன்" என்று சந்தீப் கூறவே ஆசிரியர் வடக்குப் பக்கமாக உள்ள தன் வீட்டை நோக்கிச் சொல்ல ஆரம்பித்தார்.

கிழக்குப் பக்கமாக சந்தீப் கும்பலில் நுழைந்து வந்து கொண்டிருந்தான்.

**தா**ன் சொல்லி இருந்தபடி ராஜா இன்னும் சந்தீப்பை அழைத்துக் கொண்டு வராததைக் கண்டு பொறுமை இழந்து கொண்டிருந்தான் மணி. அவன் மறைவிடத்தில் போலீஸ் உடையோடு காத்திருந்தான். அந்த மறைவிடத்தை நோக்கித்தான் சந்தீப் நெருங்கி வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது, "ஹாய்! சந்தீப் உன் கையில் உள்ள பண்டிலையும் உன் முகத்தையும் பார்த்தாலே இன்னிக்கு உனக்குத்தான் முதல் பரிசு கிடைச்சுருக்கும் என்று அடிச்சு சொல்றேன். சரிதானே?" என்று ஓடி வந்தான் வகுப்பு நண்பன் மகேஷ்.

"எஸ். யூ ஆர் கரெக்ட்!" என்றான் மகிழ்ச்சியுடன் சந்தீப்.

"நம்மோட பள்ளிக்கு, ஏன் நம்மோட செக்ஷனுக்கே உன்னால பெருமைடா" என்று கை குலுக்கினான் மகேஷ்.

"திங்கட்கிழமையன்னிக்கி ஸ்கூல்லே உன்னோட பரிசுப்புத்தகங்களைப் பார்க்கறேன். இப்ப நான் மலை ஏறப் போறேன். வரட்டுமா?"

சந்தீப்பிடம் விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டான் மகேஷ்.

நடை பெற்ற உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மணிக்கு மின்னல் வேகத்தில் அந்த எண்ணம் பளிச்சிட்டது. சற்று நேரத்திற்கு முன்புதான் மேஜர் தேவநாதன் மலையிலிருந்து இறங்கி போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிர்ப்புறமுள்ள பெட்டிக் கடையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்திருந்தான் மணி.

சந்தீப் கவனிக்காத வண்ணம் குறுக்குப் பாதையில் மிக வேகமாகச் சென்றான் மணி. கூலிக்கு மாரடிக்கும் டிரைவர் முஸ்தாபா தயாராக இருந்தான். தன் பாக்கெட்டில் தயாராக எழுதி வைத்திருந்த கடிதத்தை அவனிடம் கொடுத்து மேஜரிடம் சேர்க்கச் சொன்னான் மணி. பிறகு, காரை எடுத்துக் கொண்டு



சந் திப்பை நெருங்கினான்.

வழியில் சந்தித்த இரண்டு மூன்று நண்பர்களுடன் பேசிவிட்டு மகிழ்ச்சியோடு வந்து கொண்டிருந்த சந்தீப் தனக்கு முன்னால் கார் நிற்பதைக் கண்டான். காரினுள் டிரைவர் சீட்டில் போலீஸ்காரனாக மணி!

போலீஸ் காரரைக் கண்ட கூட்டம் சற்று அமைதியாக விலகிச் சென்றது.

"தம்பி நீதானே சந்தீப்? இன்னிக்கு உன்னைக் கடத்த ஒரு கும்பல் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று எங்க டிபார்ட்மென்ட்டிற்கு ரகசியமா செய்தி கிடைத்திருக்கிறது. அதனால இன்ஸ்பெக்டர் மனோகரன் ஐயா உன்னை இந்தக் கார்லே வீட்டிலே ஜாக்கிரதையா கொண்டு விடச் சொன்னார்." என்று கூறியபடி மணி பவ்யமாகக் காரின் முன் கதவைத் திறந்து விட்டான்.

உள்ளத்து மகிழ்ச்சியினாலும் மணி போலீஸ் உடையில் இருந்ததாலும் அவன் மீது சந்தேகம் வரவில்லை சந்தீப் பிற்கு. உடனே காரில் ஏறிக் கொண்டான். டிரைவர் சீட்டில் அமர்ந்து கொண்ட மணி பேச்சுக் கொடுத்த படியே காரைச் செலுத்தினான்.

"தம்பி, மடியிலே என்ன? பரிசு வாங்கின புத்தகமா? எந்தப் போட்டியிலே?"

அவ்வளவுதான்! சந்தீப் வெளி உலகையே கவனியாது தான் கஷ்டப்பட்டுப் பேசி முதல் பரிசு வாங்கியதைப் பற்றிக் குதூகலத்தோடு பேச ஆரம்பித்தான். ஐந்து நிமிடங்கள் வரை இடைவிடாது பேசிக் கொண்டிருந்த அவன் பார்வையை வெளியே ஓட விட்ட போதுதான் கார் வேறு வழியில் செல்வதைக் கவனித்து திடுக்கிட்டான்.

"என்னங்க! எங்கேயோ ஓட்டிக் கொண்டு போறீங்க? இது அத்தியூர் போற பாதை இல்லீங்க" என்றான் பதட்டமான குரலில்.

"தெரியும் பேசாமல் வா."

கார் ஓட்டும் முகத்தை சந்தீப்பால் இப்பொழுது சரியாகப் பார்க்க முடியவில்லை. காரை ஓட்டிய கைகளே தெரிந்தன! கவனித்தான். வலதுகை ஆறாவது விரலைப் பார்த்ததும் அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. இவன் முன்பே நம்மைக் கடத்த வந்தவன். இப்பொழுதும் நம்மைக் கடத்திக் கொண்டிருக் கிறான் என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டான்.

பயத்தை வெளிக் காட்டிக் கொள்ளாது பேச ஆரம்பித்தான். "பொய் சொன்ன போலீஸ் அண்ணே, இந்த முறை ஜெயிச்சுட்டீங்க. என்னைக் கடத்த என்ன காரணம்?"

"என்ன காரணமா? இந்நேரம் உங்க தாத்தா கையிலே இருக்கும் கடிதம் காரணம் சொல்லும்?" என்று கூறியபடி காரை இருளில் மூழ்கிய ஒரு குடிசை முன்பு நிறுத்தினான் மணி.

**பெ**ட்டிக் கடையில் மேஜரும் குமரேசனும் பேசிக் கொண்டிருந்தனர். சந்தீப் எப்ப வந்தாலும், அழைத்துப் போகத் தயாராக அவர்கள் காத்துக் கொண் டிருந்தனர். ஏனெனில் பஸ் ஸ்டாண்டை விட்டு இறங்கி அந்த வழியாகத்தான் போலீஸ் ஸ்டேஷனைக்



## நாய்க்குடை

**மழை பொழிந்த பின்னே கிளம்பி**
**மண்ணில் தோன்றுமே!**
**தழைத்து நல்ல காம்பும் மண்ணில்**
**தானே ஊன்றுமே!**
**மக்கிப் போன தாவரத்தில்**
**இருந்து முளைக்குமே,**
**சொக்கிப் போனேன் அதுவும் பூப்போல்**
**சொகுசு விளைக்குமே!**
**நாய்க்குடையாம் அதற்குப் பேரும்**
**சொல்வார் யாருமே!**
**வாய்க்கும் அதுவும் பூஞ்சைக்காளான்**
**வகையில் சேருமே!**

**— மின்னூர் சீனிவாசன்**

கடந்து அத்தி யூருக்குச் செல்ல வேண்டும்.

நேரமாச்சே என்று நினைத்துக் கொண்டு கையில் கட்டிக் கொண்டிருந்த வாட்சைப் பார்த்தார் மேஜர். மணி ஏழு.

அந்தச் சமயம் காலிழந்த ஒரு பிச்சைக்காரன் அங்கு வந்து அவரிடம், "ஐயா! ஒரு ஆளு இந்தக் கடிதத்தை உங்ககிட்டே கொடுக்கச் சொன்னாரு" என்றபடி கடிதத்தை நீட்டினான். கேள்விக் குறியோடு கடிதத்தை வாங்கிக் கொண்ட மேஜர், பிரித்துப் படிக்க ஆரம்பித்தார்.

"மேஜர் தேவநாதனுக்கு,

உங்கள் பேரன் சந்திப் எங்களிடம் பத்திரமாக இருக்கிறான்.

சென்னையில் போலீஸ் இலாகாவில் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக வேலை பார்க்கும் உங்கள் மகன் ராஜசேகரன் ஐந்து மாதங்களுக்கு முன்னால் பாங்க் கொள்ளையில் சம்பந்தப்பட்டிருக்கும் மாயாண்டி, என்பவரைக் கைது செய்து தன்னுடைய பாதுகாப்பிலேயே வைத்திருக்கிறார். அவரை உடனே வெளியே விடும்படி கேட்கின்றோம். ஒரு போலீஸ் அதிகாரி நினைத்தால் எதையும் சாதிக்க முடியும்.

கடமை முக்கியமா? தன் மகனின் உயிர் முக்கியமா என்று முடிவு எடுப்பது சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராஜசேகரனின் கையில் இருக்கிறது. அந்த ராஜசேகரனை இணங்க வைப்பது உங்கள் கையில் இருக்கிறது.

சந்திப்பைத் தேடும் முயற்சியில் ஈடுபட வேண்டாம். ஒன்று மட்டும் நிச்சயம். மாயாண்டி வெளியில் வந்த மறு நிமிடமே எவ்வித ஆபத்தும் இன்றி உங்கள் பேரன் வீட்டிற்கு வந்து விடுவான்.

இன்னும் ஒரே ஒரு வாரம்தான் கெடு தந்திருக்கிறோம்.

இப்படிக்கு,
மாயாண்டியின் நண்பர்கள்."

ஒரு முறைக்கு இரண்டு முறை மேஜர் கடிதத்தைப் படித்தார். அவர் சந்தேகித்தபடி மாயாண்டியின் நண்பர்கள் தான் சந்திப்பைக் கடத்த முயற்சி செய்திருக்கின்றனர். இன்று கடத்தியே விட்டனர். மேற் கொண்டு என்ன செய்வது? சில நிமிடங்களை சிந்தனையில் செலவிட்டார் மேஜர். குமரேசனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. திகிலடைந்திருந்தார்.

மேஜர் ஒரு முடிவுக்கு வந்தார்.

இதைப் பற்றித் தன் மகனோடு நேரில் கலந்து பேச வேண்டும். நேர்மையுள்ள போலீஸ் அதிகாரியாக இருக்கும் தன் மகன் இந்த பேரத்திற்கு ஒத்துக் கொள்வானா? ரகசிய போலீஸ் மூலம் சந்திப்பைத் தேட ஏற்பாடு செய்ய வேண்டும். இன்று இரவே கிளம்பிச் செல்ல வேண்டும்" என்று தீர்மானித்தபடி தன் வருகையை மகனுக்குத் தெரிவிக்க குமரேசனுடன் போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார். மகனுடன் தொடர்பு கொள்ள தொலை பேசியை எடுத்து நம்பர்களை சுழற்றி, "ஹலோ" என்று ஆரம்பித்தார்.

ஆனால்... எதிர் முனையில் மருமகள்; சந்திப்பின் அம்மா... தெரிவித்த செய்தியைக் கேட்டு ஒரு வினாடி ஆடிப் போய்... அப்படியே நாற்காலியில் உட்கார்ந்து விட்டார் மேஜர்.

(தொடரும்)



ரத்தினபுரி ரகசியம்-3
கதை:வாண்டுமாமா
சித்திரம்:செல்லம்
திரிசூல் மன்னன் திலீபன், தான் வீர சேனனால் காட்டிக் கொடுக்கப்பட்டத றிந்து திகைக்கிறார். அதேசமயம்...
வாக்களித்தபடி என் வெகுமதியை அளியுங்கள்.
பூசாரிகளிடமிருந்து கருணையற்ற சிரிப்பே பதிலாக ஒலித்தது.
இளமையின் ரகசியத்தை அறிந்து, எங்களில் ஒருவனாகிவிடலாம் என்று கனவு கண்டாயா? உனக்கு ஏற்ற வெகுமதி - விரைவான மரணம் - விரைவாகவே அளிக்கப்படும்.
இவனை இரு துண்டமாக வெட்டித் தள்ளுங்கள்!
காற்றைக் கிழித்துக் கொண்டு வாள், வீரசேனரின் மீது இறங்கும்போது - திலீபன் திடீரென்று கொலையாளியின் குறிக்குக் குறுக்கே பாய - வாள் அவரைத் தாக்கியது.



சரிந்த மன்னரைப் பார்த்தார் வீரசேனர்.
நான் அவரைக்காட்டிக் கொடுத்திருந்தும் என்னைக் காப்பாற்ற தன் உயிருக்கு ஆபத்தை ஏற்றுக் கொண்டார் மன்னர்.
அவர் வாக்களித்ததை மறந்துவிட்டாரா? தேவஹூதி ஆற்றில் மூழ்கவிருந்த அவரை நீர் காப்பாற்றினீர். நன்றிக் கடன் மறவாதவர் என் அண்ணா.
மனச்சாட்சியின் உறுத்தலும் கோபமும் குடைய, வீரசேனர் செயலில் இறங்கினார்.
ரத்தினபுரிப் பேய்களே! என் நம்பிக்கைத் துரோகத்துக்கு ஈடு செய்கிறேன்.
ஆஹ்... ஹ்... ஹா!
ரத்தினபுரியின் பூசாரிப் போர்வீரர்கள் வீரசேனரின் வெறித் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் ஓட்டமெடுத்தனர்.
மிருகங்களே, உங்கள் மாறா இளமையை, புழுதியில் போட்டுத் துவைக்கிறேன்.



அப்போது அந்த அதிசயம் நிகழ்ந்தது!
அடப்பாவிகளா! இது தானா, உங்கள் இளமையின் ரகசியம்?
காவல் படையினரும் - பொதுமக்களும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். பிறகு கோபமும் - வெறுப்பும் நிறைந்த குரல்கள் எழுந்தன.
மற்றவர்களின் கதை என்ன?
ஏமாற்றுப் பேர்வழி!
இவன் கிழவன்!
மற்ற பூசாரித் தலைவர்களின் முகமூடியும் அகற்றப்பட்டன. எல்லாரும் பீதியினால் வெளுத்த முகமுடைய கிழங்கள்.
கருணை காட்டுங்கள்...
கோழைகள் நடுங்குவதைப் பார்!
முகத்திரை அகற்றப்பட்ட கிழங்களைக் கோயில் நீரூற்றில் தூக்கி வீசினர்.
நீரில் கரையட்டும் உங்கள் ஏமாற்று வேலை.
ஐயோ... வேண்டாம்!
ரத்தினபுரியின் முன்னாள் ஆட்சியாளரிடமிருந்து முழு விவரத்தையும் திலீபன் அறிகிறார்.
இந்தக் கட்டுக் கதை வெகு காலமாகப் பூசாரிகளால் திட்டமிடப்பட்டசதிச் செயல். நாங்களும் இதற்கு உடந்தையாக இருந்து மக்களை நம்ப வைப்பதில் செயல்பட்டோம். எங்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் இக் கட்டுக் கதைகளில் மனம் பறிகொடுத்து, பூசாரிகளின் கட்டளைகளைச் செயல்படுத்தி வந்தனர்.
அய்யோ, இந்த என்றும் இளமை வெறும் கேலிக் கூத்து இல்லையா?





## மூன்றாம் பாகம்

❀ ❀ ❀

ரத்தினபுரிப் பயணத்திலிருந்து திரும்பிய மன்னர் திலீபன், தனது திரிசூல் ராஜ்யத்தில் ஒரு புதிய அரண்மனை கட்டுவதற்குத் திட்டமிட்டார். கட்டிடத் தொழிலாளர் அரண்மனைக்கு அஸ்திவாரம் போட பூமியைத் தோண்டிய போது -


❀ ❀ ❀





பணியாளர்கள் சுகேது, சுனந்தன் என்பவர்களிடம் போய் விஷயத்தைக் கூறுகின்றனர். கட்டிடக் கலை வல்லுனர் அவ்விருவரும்.
ஐயா, நினைக்க முடியாத ஒரு பொக்கிஷத்தைக் கண்டிருக்கிறோம்!
அந்த மர்ம மாளிகையினுள் முதலில் நுழைந்தவர்கள் சுகேதுவும் சுனந்தனும்தான்.
இது கோயிலா?
இ... இல்லை... கல்லறை.. பார்!
அதிக தீவட்டிகள் கொண்டுவரப்பட்டன. அந்த விஸ்தாரமான கூடத்தின் நடுவே ஒரு பெரிய சவப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது.
இது பண்டைய மன்னரின் கல்லறை.
யார் அந்த மன்னர்?
திரிசூல் ராஜ்யத்தின் ராஜ குருவான கௌதமரின் கவனத்துக்கு அந்தக் கல்லறை விவகாரம் செல்கிறது. அவர் பல புராதன செப்புப் பட்டயங்களையும் ஓலைச் சுவடிகளையும் ஆராய்கிறார்.
நம்ப முடியவில்லை! ஆச்சரியம், அதிசயம்!
மன்னர் திலீபனிடம் தாம் கண்டறிந்ததைக் கூறுகிறார் கௌதமர்.
அக் கல்லறை விபரீத விளைவுகளை உண்டாக்குமா? ஏன் குருதேவா?
கல்லறைச் சுவரில் உள்ள சித்திர எழுத்துக்களின் படி...


...மீளா உறக்கத்தில் கிடத்தப்பட்டுள்ள மன்னரின் கல்லறைக்குள் நுழைபவர்கள் மரணமடைவார்கள். இக்கொடிய செயல் நடக்கும்போது யார் இந்த நாட்டை ஆள்கிறார்களோ அவர்களும், அவரது சந்ததியினரும் அழிவார்கள்.
அழிந்த அந்த சாம்ராஜ்யத்தைப் பற்றிய விவரங்களைக் கேட்டார் திலீபன்.
இன்றுள்ள திரிசூல் ராஜ்யம் அந்த சாம்ராஜ்யத்தின் மீதுதான் எழுந்துள்ளது. அதன் மக்கள் போர்க்குணமும் மூட நம்பிக்கைகளும் கொண்டவர்கள்.
கல்லறையில் உள்ளது யுட்டா என்ற மன்னனின் பாடம் செய்யப்பட்ட உடல். விண்ணையும் ஆண்ட வீரன் என்று புகழப்படுகிறான் யுட்டா.
கௌதமர், கல்வெட்டுக்களில் தாம் கண்டறிந்தவற்றை விளக்குகிறார்.
மன்னன் யுட்டாவைப் பற்றிய விவரம் இவ்வளவே. அவர் கல்லறை மீது பொறிக்கப்பட்டுள்ள அந்த சாபம், பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது


கௌதமருடைய பேச்சின் முடிவில் அவைத் தலைவர்களில் ஒருவரான விராதன் குறுக்கிட்டார். பாட்டாளி, மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதி அவர். மக்களிடையே செல்வாக்குள்ளவர்.
அவ்வளவும் புளுகுமூட்டைகள். மக்களை மிரட்டுவதற்காக எழுதப்பட்டவை. அந்தக் கல்லறையிலுள்ள சவப் பெட்டியையும் அங்குள்ள கல்வெட்டு மற்றும் சிலைகளை, திரிசூலின் அருங்காட்சியகத்துக்கு அப்புறப்படுத்தி மக்கள் கண்டுகளிக்கும்படி செய்யவேண்டும். இந்தக் கட்டுக் கதைகளை நம்ப வேண்டாம்.
விராதனின் யோசனை ஏற்கப்பட்டது. விரைவில் புதையுண்டு கிடந்த கல்லறைப் பொக்கிஷங்கள் திரிசூல் நாட்டு அருங்காட்சியகத்துக்கு மாற்றப்பட்டு, மக்கள் திரளாக வந்து கண்டுகளித்தனர்.
ஒருநாள் இரவு அருங்காட்சியகம் மூடப்பட்டபின், ஒரு விந்தைக் குரல் கூடத்தில் எதிரொலித்தது
என்ன சத்தம் அது? யார் அங்கே?
அதன் பிறகு...
இய்ய்ய்ய்யோவ்வ்!
மறுநாள் காலை அவன் உயிரற்ற உடலைக்கண்டனர்
இதையார் செய்திருப்பார்கள்? ஏன்?





அதுமட்டுமல்ல...
ஆஹ்ஹ்! புராதன மன்னர் யுட்டாவின் பாடம் செய்யப் பட்ட உடலைக் காணோம்.
அதே தினத்தில் தடை செய்யப்பட்ட கல்லறைக்குள் முதலில் நுழைந்த இருவரில் ஒருவரான சுகேது ரதத்தில் வெளியூரிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது - திடீரென்று குதிரைகள் மிரண்டன...
தேரோட்டியும் எதையோ கண்டு பீதியடைந்து நிதானம் தவற...
ய்ய்யோவ்வ்வ்!
ரதம் பாலத்தின் சுவரைத் தகர்த்துக் கொண்டு நதியில் விழுந்தது.
அழிவுச் செய்திகள் திலீபருக்கு அறிவிக்கப்பட்டன.
"மன்னரின் கல்லறைக்குள் நுழைபவர்கள் மரணமடைவார்கள்." யுட்டாவின் சாபம் பலிக்கிறதா?




அன்று காலை முதலில் யுட்டாவின் கல்லறைக்குள் நுழைந்த இருவரில் மற்றொருவரான கனந்தன், தமது சொகுசுக் குளியல் குளத்தில் குதிக்கிறார்.
மரணத்துக்குப் பயப் படுவதாவது! சுகேது வின் ரதம் விபத்துக் குள்ளானது சாபத் தினால் என்பது முட்டாள்தனம்!
அவர் நீரில் மூழ்கித் துளையும் போது,வெள்ளியாக மின்னும் மீன்கள் இருள் மூண்ட அடித்தளத்திலி ருந்து வெளிப்பட்டன.
அந்த வெள்ளி மீன்கள் அவரைச் சூழ்ந்து கொண்டபோது-
அய்ய்ய்ய்யோவ்வ்!
...விரைவில் ஓலம் அடங்கியது.
இதுவும் திலிபருக்குத் தெரிவிக்கப்பட்டது.
நீச்சல் குளத்தில் கொல்லும் மீன்களா? அவை எப்படி அங்கு வந்தன?
அருகிலிருந்த தளபதி வீரசேனரின் பார்வையைச் சந்திக்கிறார் அரசர்.
வீரசேனரே? நான் மூடநம்பிக்கை களை நம்புபவ னல்ல.
அரசே! சாபத்தினால் உங்கள் உயிருக்கு அபாயம் என்று கௌதமர் கூறியதை நினைத்துப் பாருங்கள்.


என் சந்ததியினருக்கும் நெருக்கமானவர்களுக்கும் அதே கதி என்பதையும் கௌதமர் குறிப்பிட்டார். ஆகவே சகரனும் நீங்களும் நீச்சல்குளத்தைக் கவனமாகச் சோதனையிடுங்கள் வீரசேனரே!
மன்னர் யுட்டாவின் உடல் சவப்பெட்டியிலிருந்து மாயமாக மறைந்ததை அடுத்து, அருங்காட்சியம் மூடப்பட்டது. கௌதமர் அன்று நீலன் என்ற வாலிபருடன் சென்றார்.
சவப்பெட்டியின் மூடியை நகர்த்தப் பத்து ஆட்கள் வேண்டும், கௌதமரே!
பத்துப்பேர் அல்லது அமானுஷிக சக்தி.
கௌதமர் கல்வெட்டைக் காட்டினார்.
இங்குள்ள சித்திர எழுத்துக்களை முழுமையாக அறிய முடியவில்லை.
சாபம் பற்றி அதில் மேலும் ஏதாவது தகவல் இருக்கலாமோ.
காலடியோசை கேட்டு கௌதமரும் நீலனும் திரும்பினர். வீரசேனர் வந்து கொண்டிருந்தார்.
மக்கி மடுத்துப் போன அந்தப் பழைய குப்பையை இன்னுமா கிளறிக் கொண்டிருக்கிறீர்கள் கௌதமரே! நீலா உனக்கு ஒரு பணி உள்ளது.
ஏற்கிறேன் தளபதியாரே!
சாபம் என்பதெல்லாம் அறிவீனம். அரசர் தன் உயிருக்குப் பாதுகாப்பு எதுவும் தேவை இல்லை என்கிறார். ஆனால் ரகசியமாக நான் அவருக்குப் பாதுகாப்பளிக்க முடிவு செய்துள்ளேன். இரவு பகல் அவரைப் பாதுகாக்க நம்பிக்கையான ராஜ விசுவாசிகளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.
என்னைத் தேர்ந்தெடுத்தால் அதைப் பாக்கியமாகக் கருதுவேன் தளபதியாரே!


அன்றிரவு நீலன், அரண்மனைக்காவல் பணிக்குச் சென்றான்
மன்னரின் படுக்கை அருகேயே இரு. சந்தேகப் படும்படி ஏதாவது பார்த்தாலோ கேட்டாலே உடனே குரல் எழுப்பு.
நல்லது தள பதியாரே.
நிசப்தமான அரண்மனையின் அந்தப் பகுதியில் நீலன் தனியாக நின்றான்.
அவனை அச்சுறுத்தப்போகும் அதை அவன் பார்க்கவுமில்லை கேட்கவுமில்லை.
சில விநாடிகளில் நீலன் நினைவிழந்து கீழே விழுந்தான். அரசரின் படுக்கை அறைக் கதவு ஓசையின்றித் திறக்கப்பட்டது.
நீலனுக்கு நினைவு திரும்பிய போது இரவின் முதல் ஜாமம் முடிந்திருந்தது.
நீலா! என்ன ஆச்சு உனக்கு?
தளபதியாரே... நான்...
யாரோ என் குரல் வளையை நெறித்து....
மன்னர்.....!



வீரசேனர் மன்னரின் படுக்கை அறையினுள் பரபரப்போடு நுழைய அங்கு கண்ட காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது.
ஆஹ்ஹ்! திலீபரே... ஆண்டவா... கூடாது!
தளபதியின் கத்தலுக்குப் பதில் கூறியது ஒரு குரல்!
என்ன தளபதியாரே?
நீங்கள் உயிரோடிருக்கிறீர்களா! ஆண்டவனுக்கு நன்றி. ஆனால்... யார்?
மேல்மாட முகப்பில் நான் படுத்திருந்தேன். முன்னெச்சரிக்கையாக இப்படி ஏற்பாடு செய்து விட்டு.
முன்னெச்சரிக்கை பலனளித்ததில் மகிழ்ச்சி மன்னா. ஆனால் சிறு ஒலிக்கும் விழித்துக் கொள்ளும் நீங்கள், கொலைகாரனின் வரவை அறியவே இல்லையா? கல்லறையின் அமைதியைப் போல அவன் வந்திருக்க வேண்டும்.
இங்கு தரையில் ஏதோ!
அதை எடுத்துக் காட்டினான் நீலன்.
சாயம் போன பழைய துணியின் துண்டு.



கௌதமரின் ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பினார்கள் அந்தப் பழைய துணித்துண்டை.
நான் சோதித்த வரையில் அந்தத் துணித் துண்டு- யுட்டாவின் கல்லறை எவ்வளவு பழைமையோ அத்தனை பழைமையானது.
அடக் கடவுளே! என் படுக்கை அறைக்கு அது எப்படி வந்தது?
ராஜகுருவின் பதில் அவர்களுடைய ரத்தத்தை உறையச் செய்வதாக இருந்தது.
இறந்த உடல்கள் கெடாமல் பதப்படுத்தச் சுற்றப் பயன்படுத்தும் துணி அது. உங்களைக் கொல்ல முயற்சித்தது மன்னர் யுட்டாவாக இருக்கலாம்.
யுட்டாவின் சாபம் பற்றிய செய்தி திரிசூல் ராஜ்யம் முழுதும் பரவுகிறது. மக்களின் பிரதிநிதியான விராதனை மக்கள் சூழ்ந்து கொள்ளுகிறார்கள்.
விராதன் அவர்களே! மக்கள் பார்வைக்கு பண்டைய மன்னன் யுட்டாவின் சவப்பெட்டியை வைக்க வேண்டும் என்று கருத்துக் கூறிய போது சாபம் என்பது புளுகுமூட்டை என்றீர்கள். இப்போது நடந்துள்ள விபரீதங்களுக்கு உங்கள் விளக்கம் என்ன?
அர்த்தமற்ற கேள்வி
மக்களை உதாசீனப்படுத்தி விட்டு அலட்சியமாகத் தேரிலேறி விரைந்தார் விராதன். ஆனால் சிறிது தூரம் சென்றதுமே அவரது தேரின் அச்சு முறிய, குதிரைகள் தறிகெட்டு ஓட, கட்டுக்கு அடங்காத தேர் -
- ஆற்று வெள்ளத்தில் விழுந்து சுக்கு நூறாகியது.



அன்றிரவு - ஆழ்ந்து உறங்கும் வழக்கமுடைய வீரசேனர் ஏதோ கெட்ட கனவுகள் கண்டு திடுக்கிட்டு கண்விழித்தார்.
நாளை ஏதோ பயங்கரம் நிகழப் போகிறது. மன்னர் திலீபருக்குப் பேராபத்து நிச்சயம்.
அதிகாலையில் அவசரமாக மன்னரைக் காணச் சென்றார்.
வீரசேனரே நானே உம்மை அழைத்து வர ஆளனுப்ப இருந்தேன். கௌதமர் உருவாக்கியுள்ள நீர்மூழ்கிச் சாதனத்தை இன்று வெள்ளோட்டம் பார்க்கிறார்கள்.
நீங்கள் போக வேண்டாம் அரசே. நான் ஒரு பயங்கர சொப்பனம் கண்டேன்.
வீரசேனரின் கனவு பற்றிக் கேட்ட திலீபன் புன்னகைத்தார்.
தளபதியாரே ஒரு அசட்டுக் கனவுக்காக என் முடிவை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை.
ஏதோ விபரீதம் நிகழப் போகிறது என்று என் உள் மனம் கூறுகிறது.
மன்னர் பிடிவாதமாகக் கிளம்பி விட்டார். மன்னர் படகில் செல்வதை வீரசேனர் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.
மீண்டும் நான் மன்னரைக் காண்பேனா!
நடுக்கடலின் ஆழமான பகுதியில் தூண்கள் நிறுவப்பட்டு நீர்மூழ்கிச் சாதனம் கடலில் இறக்கப்படுவதற்குத் தயாராக இருந்தது.
மன்னரின் படகு வந்து விட்டது.


ஆழம் அறிய முடியாத அப் பகுதியில், மன்னரை ஏற்றிக் கொண்டு அந்த நீர்மூழ்கிச் சாதனம் கடலுக்குள் இறக்கப் பட்டது.
நிதானமாக நீருக்குள் செலுத்துங்கள்.
கீழே.... கீழே.... ஆழ்கடலின் அதலபாதாளத்தில்....
அப்போது அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது! கடலுக்கு மேலே,மேடைப் பகுதியில் நீர்மூழ்கியை இயக்கும் பணியாளர்கள் சங்கிலிகளின் பிடிமானம் இற்றுப் போனதைக் கண்டு பீதியடைந்து,நகருக்குச் செய்தி அனுப்பினார்கள் புறாவின் மூலம்.
ஆழ்கடலின் அடியில் ஒரு ராட்சத ஐந்து, நீர்மூழ்கி சாதனத்தைப் பற்றி இழுத்துக் கொண்டதை மேலிருந் தவர்கள் அறியவில்லை. செய்தி நகரை எட்டியதும் –
கவலையோடு கடற்கரையில் காத் திருந்த வீரசேனர் -
சந்தேகப்பட்டபடியே ஆயிற்று. படகை ஆயத்தப்படுத்துங்கள் சீக்கிரம்.
இப்போதே தளபதியாரே


அவசரமாகப் படகைச் செலுத்த... சிறிது தூரம் சென்ற படகு திடீரென்று தீப்பிடித்து வெடித்தது...
...சின்னாபின்னமாகிக் கடலில் சிதறியது.... ரதங்களும் படகுகளும் இப்படி திடீரென்று விபத்துக்குள்ளாகி நாசமாவானேன்..? யுட்டாவின் சாபமா?
அண்டை நாட்டுக்கு அரசியல் விஷயமாக விரைந்து கொண்டிருந்த மன்னரின் தம்பி சகரன் வழி மறிக்கப்படுகிறான்.
இவன் ஏன் என்னைத் தடுக்கிறான்!
இளவரசே! அவசரம் நில்லுங்கள்.
வேதனை முகத்துடன் ஒரு திரிசூல் வீரன் சகரன் அருகே வந்தான்.
உங்களை உடனே நாடு திரும்பும்படி மன்னர் உத்திரவிட்டுள்ளார்.
ஏன்?
மன்னர் கடலில் ஒரு விபத்தில் சிக்கித் தப்பினார். வீரசேனர் மற்றொரு விபத்தில் சிக்கி மரணப்படுக்கையில் இருக்கிறார்!
யுட்டா சவத்தின் சாபத்துக்கும் நாட்டில் பலர் விபத்தில் மரணமடைவதற்கும் தொடர்பிருப்பதாகக் கருதுகிறார்கள்.
நிஜமாகவா?
(தொடரும்)

# பேரன்களா நீங்க?

நகர் எல்லைக்கு இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உருவாகியிருந்த புதிய காலனி அது. அந்தக் காலனி மக்களின் போக்குவரத்துக்கென்று அரசாங்கப் பேருந்து வசதியிருந்தது. அரை மணி நேரத்துக்கு ஒரு வண்டி. பெரும்பாலும் வண்டியில் ஜேஜே என்று கூட்டம் இருக்கும்.

அன்றைக்கும் அப்படித்தான். பேருந்து சரியான நேரத்துக்கு வராததால், கூட்டம் சற்று அதிகமாகவே இருந்தது. அமலநாதனும் அரவிந்தனும் ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"இந்த வண்டி சரியான நேரத்துக்குப் போனாலே, பஸ் ஸ்டாப்பிலே இருந்து பள்ளிக்கு நாம் ஓட்டமும் நடையுமாகத்தான் போகணும். இல்லேன்னா நேரமாயிடும். வண்டி லேட்டா வேற வந்



திருக்கே?" என்றான் அரவிந்தன்.

"முதல்லே உள்ளே ஏறி நிற்கிறதுக்காவது இடம் கிடைக்குதான்னு பார்ப்போம்" என்று சலிப்போடு சொன்னான் அமலநாதன்.

கூட்டத்தோடு கூட்டமாக முண்டி அடித்துக் கொண்டு உள்ளே ஏறிவிட்டார்கள் இருவரும். இருவருக்குமே உட்கார்வதற்கு இடம் கிடைக்கவில்லை. ஒருவர் மூச்சு ஒருவர் மேலே சூட்டைப் பரப்பிக் கொண்டிருந்தது.

வண்டி புறப்பட்டது. அமநாதனுக்கு முன்னே ஒரு பெரியவர் கையிலே ஒரு கனமான பையை வைத்துக் கொண்டு முன்னுக்கும் பின்னுக்குமாக அசைந்தாடியபடி நின்றிருந்தார்.

"பாவம், தாத்தா! நிற்கக் கஷ்டப்படறார்" என்றான் அரவிந்தனிடம் அமலன்.

**பூவை அமுதன்**

"பையை நாம் வாங்கிக் கொள்ளலாம்?" என்றான் அரவிந்தன்.

அவர்கள் முதுகிலே ஏற்கெனவே மூட்டையாகப் புத்தகப்பை கனத்துக் கொண்டிருந்தது. இருந்தாலும் தாத்தாவின் பையைத் தானே பிடித்துக் கொள்ள முயன்றான் அமலன்.

"இருக்கட்டும் தம்பி!" என்று மறுத்தார் தாத்தா.

"நிற்கவே முடியல்லே. கையிலே வேற கனம்" என்றான் அரவிந்தன்.

"என் பாரத்தை நான்தானே சுமக்கணும்" என்று இலேசாகச் சிரித்தார் தாத்தா.

"அடுத்த வண்டி வந்தாலும்தான் என்ன? கூட்டத்திலே தாத்தா முந்தி, ஓடிப் போய்க் குந்திக்க முடியுமா?" என்று குத்தலாகவே மறுபடி பேசினான் அதே வாலிபன்.

"அண்ணா! உங்களைப் போல உள்ளவங்களோட போட்டி போட்டுக் கொண்டு தாத்தாவால் ஏறி உட்கார்ந்துக்க முடியுமா? கிண்டல் பண்ணாதீங்க" என்று சற்று வெறுப்பாகவே சொன்னான் அரவிந்தன்.

அதற்குள் பேருந்து இரண்டு மூன்று



அமலனுக்கு வேதனையாக இருந்தது. அதைவிட வேதனையாக இருந்தது பக்கத்திலே வாலிபன் ஒருவன் தாத்தா ஆடிக் கொண்டு நிற்பதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

"அண்ணா! நீங்க எழுந்து தாத்தாவுக்கு உட்கார இடம் கொடுங்களேன்?" என்று கெஞ்சும் பாவனையில் கேட்டான் அமலன்.

"நான் ஆபீசுக்குப் போகணும். தாத்தாவுக்கு என்ன அவசரம்? இவர் அடுத்த வண்டியிலே வந்திருக்கலாமே?" என்று சுரீரென்று கோபம் வந்தவனைப் போல், சட்டென்று சொல்லி விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான் அந்த வாலிபன்.

ஸ்டாப்புகளைத் தாண்டி வந்து, ஓரிடத்தில் நின்றது. ஆண்கள் பக்கம் அதிகமாக இறங்கவில்லை. பெண்களில் நாலைந்து பேர் இடித்துத் தள்ளிக் கொண்டு வேகவேகமாக இறங்கினார்கள். அவர்கள் இறங்குவதற்குள் 'சீக்கிரம் சீக்கிரம்' என்று ஐந்தாறு முறை குரல் கொடுத்து விட்டார் நடத்துநர்.

"வண்டி வந்தது லேட்டு. அதைக் கேட்க யாரும் இல்லே. ஆளுங்க இறங்கறதுக்குள்ளே இப்படி அவசரப் பட்டால் எப்படி?" என்று வெறுப்புடன் கேட்டுக் கொண்டே, மெதுவாக இறங்கினாள் ஒரு பாட்டி.

அப்போது நடத்துநரின் முகத்தைக் கவனித்தான் அமலன். அவர் முகத்தில் வெறுப்பு குதித்துக் கொண்டிருந்தது.

"எல்லோருக்குமே வாய் ஜாஸ்தி,

எந்த வயசாயிருந்தாலும்" என்று முணு முணுத்துக் கொண்டார் நடத்துநர்.

தாத்தா தமக்குள் பேசிக் கொள்வதைப் போல் சொல்லிக் கொண்டார் மெதுவாக, "உண்மையைச் சொன்னா யாருக்குமே பிடிக்கறதில்லே, பார்த்தியா?"

தன்னை ஒரு பெரிய மனிதனாகப் பாவித்து, அவர் தன்னிடம் சொல்வதைப் போலிருந்தது அமலனின் காதுக்கருகே தாத்தா முணுமுணுத்தது. அப்போது சற்று பரபரப்போடு, "டேய் அமல்.

"ஒன்னு செய்யலாம். ரெண்டு லேடீஸையும் ஒன்னா உட்காரச் சொல்லலாம். ஒரு சீட்டிலே தாத்தா உட்காரலாமே? பொம்பளை பக்கத்திலேதானே உட்காரக் கூடாது?" என்றான் அரவிந்தன்.

அவன் சொன்னவுடனேயே அமலன் அங்கே நகர்ந்து "அக்கா! நீங்க ரெண்டு பேரும் ஒரு சீட்லே உட்கார்ந்துக்குங்க. எழுந்து தாத்தவுக்கு இடம் கொடுங்க!" என்று ஒரு பெண்ணை



அமல், லேடீஸ் சீட்டைப் பாருடா" என்று காட்டினான் அரவிந்தன்.

பெண்கள் இருக்கையில், இரண்டு பேர் அமரக்கூடிய இரண்டு இடங்களில் ஒவ்வொருவர்தான் அமர்ந்திருந்தனர்.

"நாம் போய் உட்கார்ந்து கொள்ளலாமா?" என்றான் அரவிந்தன்.

அதற்குள், "தாத்தா! அதோ இடம் இருக்கு பாருங்க, நீங்க உட்காருங்க!" என்றான் அமலன்.


"வேண்டாம்பா, அது பெண்களுக்குன்னு ஒதுக்கியிருக்கிற இடம்; நான் போய் உட்கார்ந்தா, பக்கத்திலேயிருக்கிற பொண்ணு முகம் சுண்டிப் போயிடும்" என்றார் தாத்தா.

"இல்லே தாத்தா, வயசானவர் நீங்க. உட்காரலாம். உட்காருங்க" என்றான் வேண்டினான்.

அந்தப் பெண்ணுக்கு முப்பது வயதிருக்கும். நவநாகரிகமாக உடுத்தியிருந்தாள். அவள் அமலனை ஒரு புழுவைப் பார்ப்பதைப் போல் அவ்வளவு அலட்சியமாகவும் வெறுப்பாகவும் பார்த்துவிட்டு, அழுத்தமாக அதே இடத்தில் உட்கார்ந்திருந்தாள்.

அமலன் அவளுக்குப் பின் சீட்டிலிருந்த நடுத்தர வயதான பெண்மணியைப் பார்த்தான். அவளுக்கும் முப்பது முப்பத்தைந்து வயதிற்குள்தான் இருக்கும். இரண்டு பெண்களுமே எங்கோ அலுவலகத்தில் பெரிய உத்தியோகம் பார்ப்பவர்கள் போலத்தான் தோற்றம் தெரிந்தது.

அடுத்த சீட்டுப் பெண்மணியும், "பையா! உன் வேலையைப் பாரு!



"டாக்டர், நககத்தி வரணும்னா என்ன பண்ணணும்?"

"ஏண்டா?"

"நாளைக்கு பரீட்சை வருது!"

— கே. சோமசேகர்

அந்தத் தாத்தாவுக்குப் பேரன்களா நீங்க ரெண்டு பேரும்?" என்று ஏதோ பெரிய ஜோக் சொல்லிவிட்டதைப் போல் கேட்டுத்தானே சிரித்துக் கொண்டான்.

அதையெல்லாம் தாத்தா கவனித்துக் கொண்டுதானிருந்தார். அவர் ஏதுமே பேசவில்லை. ஆனால், பார்த்துக் கொண்டிருந்த அரவிந்தனுக்குப் பொறுக்க வில்லை.

"என்னங்கம்மா! நீங்கள் மட்டும் தானா காக கொடுத்து 'டிக்கெட்' வாங்கியிருக்கீங்க? தாத்தாவும் தானே வாங்கியிருக்கார்? நாங்களும்தானே வாங்கியிருக்கோம்?" என்று கேட்டான்.

"யாரு இல்லேன்னா?" - ஒருத்தி கேட்டாள். "ஆண்கள் பக்கம் இடம் இருந்தால், உட்கார்ந்துக்கலாமே?" என் றாள் மற்றொருத்தி.

"அதோ பாருங்கம்மா! ஆண்கள் சீட்டிலே பெண்களும் கூடத்தான் உட் கார்ந்திருக்காங்க!" என்று முன்வரிசை யில் அமர்ந்திருந்தவர்களைச் சுட்டிக் காட்டினான் அமலன்.

"அங்கே... ஆண்களுக்கு மட்டுமின்னு போர்டு இருக்கா?" - கிண்டலடித்தாள் ஒருத்தி.

"அதுசரி, நீங்க ஒரு சீட்டிலேதானே உட்காரணும்? பக்கதுச் சீட்டுக்கு நீங்க காக கொடுத்து டிக்கெட் வாங்கல்லே" என்று டக்கென்று அவள் பக்கத்தில் அமர்ந்து ஓரமாக ஒதுங்கிக் கொண் டான் அரவிந்தன். அடுத்த நொடியே அமலனும், பின் சீட்டில் அமர்ந்து கொண்டான்.

யாரும் சற்றும் எதிர் பாராதவிதமாக; அந்தப் பெண்கள் எண்ணியே பாராத விதமாக சிறுவர்கள் இருவரும், அப்படி அமர்ந்து கொண்ட தைப் பார்த்து தாத்தா வெகுவாக ரசித் தார். குழிவிழுந்த அவர் கண்களிலே மகிழ்ச்சி கூத்தாடியது.

பையன்கள் தங்கள் பக்கத்தில் அமர்ந்து விட்டதால், தங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது. இரண்டு பெண் களுமே கோபத்துடன் எழுந்து நின் றார்கள்.

"கண்டக்டர்! இங்கே பாருங்க, லேடீஸ் சீட்டிலே இந்தப் பையன்கள்..."

இரண்டு பெண்களும் கூறி முடிக்கு முன், கண்டக்டர் மிக சாதாரணமாக, ஆனால் உடனடியாகச் சொன்னார், "இவரு உங்க தாத்தா மாதிரி. இந்தப் பசங்க உங்க தம்பிங்க மாதிரி. இதுக்குப் போயி பெரிசா ஆர்ப்பாட்டம் பண்ணா தீங்க."

அவர்களால் ஏதும் பேச முடிய வில்லை. ஆனால் சற்றும் தாமதியாமல், பின்னால் இருந்தவள், "நான் அங்கே வந்திடறேன்" என்றாள்.

"நான் அப்பவே கேட்டுக் கிட்டதும் அதைத்தானே?" என்று சட்டென்று எழுந்து, அவளுக்கு இடம் விட்டான் அமலன்.

அடுத்த நொடியில் அமலனும் அமரனும் ஒரே சீட்டில் இருந்தனர்.

"தாத்தா! வாங்க... நீங்கள் உட்காருங்க!" என்று எழுந்து கொண்டான் அமலன்.

"நான் பெறாது பெற்ற பேரன்களே, இருங்கப்பா. நாம மூணு பேருமே இந்தச் சீட்டிலே ஒன்னா உட்காரலாம். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு" என்று சிரித்துக் கொண்டே வந்த தாத்தா ஓர மாக உட்கார்ந்தார்.

கண்டிப்பா லேட்டாப் போயி பெஞ்சி மேல் எறி நிற்கப் போகிறோம், என்ற நினைப்பு மனத்தை உறுத்தி னாலும், வயதான தாத்தாவுக்கு உட்கார இடம் பண்ணிக் கொடுத்தோம் என்ற தெம்பு, தண்டனையை வாங்கிக் கொள்ள அவர்களைத் தயாராக்கியது.



# பழியை நானே...

வகுப்புக்குள் ஒரு பிரளயம் காத்திருக்கிறது என்ற உண்மை தெரியாமல், பத்தாம் வகுப்பு மாணவர்கள் அமைதியாக வகுப்புக்குள் நுழைந்தார்கள்.

மூன்று நிமிடங்கள் கழித்து முதல் பாடவேளை ஆரம்பிப்பதற்கான மணி அடிக்க... வகுப்புக்குள் நுழைந்தார் ஆங்கில ஆசிரியர் அழகரசன்.

வருகைப் பதிவு எடுத்து முடித்து விட்டு ஆங்கிலப் புத்தகத்தை விரித்தார்.

தெளிவான குரலில் ஓர் ஆங்கிலப் பாடலை நடத்த ஆரம்பித்தார் அழகரசன். மாணவர்கள் அமைதியாக பாடலைக் கவனிக்க ஆரம்பித்தனர்.

அப்பொழுது...

“சார்... என் ஜாமென்ட்ரி பாக்ஸ்ல வச்சிருந்த ஐந்து ரூபாயைக் காணோம்,” மூன்றாவது பெஞ்சில் உட்கார்ந்திருந்த நவீன் உரத்த குரலில் சொல்ல...

அழகரசனின் முகத்தில் கோப ரேகைகள்!

“ஓ! இந்தக் கிளாஸ் மாணவர்களுக்கு திருட்டுப் பழக்கம் கூட இருக்குதா? நவீனின் பணத்தை யாருடா திருடினது? எழுந்து நில்லு.”

மாணவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்களே தவிர யாரும் எழுந்து நிற்கவில்லை.

அழகரசனின் முகம் கோபத்தில் கொஞ்சம் கொஞ்சமாகச் சிவக்க ஆரம்பித்தது.

“நவீன்... நீ ஒண்ணு செய். எல்லா மாணவர்களையும் நல்லாச் சோதனை போடு. இப்பத்தான் முதல் பீரியடே ஆரம்பமாகுது. அதனால எவனும் பணத்தோட வீட்டுக்குப் போயிருக்க முடியாது.”

பத்து நிமிடத் தேடலுக்குப் பின்...

“சார்... கார்த்திக் டிராயர் பாக்கெட்ல என் புது ஐந்து ரூபாய் நோட்டு இருக்குது.”

கார்த்திக்கா பணத்தைத் திருடியவன்? எல்லோருக்குமே அதிர்ச்சி.

கொப்பளிக்கும் கோபத்தோடு கார்த்திக்கை நெருங்கினார் அழகரசன்.

“டேய்... நவீன் பணத்தை நீதானே திருடினே?” - அதிக டெஸிமல்களில் அழகரசன் கேட்டார்...

“சார்... அந்தப் பணத்தை நான் திருடலை.”

பளாரென்று ஓர் அடி விழுந்தது!

**இரா. வசந்தராசன்**



ஆங்கில ஆசிரியரின் கோபத்தைக் கண்டு வகுப்பே திகைத்தது.

"அயோக்கியா, பொய் வேற சொல்றியா? நவீன்... இப்பவே போய் இவன் அப்பாவை இங்கே வரச் சொல். இவனுக்கு எச்.எம்கிட்ட சொல்லி டி.சி. கொடுத்திடலாம்."

"சார்... கார்த்திக்கோட அப்பா சின்ன வயசுலயே இறந்துட்டார். இப்ப இருக்கிறது கார்த்திக்கோட அம்மா தான்."

"அப்ப அவன் அம்மாவை வரச் சொல்."

இதுவரை தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்த கார்த்திக், அழகரசன் சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பெரிதாக அதிர்ந்தான். அவன் முகத்தில் பயமேகங்களின் அணிவகுப்பு நடக்க ஆரம்பித்தது.

"சார்... என்னை மன்னிச்சிடுங்க. நவீன் பணத்தை நான்தான் திருடினேன். பணத்தை இப்பவே திருப்பிக் கொடுத்துடறேன். ஆனா, தயவு செஞ்சி இந்த விஷயத்தை என் அம்மாகிட்ட மட்டும் சொல்லிடாதீங்க. என் அம்மாவுக்குத் தெரிஞ்சா அவங்க அவமானம் தாங்காம தற்கொலை பண்ணிக்குவாங்க."

"அப்ப நவீன் பணத்தை அவன்கிட்டயே கொடுத்திடு."


கலங்கிய கண்களோடு நவீனிடம் பணத்தைக் கொடுத்தான் கார்த்திக்.

"இனிமேல மத்தவங்க பணத்தைத் திருடக் கூடாது. இதுதான் கடைசி எச்சரிக்கை. மீறினால் விளைவு கடுமையாக இருக்கும்."

மௌனமாகத் தலையசைத்தான் கார்த்திக்.

**மா**லை ஐந்தரை மணி. மேற்கு வானில் அஸ்தமிக்கும் சூரியனின் வண்ண ஜாலங்கள். பறவைகள் கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. வீசிய காற்றுக்கு ஏற்பப் பச்சைப் போர்வையைப் போர்த்தியிருந்த மரங்கள் நாட்டியமாடிக் கொண்டிருந்தன.

ஜன்னலருகே நின்று தெருவைப்



பார்த்துக் கொண்டிருந்த அழகரசனின் இதயத்தில் லேசான வருத்தம் கூடு கட்ட ஆரம்பித்திருந்தது. காலையில் கார்த்திக்கை அதிகம் அடித்து விட்டோமோ?

கார்த்திக்கின் கலங்கிய கண்கள் அவர் மனத்திரையில் மீண்டும் மீண்டும் பளிச்சிட...

இனம் தெரியாத சோகம் அழகரசனின் இதயத்தை ஆக்கிரமிக்க ஆரம்பித்தது.

"சார்... சார்..."

நினைவுகளில் இருந்து கலைந்து பின்னால் திரும்பினார் அழகரசன்.

அங்கே....

வியர்வை படிந்த முகத்துடன் நவீன்! கைகளில் ஒரு புது ஐந்து ரூபாய் நோட்டு.

"சார்... காலைல ஒரு தப்பு நடந்து போச்சு. ஐந்து ரூபாய் நோட்டை ஞாபகமறதியா அறிவியல் புத்தகத்தின் மத்தில வச்சிட்டு, ஜாமென்ட்ரி பாக்ஸ்ல வச்சதா நினைச்சி உங்ககிட்ட தப்பாப் புகார் சொல்லிட்டேன். சாயந்திரம் வீட்ல அறிவியல் புத்தகத்தைப் படிக்க புரட்டினப்பதான் இந்த உண்மை எனக்குத் தெரிஞ்சது. காலை கார்த்திக் கொடுத்த புது ஐந்து ரூபாய் எனது இல்லை. அவன் ரூபாவேதான். இரண்டு ரூபாய் நோட்டுகளுமே புதுசு. அதனால தான் இந்தத் தவறை காலைலயே கண்டு பிடிக்க முடியாமப் போயிடுச்சி."

அழகரசனுக்குத் திக்கென்றது.

அப்படியானால் செய்யாத திருட்டைச் செய்ததாக கார்த்திக் உடனடியாக ஏன் ஒப்புக் கொண்டான்?


அவர் முகத்தில் குழப்ப ரேகைகள்!

"நவீன்... நீ ஒண்ணு செய். இப்பவே கார்த்திக்கை இங்க நான் கூப்பிட்டேன்னு சொல்லிக் கூட்டிக்கிட்டு வா."

"சரி," என்று சொல்லிவிட்டு விலகினான் நவீன்.

பத்து நிமிடங்களுக்குப் பின், நவீனும் கார்த்திக்கும் அங்கு வர...

"கார்த்திக்... காலைல உன்னை நான் கண்மூடித்தனமா அடிச்சிட்டேன். ஐ'ஆம் ஸாரி. ஆமா... காலைல நீ செய்




## எழுதும் வழி

தேர்வு எழுதும் வழியினைத்
தெரிந்து கொள்ள வேண்டும்நீ
தேர்ந்தெ டுத்த கேள்விக்கு
தெரிந்த பதிலை முன்னெழுது.

கடின மான கேள்விகள்
கண்ட போது பதில்களில்
இணக்க மான பகுதியை
எண்ணிப் பார்த்துப் பின்னெழுது

எழுதும் போது விடைகளை
எளிதில் புரியும் படியெழுது
அழகு மிளிரும் எழுத்துதான்
அதிக மதிப்பெண் அடைந்திடும்

பார்த்து எழுதும் பழக்கத்தை
மனதில் என்றும் கொள்ளாதே
பார்த்து விட்டால் தேர்வாளர்
மேலும் எழுத இயலாதே

துண்டுத் தாளில் விடைகளை
தூக்கிச் சென்று பார்த்தெழுதி
கெட்ட பெயரை வாங்காதே
கெட்டுப் போகும் உன்வாழ்வு.

நன்கு பயின்று தேர்வெழுதி
நிறைந்த மதிப்பெண் களைப்பெற்று
என்றும் வாழ்வில் வெற்றியை
எய்தும் வழிகள் காண்பாயே!

- தெ.தமிழ்க்குமரன்

யாத திருட்டை ஏன் செஞ்சதா சொன்னே? என் அடிக்குப் பயந்தா?"

"இல்லீங்க சார். நீங்க என் அம்மாவைக் கூப்பிட்டு வரச் சொன்னீங்க. அவங்க வந்தா, நான் வச்சிருந்த ஐந்து ரூபா நோட்டு எனக்கு எப்படிக் கிடைச்சதுன்னு கேப்பாங்க."

"கேட்டா, எப்படிக் கிடைச்சதுன்னு சொல்ல வேண்டியதுதானே?"

"அதைச் சொல்ல முடியாதே சார்."

கார்த்திக்கின் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

"சார்.. என் குடும்பம் ரொம்ப ஏழைக் குடும்பம். என் அம்மா கூலி வேலைக்குப் போய் பணம் சம்பாதிச்சி என்னை படிக்க வைக்கிறாங்க. நிறைய சமயங்கள்ல அவங்க கொடுக்கிற பணம் எனக்குப் பத்தறது இல்லை. அதனால என் அம்மாவின் கஷ்டத்தைக் குறைக்க, என் அம்மாவுக்குத் தெரியாம நானும் சின்னச் சின்ன கூலி வேலைக்குப் போறேன். அதுல கிடைச்ச காசுதான் காலைல நான் வச்சிருந்தது. நான் கூலி வேலைக்குப் போறது தெரிஞ்சா, என் அம்மா அழுவாங்க. ரொம்ப வருத்தப் படுவாங்க. அவங்களுக்கு மனக்கஷ்டத்தைக் கொடுக்கக் கூடாதுன்னுதான் திருட்டுப் பழியை நானே ஏத்துகிட்டேன்."

"கார்த்திக்... படிக்கிறப்பவே பணம் சம்பாதிக்கிற உன் திறமையையும், உன் அம்மா மேல நீ வச்சிருக்கிற பாசத்தையும் நான் 'மனதாரப் பாராட்டறேன். கூலி வேலைக்குப் போய் பணம் சம்பாதிக்கிறது கேவலமானதுன்னு நினைக்காதே. திருடி பணம் சம்பாதிக்கிறதும், பிச்சை எடுத்துப் பணம் சம்பாதிக்கிறதும்தான் கேவலமான செயல்கள். உடலை வருத்தி நியாயமா பணம் சம்பாதிக்கிறது புனிதமான ஒரு பணி. அந்தப் புனிதமான செயலைச் செஞ்சுக்கிட்டு இருக்கிற நீ, இன்றைய மாணவர் உலகத்துக்கே ஒரு நல்ல எடுத்துக்காட்டு. உனக்கு நல்ல எதிர்காலம் காத்துக்கிட்டு இருக்குது."

கார்த்திக்கைப் பெருமையுடன் அணைத்துக் கொண்டார் ஆசிரியர்.


# முத்துச் சிப்பி எத்தனை முட்டைகள் இடும்?

ரேவதி

மணல் தரையை இறுகப் பற்றிக் கொண்டிருந்த இலட்சக் கணக்கான முத்துச் சிப்பிகள் தங்கள் மெல்லுடலில் உள்ள சின்னஞ்சிறு இழைகளை அசைத்து நீரில் சலனத்தை உண்டாக்கின. கடல் நீருடன் மிக நுண்ணிய பாசிகளும் பிளாங்டன் வகை நுண்ணிய உயிர் வகைகளும் சிப்பிகளின் திறந்த ஓட்டினுள் புகுந்து உணவாயின.

''இந்த முறை எத்தனை இலட்சம் முட்டைகளை இட்டிருப்பே?'' என்று அம்மா சிப்பியைக் கேட்டது அப்பா சிப்பி.

''நான்கு இலட்சம் முடிந்து, ஐந்தாவது இலட்சம் தொடங்கி, இரண்டாயிரம் ஆகிவிட்டது'', என்று கூறிய அம்மா, ''எத்தனை இலட்சம் இட்டு என்ன பயன்? குஞ்சுகள் வளர்ந்து சிப்பியானதும் நண்டுகளும், சங்குகளும், நட்சத்திர மீன்களும் போட்டி போட்டுக் கொண்டு தேடி வந்து இரை யாக்கிச் செல்கின்றனவே'' என்று அழுதது.



''ஒரு வேளை இவைகளின் பசியைத் தீர்ப்பதற்காகத்தான் இறைவன் இப்படி நம் இனத்தை இலட்சக் கணக்கில் முட்டையிட வைத்திருக்கிறானோ என்னவோ? இவைகளால் நமது முட்டைகளுக்கு அழிவு ஏற்படாமல் இருந்தால், கடல் மட்டத்திலும் சரி, நீருக்கடியிலும் சரி நமது முத்துச் சிப்பிகள்தான் நிறைந்திருக்கும். இந்த ஆபத்தைத் தடுக்கத்தான் இறைவன் இப்படி ஓர் ஏற்பாட்டைப் புகுத்தியிருக்கிறானோ என்னவோ'' என்றது அப்பா சிப்பி.

''எல்லா உயிர்களுக்கும் பகைவர்களிடம் இருந்து தற்காப்புச் செய்து கொள்ள இறைவன் ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறான். ஆனால், நமக்கு அப்படி எதுவும் வைக்கவில்லை. தலை இல்லாதவர்களாக, ஆபத்து என்றால் ஓடிப் போக முடியாத கால் அற்றவர்களாக இருக்கிறோமே!'' என்று கலங்கியது அம்மா சிப்பி.


அம்மா கூறி முடிக்கவில்லை. நட்சத்திர மீன் கூட்டம் ஒன்று தங்கள் கைகளை விசிக் கொண்டு அங்கே வந்து சிப்பிக் கூட்டத்தில் புகுந்தன. வந்துள்ள அபாயத்தை உணர்ந்த சிப்பிகள், தங்கள் மேல் ஓடுகளை இறுக மூடிக் கொண்டன. நட்சத்திர மீன்கள் விடவில்லை. சிப்பிகளை இறுகப் பற்றி, மூடியைத் திறக்க முயன்றன. இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி நட்சத்திர மீன்களுக்குத்தான். தங்கள் வயிற்றையே சிப்பிகளுக்குள் தள்ளி, முத்துச் சிப்பிகளின் மெல்லுடலை உறுஞ்சிக் கொண்டன. இப்படி ஒன்றா இரண்டா, இலட்சக் கணக்

கான சிப்பிகள் மடிந்தன. சிரணிக்க முடியாத சிப்பி ஓடுகள் இலட்சக் கணக்கில் மிதந்து மிதந்து கரை சேர்ந்து, மணற் பரப்பில், பளபளப்பான கண்கவர் சித்திரக் கோலங்களைத் தாங்கி, பார்ப்போரை எடுத்துக் கொள்ளத் தூண்டின. இவையே கிளிஞ்சல்கள்!

அம்மா சிப்பியின் வருத்தம் குறையவில்லை.

"வருந்தாதே. இப்படி மற்றவர்களது பசியைப் போக்கிக் கொள்ள நாம் பயன் பட்டாக வேண்டும் என்பதுதான் இயற்கையின் சட்டம் என்றால் இதை மாற்ற நம்மால் முடியுமா? இதற்காக வருந்துவது அசட்டுத்தனம் இல்லையா?'' என்று கேட்டது அப்பா சிப்பி.

திடீரென்று நீரில் அதிர்வு தெரிந்தது. கூடையோடு ஒருவன், மூச்சை அடக்கிக் கொண்டு நீந்தியவாறு இறங்கி வருவது



தெரிந்தது.

"ஐயோ, முத்துக் குளிப்பவனைப் போல இருக்கே! நண்டுக்கும், சங்குக்கும், நட்சத்திர மீனுக்கும் போக தப்பிப் பிழைத்திருக்கும் மீதி சிப்பியை அள்ளிக் கொண்டு போக இவங்க வர ஆரம்பிச்சுட்டாங்களா? நான் இனிமே முட்டை இட மாட்டேன்'' என்று அழுதது அம்மா சிப்பி.

கயிற்றைப் பிடித்துக் கொண்டு இறங்கிய மனிதன் சிப்பிகளை அள்ளிக் கூடைக்குள் போட்டு நிரப்பிக் கொண்டான். மூடியைப் போட்டு இறுக்கி விட்டுக் கயிறை அசைத்தான். கூடையை மேலே இழுத்துக் கொண்டார்கள். அவனும் மேலே போனான். கூடைக்குள் அம்மா சிப்பியும் அப்பாசிப்பியும் சிக்கிக் கொண்டிருந்தன.

கடலில் மிதந்த விசைப் படகில் பெரிது பெரிதாக இரும்புத் தொட்டிகள் இருந்தன. சிப்பிகள் நிறைந்த கூடையை இரும்புத் தொட்டிக்குள் கவிழ்த்தார்கள். இப்படி ஏராளமான சிப்பிகள் சேர்க்கப் பட்டன. ஏற்கெனவே தொட்டிகளில் பாதிக்கு நீரை நிரப்பியிருந்தார்கள். அதனால் சிப்பிகள் இறந்து போகாது மூச்சு விட்டுக் கிடந்தன.

படகை, நதி கடலோடு கலக்கும் முகத்துவாரப் படுகைக்குக் கொண்டு போனார்கள். அங்கே, ஆழமில்லாத ஆற்று நீரைக் கொண்டு பாத்திகள் கட்டியிருந்தார்கள். கூடியிருந்த ஆட்கள், மிகவும் கவனத்துடன் சிப்பிகளை எடுத்துப் பார்த்தார்கள். பெரிய பெட்டிக் கிளிஞ்சல்களில் சிப்பியின் மெல்லுடல் தான் இருந்ததே தவிர, முத்து காணப் படவில்லை! சிலவற்றில் மட்டுமே ஒளி சிந்திய முத்துகள் இருந்தன. பெரும்பாலனவற்றில் முத்துகள் இல்லை. இருந்த ஒருசில முத்துகள் கூட, பொலிவு குன்றிக் கறுமையாக இருந்தன. ஒரு சில பெரிதாக இருந்தன, ஒளி சிந்தின! துவரம் பருப்பு அளவுக்கு ஏராளமான சின்ன முத்துச்சிப்பிகள் கிடைத்திருந்தன. பணியாட்கள் இவைகளை கவனமாகப் பிரித்து எடுத்தனர்.

இந்தப் பணிகளையெல்லாம் மிகவும் கவனமாக மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தனர் ஒரு தாயும், அவளது மகளும். மகள் என்பவள் எட்டு வயதுச் சிறுமிதான்.

"அம்மா, இந்தக் குட்டிச் சிப்பிகளை இவர்கள் என்ன பண்ணப் போகிறார்கள்?'' என்று கேட்டாள் சிறுமி.

''இவைகளையெல்லாம் தாத்தாவோட முத்துப் பண்ணைக்கு எடுத்துக் கொண்டு போகப் போகிறார்கள்'' என்றாள் அம்மா.

"பெரிய சிப்பிகளை என்ன பண்ணுவார்கள் அம்மா? முத்துக்களைத்தான் நாம் எடுத்துக் கொண்டு விட்டோமே?''

"முத்துச் சிப்பிகள் கால்ஷியம் சத்து

நிறைந்தவை. அசைவப் பிரியர்கள் கூட்டு செய்து சாப்பிட இவைகளை நல்ல விலைக்கு வாங்கிக் கொண்டு போவார்கள். பெரிய சிப்பிகளை இரும்புக் கூடைகளில் இட்டு மறுபடி கடல் நீருக்கடியில் விட்டு வைப்பார்கள். இவை, கூடைகளில் இலட்சக் கணக்கில் முட்டை இடும். இவற்றை நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடி வெளியே எடுப்பார்கள். இதற்குள் இந்த முத்துகள் நன்கு வளர்ந்து பளபளப்புடன் இருக்கும். இவைகளை வெளியே எடுத்து மேல் ஓட்டில் சின்ன ஓட்டை செய்து அவைகளில் உடைக்கப்பட்ட மிகச் சிறிய முத்துத் துகள்களை இட்டு மூடி, கூடைக்குள் வைத்துக் கடலுக்குள் தொங்க விட்டு விடுவார்கள். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இவைகளை வெளியே எடுத்துப் பார்த்தால், இவைகளுக்குள் நல் முத்து இருக்கும். இவைகளைக் கல்சர் முத்து என்பார்கள்."

"அப்படியானால் இவை செயற்கை முத்துகளா?"

"இவை செயற்கை முத்துகள் அல்ல. இயற்கையாகத் தயாரிக்கப்பட்ட முத்துகளே இவை. ''முத்தை எடுத்த பிறகு இவைகளை உணவாக்கிக் கொள்ளலாம். சிப்பிகள் சுண்ணாம்புச் சத்து மிக்கவை."



"முத்து எப்படி உண்டாகும்?"

''முத்துச் சிப்பிகள் மிகவும் மென்மையான உடல் படைத்தவை. பெரிய சிப்பிகளைப் பார்த்தால் தோலுரித்த நுங்கு மாதிரி இருக்கும். இவை இருக்கும் கூடுகளுக்குள், உறுத்தலான எந்தப் பொருளாவது நுழைந்து விட்டால் இவை நவிக்கும். இந்த உறுத்தலைச் சமாளிக்க இவை தங்கள் உடலில் இருந்து ஒரு நீரைச் சுரக்கின்றன. இவை கொழுகொழுப்பாகவும், பளபளவென்றும் இருக்கும். நாளடைவில் இந்தப் 'பளபள' சுரப்பு நீர் இறுகி, உருண்டு திரண்டு ஒளி வீசும் முத்தாகின்றன.

கிறிஸ்து பிறக்குமுன்பே கிரேக்கர்களும், ரோம் நாட்டு மக்களும் முத்துப் பண்ணைகளை வளர்த்து வந்தார்களாம். பாண்டிய நாட்டின் கொற்கையில் எடுக்கப்படும் முத்துக்கு உலகெங்கும் மதிப்பு இருந்ததாம்!"

"அம்மா, நகையாக அணிய மட்டும் தானே முத்து பயன்படுகிறது?"

"முதலில் முத்துகள் நகைக்காக மட்டுமே வளர்க்கப்பட்டன. இவை ஏராளமான கண்ணாம்புச் சத்துடையவை என்பதை அறிந்த பிறகு, உணவுக்காகவே இவை பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன. முத்துச் சிப்பிகளின் கூடுகளான கிளிஞ்சல்கள் பக்குவப்படுத்தப்பட்டு, தீவனத்தில் கலந்து கோழிகளுக்கு சிறந்த சத்துணவாகத் தரப்படுகிறது. சிப்பிகளின் கிளிஞ்சல்கள் வெந்த பிறகு வெள்ளைப் பூச்சுக்கு ஒரு பளபளப்பைத் தருகின்றன. முத்து பஸ்மம், சில நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. முத்து ஓட்டின் சிப்பிக் கிளிஞ்சல்களைக் கொண்டு எத்தனை அழகான பொம்மைகள், தோரணங்கள் எல்லாம் செய்கிறார்கள் தெரியுமா? கடற்கரைக்குப் போனால், இந்த அழகுப் பொருட்களை எல்லாம் விற்கும் கடைகளைக்



காணலாம்" என்றாள் அம்மா.

## அறிவியல் உண்மைகள்

* முத்து நவமணிகளில் ஒன்று. முத்துச் சிப்பி மெல்லுடலிகள் (Mollusca) இனத்தைச் சேர்ந்தவை. கிளிஞ்சல்கள் என்ற ஓடுகளே இவைகளுக்குப் பாதுகாப்பு. இவற்றின் உட்பக்கம் வெண்மையாக இருக்கும்.
* உடலில் தலை எனத் தனிப் பகுதி இல்லை. கால்களும் இல்லை. அதனால் இடமாற்றம் இன்றி ஒரே இடத்தில் மணலுக்கு அடியிலோ, பாறைகளிலோ இருக்கும்.
* இவற்றின் இரத்தம் வண்ண மற்றது.
* கிளிஞ்சல் பெட்டிக்குள் இருக்கும் சிப்பியினுள் ஏதேனும் உறுத்தல் தரக்கூடிய பொருளோ, இல்லை ஒரு புழுவோ புகுந்து விட்டால், உறுத்தலைத் தாங்கிக் கொள்ள இது சுரக்கும் பளபளப்பான வெண்மை திரவம், நாளடைவில் உருண்டு, திரண்டு இறுகி பளபளக்கும் முத்தாகிறது.
* முத்து, ஒளியைப் புகவிடும், பிரதிபலிக்கும். வெண்மை தவிர இளஞ் சிவப்பு, நீலம், கறுப்பு நிறங்களிலும் உண்டு. இருப்பினும் வெண் முத்துக்களே சர்வ சாதாரணம்; மதிப்புமிக்கவை; சிறந்தவை. கறுப்பு முத்து கிடைப்பதற்கு அரியது. விலை மிக்கது.
* செயற்கை முறையிலும் முத்தைத் தயாரிக்கிறார்கள். அதாவது கிளிஞ்சல் பெட்டிக்குள் உறுத்தும் பொருளைப் புகுத்தி, அதில் முத்து உருவாகச் செய்வார்கள். ஜப்பானில் தயாராகும் கல்சர் செயற்கை முத்துக்கள் தரம்மிக்கவை.
* முத்துச் சிப்பிகள் இலட்சக் கணக்கில் முட்டையிடுகின்றன. பெரும் பாலானவை அழிக்கப்பட்டு விடுகின் றன.
* முத்துச் சிப்பி ஒரு வகை உணவும் கூட.



ஆடம்சன் என்பவர் பல தொழில் புரிந்து கென்யா காடுகளில் வேட்டைக் காரராகவும், வேட்டையாடும் உல்லாசப் பயணிகளின் வழிகாட்டியாகவும் இருந்தார்.

30 ஆவது வயதில் இவரது வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. மிருகங்களின் மீது அன்பும், பரிவும் கொண்டு

## விலங்குகளின் நண்பர்!

அவைகளை வளர்க்க ஆரம்பித்தார். குறிப்பாக அடிபட்ட சிங்கக் குட்டிகளைக் காக்கத் தொடங்கினார். இது பெருகி பின்னாளில் நூற்றுக்கணக்கான சிங்கங்களை வளர்க்கும்படி ஆயிற்று.

ஒரு தாயிடம் எவ்வளவு நேசம் கொள்ளுமோ அதே போல் சிங்கங்கள் இவரிடம் நேசம் கொண்டன. வேளா வேளைக்கு தவறாமல் வந்து இவரிடம் உணவு உண்டு மகிழ்ந்து விளையாடவும் பழகின. சிங்கங்கள் ஒரு நாள் கூட இவரைத் தாக்கியது இல்லை. ஆனால் தனது 80-ம் வயதில் பல வேட்டைக்காரர்களாலேயே இவர் சுடப்பட்டார்!

தமது உயிர் பிரியும் போது ஒரு குட்டி போடும் சிங்கத்தைக் காக்க வேண்டுகோள் விடுத்தார். இவர் வாழ்ந்த அந்தப் பகுதி இன்று விலங்குகளின் தேசிய சரணாலயமாக விளங்குகிறது.

கடைசி வரை இவர் திருமணமே செய்து கொள்ள வில்லை. "சிங்கங்களே எனது வாரிசு" என்று கூறிக் கொண்டிருந்தார்.


— தக்கோலம் அ. முஸ்தபா.

## கேட்கட்டுமா டாக்டர்?

- கே. ஆனந்த், நெய்வேலி.
பி. தணிகாசலம், திருச்செங்கோடு.

? பற்கள் மஞ்சள் நிறத்தில் உள்ளன. நன்றாகப் பல் தேய்த்தாலும் கறை போவதில்லை. இது எதனால்? இதனைப் போக்க என்ன செய்ய வேண்டும்?

! பற்களில் மஞ்சள் கறை தோன்றுவது 'ஃபுளூரோசிஸ்' (FLUOROSIS) எனும் நோயின் முக்கிய அறிகுறி. இது 'ஃபுளோரைடு' என்ற தாதுப் பொருள் உடம்பில் மிகுவதால் வரக் கூடிய பிரச்னை. இதற்கு சிகிச்சை எதுவும் இல்லை. இந்த நோயை ஆரம்ப நிலையில் கவனிக்கத் தவறி விட்டால், அதன் பின்பு எதுவும் செய்ய இயலாது. குறிப்பாக பற்களின் மஞ்சள் நிறத்தை மாற்ற முடியாது. விரும்பினால் பற்களுக்கு 'TOOTH CAP' எனும் மூடியைப் போட்டுக் கொள்ளலாம். இது ஒரு தற்காலிகத் தீர்வுதான். ஃபுளூரோசிஸ் நோயை வர விடாமல் தவிர்க்க வேண்டுமென்றால் நாம் குடிக்கும் தண்ணீரில் ஃபுளோரைடு அளவாக இருக்க வேண்டும். ஃபுளோரைடு மிகுதியானால் குடிநீரில் அலுமினியம், பொட்டாசியம் (ALUM) மற்றும் எலுமிச்சைச் சாற்றை சிறிதளவு கலந்து 10 நிமிடங்களுக்கு நன்கு கலக்கி, 3 மணி நேரங்கள் கழித்து, மெல் லிய துணியில் வடிகட்டி, அந்தத் தண்ணீரைப் பருக வேண்டும்; ஃபுளோரைடு கலந்த பற்பசையை இந்த நோய் உள்ளவர்கள் கண்டிப்பாகப் பயன்படுத்தக் கூடாது.



- ப. த. ராஜ்பாபு, சங்கரன்கோவில்.

? 'லுக்கீமியா' நோயைக் குணப்படுத்த எந்தத் தாவரத்திலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது?

! 'விங்கா ரோசியா' (Vinca Rosea) எனப்படும் தாவரத்திலிருந்து லுக்கீமியா - இரத்தப் புற்று நோயைக் குணப்படுத்தும் மருந்து தயாரிக்கப்படுகிறது. சரி, அந்த மருந்தின் பெயர் என்ன, தெரியுமா? வின்கிரிஸ்டின்! (VINCRISTINE).

- ஆர். பாபு, காரைக்குடி.


? எந்த சோப்பு உடம்புக்கு நல்லது?

! தாவரக் கொழுப்பிலும், வாசலைன் கலப்பிலும் தயாரிக்கப்பட்ட, அதிகம் வாசனை இல்லாத, ரசாயனக் கலப்பு முற்றிலும் இல்லாத சோப்புகள்.

- எம்.கே. வேங்கவேல், சேலம்.

? கண்களில் தூசி விழுந்தால் என்ன செய்

# நெய்ல் பாலிஷ் போடுவது கெடுதலா?




வது?

! கண்களில் தூசி விழுந்தால் கண்களை மூடிக் கொள்ளுங்கள். சிறிது நேரம் விழிகளை அசைக் காமல் வைத்துக் கொள்ளுங்கள். பின்பு தரை யில் தலைக்குத் தலையணை வைத்துப் படுத்துக் கொள்ளுங்கள். இப்போது அருகில் உள்ள நண் பரை உதவிக்கு அழைத்துக் கொள்ளுங்கள். நண்பரை உங்கள் கண் இமைகளைப் பிரிக்கச் சொல்லி, விளக்கு வெளிச்சத்தில் கண்ணுக்குள் தூசி இருக்கும் இடத்தைப் பார்த்துக் கொள்ளச் சொல்லுங்கள். அதன் பிறகு சுத்தமான தண்ணீ ரால் கண்களைக் கழுவச் சொல்லுங்கள். தண் ணீர் கிடைக்கவில்லையா? துணியின் நுனியை ஈரப்படுத்திக் கொண்டு - அதை நண்பரின் ஆள் காட்டி விரலில் சுற்றிக் கொண்டு தூசியை அகற்றச் சொல்லுங்கள். கண்களில் அதிக அள வில் தூசி விழுந்திருந்தால் நீர் நிறைந்த அகல மான பாத்திரத்தில் அல்லது தண்ணீர்த் தொட் டியில் கண்களை மூழ்கிக் கொண்டு பலமுறை கண்களைத் திறந்து மூடுங்கள். தூசு தண்ணீரில் நனைந்து, கரைந்து வெளியேறி விடும்.

♦ ஜெ. சுதா, தஞ்சாவூர்.

? **விரலில் நகப்பூச்சு என்ற 'நெயில் பாலீஷ்' போடுவது கெடுதலா? நகம் அழுகி விடும் என்று சொல்கிறார்களே, இது உண்மையா, டாக்டர்? விளக்குங்கள்.**

! உண்மையல்ல, சுமதி! நெயில் பாலீஷ் போடு வதால் நகம் அழுகாது. மாறாக, சிலருக்கு நெயில் பாலிஷில் உள்ள ரசாயனக் கலப்புகள் ஒவ்வாமை (ALLERGY)யை உண்டாக்கும். இதன் விளைவாக நகத்தைச் சுற்றி தோலில் புண், அரிப்பு, தடிப்பு போன்ற தொல்லைகள் வரக்கூடும். அப்படிப்பட்டவர்கள் நெயில் பாலீஷ் போடுவதைத் தவிர்த்து விட்டால், பிரச்னை தீரும்.



♦ சி. பூ. இனியவன், மன்னார்குடி.

? **வயிற்றில் எரிச்சல் ஏற்படக் காரணம் என்ன?**

! வயிற்றில் உள்ள இரைப்பை, முன் சிறுகுடல், சிறுகுடல், கணையம் மற்றும் பெருங்குடல் பகுதிகளில் ஏதேனும் புண் அல்லது அழற்சி இருந்தால் வயிற்றில் எரிச்சல் ஏற்படும். முக்கிய மாக இரைப்பையில் தோன்றும் அமில மிகைப்பு நோயில் (HYPERACIDITY) இந்த அறி குறி அடிக்கடி ஏற்படும். இது தவிர இரைப்பை அழற்சி, இரைப்பைப் புண், முன்சிறுகுடல் புண், இரைப்பையும் உணவுக் குழலும் இணை யுமிடத்தில் ஏற்படும் புண் (REFLUX OESOPHAGITIS) போன்றவை வயிற்றில் உண்டாகும் எரிச் சலுக்கு முக்கிய காரணங்கள்.

♦ ஜெயஸ்ரீ ராஜகுமார், தாசில்தார்நகர்.

? **உடலில் அரிப்பு இருந்தால் மீன், கத்தரிக் காய் சாப்பிடக் கூடாது என்கிறார்களே, ஏன்?**

! உடலில் அரிப்பு தோன்றுவது 'ஒவ்வாமை' யின் அறிகுறி. அந்த ஒவ்வாமை உணவுகளா லும் ஏற்படலாம்; உடைகளாலும் ஏற்படலாம். பெரும்பாலும் உணவுகள்தான் அரிப்புக்குக் காரணமாக அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உணவு ஒவ்வாமையை உண்டாக்கு கிறது. குறிப்பாக மீன், கத்தரிக்காயில் ஒவ் வாமையை உருவாக்கும் 'அங்கங்கள்' (ANTIGENS) மிகை! எனவேதான் அவற்றை அரிப்பு உள்ளவர்கள் உபயோகிக்கக் கூடாது என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.

டாக்டர். கு. கணேசன்

# கத்தினானே?

ஒரு குடியானவன் சந்தைக்குப் போய்விட்டு, மாட்டு வண்டியில் திரும்பி வந்து கொண்டிருந்தான். இருளாகி விட்டதால் ஓய்வெடுக்க எண்ணினான். எனவே வண்டியை நிறுத்திவிட்டு, மாட்டை ஒரு மரத்தில் கட்டப் போனான். மரத்தினருகில் மண்பாண்டக் கலைஞர் ஒருவர் குடிசை போட்டு வசித்துக் கொண்டிருந்தார். அவர் குடியானவனிடம், "இங்கே மாட்டைக் கட்டாதே, என் பானைகள் சேதமாகிவிடும்" என்று கூறினார்.

ஆனால், அந்தக் குடியானவன் திமிருடன் வேண்டுமென்றே மாட்டை மரத்தினடியில் கட்டினான். பானை செய்பவர் பல முறை வேண்டியும் குடியானவன் கேட்கவில்லை. அலுத்துப் போன மண்பாண்டக் கலைஞர் "பானைகளுக்குச் சேதம் ஏற்பட்டால், நீதான் பொறுப்பு" எனக் கூறிவிட்டு வேலையாகச் சென்றுவிட்டார்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. வெளியே வந்து பார்த்த மண்பாண்டக் கலைஞர் அதிர்ச்சியடைந்தார். அவர் செய்து அடுக்கி வைத்திருந்த பானைகளை எல்லாம் மாடு உடைத்து விட்டிருந்தது. அதோடு மாட்டின் கால்களில் காயம் வேறு!

திமிர் பிடித்த குடியானவனோ, மாட்டின் கால் ஒடிந்ததற்கு மண் பாண்டக் கலைஞர்தான் பொறுப்பு என்றும், அதற்கு நஷ்டஈடு தரவேண்டும் என்றும் சண்டையிட்டான். மண்பாண்டக் கலைஞரோ பானைகள் உடைந்ததற்குக் குடியானவன்தான் பொறுப்பு என்றும், அவரே அதற்கு உரிய நஷ்டஈடு தரவேண்டும் என்றும் சண்டையிட்டான். இறுதியில் இருவரும் நீதிபதியிடம் சென்றார்கள்.

குடியானவன் நீதிபதியிடம், தன் மாட்டிற்குக் கால் உடைந்துவிட்டது என்றும், அதற்கு மண்பாண்டக் கலைஞர் தன்பானைகளை அங்கு அடுக்கி வைத்திருந்ததே காரணம் என்றும், மாட்டின் காலில் ஏற்பட்ட காயத்துக்கு அவரே உரிய நஷ்டஈடு தரவேண்டும் என்று கோரி முறையிட்டான். நீதிபதி மண் பாண்டக் கலைஞரை விசாரித்தார். அவர் பதில் பேச வில்லை. நீதிபதி பல முறை கேட்டும் பயன் இல்லை. "ஊமையிடம் எப்படி விசாரிப்பது?" என்றார் அலுத்துப் போன நீதிபதி.

குடியானவன் அதற்கு, "நீதிபதி அவர்களே, இவன் ஊமையல்ல. மாடு கட்டும்போது 'இங்கே கட்டாதே, என் பானைகளை உன் மாடு உடைத்து விடும்' என்று பலமுறை கத்தினானே!" என்றான்.

மண்பாண்டக் கலைஞர், இப்பொழுது வாய்திறந்து, "நான் கட்டாதே என்று பலமுறை கூறியும் மீறிக் கட்டியது இவன்தான். இதை இவனே இப்பொழுது ஒப்புக் கொண்டு விட்டான். எனவே இவன்தான் நஷ்டஈடு தரவேண்டும்" என்றார்.

நீதிபதியும் அதை ஆமோதித்தார். குடியானவன் வேறு வழியில்லாமல் பானைக்கு நஷ்டஈடு அளித்தான். தர்மமே வென்றது.

- பா. காயத்ரி, நமனசமுத்திரம்.





## காகம்

காகம் நல்ல காகம் இது!
கரிய நிறக் காகம் இது!
தேகம் சிறுத்த காகம் இது!
தேசம் சுற்றும் காகம் இது!

வானில் பறக்கும் காகம் இது!
வட்டம் அடிக்கும் காகம் இது!
கூடி வாழும் காகம் இது!
கூட்டில் வாழும் காகம் இது!

தன் பெயரைச் சொல்லிடும்
தனிப் பிறவிக் காகம் இது!
உணவை வைத்து அழைத்தாலே
உடனே வரும் காகம் இது!

— பொன் குமார்.


## நிலவே

வட்ட வட்ட நிலவே
வானில் ஒளிரும் நிலவே
தட்டைப் போல மேலே
தவழ்ந்து நீந்தும் நிலவே

அளவு குறையும் நிலவே
அருகில் வாராய் நிலவே
வெள்ளி போல ஒளியை
வாரி வழங்கும் நிலவே

மூன்றாம் பிறை நிலவே
முத்து வண்ண நிலவே
அங்கு நாங்கள் வரவே
அரிய வழியைச் சொல்வாய்.

— இரா. ஜெகதீசன்.





## நடக்கணும்

பள்ளிக் கூடம் போகணும்
பணிவு பொங்க நடக்கணும்

அன்பு காட்டிப் பேசணும்
அடக்கத் தோடு இருக்கணும்

கருத்தை ஊன்றிப் படிக்கணும்
கணக்கில் நூறு வாங்கணும்

கைத் தொழில்கள் கற்கணும்
கலைப் பொருள்கள் செய்யணும்

ஆடிப் பாடி மகிழணும்
அளவு டனே தூங்கணும்

தந்தை தாயை மதிக்கணும்
தெய்வத் தையும் போற்றணும்

— மாத்தூர் பரமசிவம்.



## அறிந்திடு!

உழைத்து வாழ அறிந்திடு
உண்மை பேச அறிந்திடு!

கூடி வாழ அறிந்திடு
கோபம் விலக்க அறிந்திடு!


வறுமை வாட்டும் நண்பர்க்கு
வலிந்து உதவ அறிந்திடு!


தீங்கி ழைத்த போதிலும்
துயரைத் துடைக்க அறிந்திடு!

நலமாய் வாழ அறிந்திடு
நட்பைப் பேண அறிந்திடு!

அன்பைக் காட்ட அறிந்திடு
அதுவே தெய்வம் அறிந்திடு!

— சி. பூ. இனியவன்.



## பாடுங்க

கிளியக்கா கிளியக்கா
கீதம் பாடுங்க!

அணிலண்ணா அணிலண்ணா
அருகே வாருங்க

கொக்கு மாமி கொக்கு மாமி
காலை ஊனுங்க

யானைமாமா யானைமாமா
ஆடி வாருங்க.

மயிலக்கா மயிலக்கா
மகிழ்ந்து ஆடுங்க

பாம்பண்ணா பாம்பண்ணா
படத்தைக் காட்டுங்க.


— என். அய்யூப்

சின்னச் சின்ன கன்றுக்குட்டி
சிவப்பு வண்ணக் கன்றுக்குட்டி
துள்ளி ஓடும் கன்றுக்குட்டி
துரத்தி முட்டும் கன்றுக்குட்டி!

தாயிடம் ஓடும் கன்றுக்குட்டி
தாவித் தாவும் கன்றுக்குட்டி
வாலைச் சுழற்றும் கன்றுக்குட்டி
வம்புக் கிழுக்கும் கன்றுக்குட்டி!

கொள்ளை அழகு கன்றுக்குட்டி
கொஞ்சும் கண்கள் கன்றுக்குட்டி
செல்லம் கொஞ்சும் கன்றுக்குட்டி
சோம்பல் அறியா கன்றுக்குட்டி!

— நா. மல்லிகா.



## கண்ணன்


நீல வண்ணக் கண்ணன்
நல்ல வர்க்கு நண்பன்
கோலம் காட்டிச் சிரிப்பான்
குழலை ஊதி ஈர்ப்பான்

கொள்ளை அழகுச் சிரிப்பை
குருவா யூரில் கண்டால்
எல்லை இல்லா மகிழ்ச்சி
எதுவென் றுணர்வீர் உறுதி

கண்ணன் நாமம் கூற
காலம் நேரம் இல்லை
கண்ணைக் காக்கும் இமையாய்
கண்ணன் நம்மைக் காப்பான்

— கி. கணேஷ்ராம்.





## தவளை

தத்தி நடக்கும் தவளை
தாவிக் குதிக்கும் தவளை

குட்டை நீரைக் கண்டால்
குதித்து மகிழும் தவளை


நீரில் நீந்தும் தவளை
நிலத்தில் தவழும் தவளை

கொட்டு மேளம் போன்று
கூடித் தாளம் போடும்

நாக்கை நீட்டி இரையை
நன்றாய்ப் பிடிக்கும் தவளை

முட்டை முட்டைக் கண்ணால்
முழித்துப் பார்க்கும் தவளை!

— வடகரைசேக்உசேன்.



## தேசாய் தாத்தா

தேசாய் நல்ல தாத்தா
தேசம் போற்றும் தாத்தா

திறமை மிக்க தாத்தா
தியாக உருவம் தாத்தா

அன்பு மிக்க தாத்தா
அஞ்சா நெஞ்சத் தாத்தா

நூறு வயதுத் தாத்தா
நாடே வியக்கும் தாத்தா

பாரில் இவர்போல் உண்டோ
போற்றிப் பணிந்து உயர்வோம்!

— சு. கண்ணகி.







## திருவிழா

கிராமக் கோவில் திருவிழா
கோலா கலப் பெருவிழா
ஊரார் பகையை மறந்து
ஒன்று கூடும் திருவிழா

ஆடல் பாடல் கேளிக்கை
அதிர் வேட்டு வாணங்கள்
கொட்டு மேள வகைகளும்
கூத்தும் கூட உண்டுங்க

பன்னீர் காவடி பார்க்கலாம்
பால் குடங்கள் காணலாம்
அம்மன் அழகைக் காணலாம்
அருளைப் பாடி வேண்டலாம்.

— கே. ஜே. ஜெயஸ்ரீ

## பொய்க்கால் குதிரை

குதிரை நல்ல குதிரை
குதித்து ஆடும் குதிரை
அருமை யான குதிரை
அழகு வண்ணக் குதிரை

கால்கள் ரெண்டே ரெண்டு
கவர்ச்சி யான குதிரை
ஆட்டம் நன்றாய் ஆடி
அசர வைக்கும் குதிரை

கூட்டம் சூழ்ந்து நிற்க
குதித்து குதித்து ஆடும்
நாட்டி யத்தில் தேர்ந்த
நல்ல ஆட்டக் குதிரை


பொழுது போக்க உதவும்
பொய்க்கால் குதிரை இதுங்க
அழகில் மயக்க வைக்கும்
அருகே வந்து பாரீர்!

— கு. காளிமுத்து.



# பிள்ளையார் சாபம்!

**சின்னபாபு**



தலைமுழுங்காப்பட்டி என்று கண்டைக்காய் அளவில் ஒரு சின்ன ஊர். அதற்குத் தூங்கி விழுந்தார் என்று ஒரு ராஜா இருந்தார். "சர்க்கஸில் கோமாளியாகப் போக வேண்டியவர். நாம் செய்த பாவத்தின் பயனாய் இந்த ஊருக்கு ராஜாவாகி நம்மை வதைக்கிறார்" என்று மக்கள் மனம் நொந்து கொள்ளும்படி ராஜா அரைக் கிறுக்கனாக இருந்தார்.

ராஜா தூங்கி விழுந்தாருக்கு உடம்பெல்லாம் காயம் இருந்து கொண்டே இருக்கும். அடிதடி, சண்டை, போர் இப்படி எந்த வம்புக்கும் போகாதவர் ராஜா. பின்னே எப்படி இந்தக் காயங்கள்? அவை எல்லாம் விழுப்புண்கள்! ஆமாம், ராஜா அலாதியான தூக்கப் பிரியர். எப்பொழுதும் தூங்கி விழுந்து கொண்டே இருப்பார். இந்த மாதிரி எப்பொழுதும் தூக்கக் கலக்கத்தில் இருந்து, தடுக்கித் தடுக்கி விழுந்ததால் ஏற்பட்ட விழுப்புண்களே அவை!

அடிக்கடி போர் ஏற்பட பெரிய பெரிய மன்னர்களும் இல்லை. தானே வலுச் சண்டைக்குப் போகக்கூடிய துணிவும் இல்லை. வேட்டையாடக் காடுகளும் இல்லை. இருந்த காடுகளில் விலங்குகளும் இல்லை. வேறு பிரச்னைகளும் இல்லை. அதனால் தலைமுழுங்காப்பட்டி மன்னருக்குப் பொழுதுபோகவில்லை. எல்லோரையும் சீண்டிச் சீண்டிப் பார்ப்பதில் தனி மகிழ்ச்சி கண்டார்.

குறிப்பாக, குழந்தைகளையும் சிறுவரையும் சீண்டி விடுவதில் மன்னர் தூங்கிவிழுந்தாருக்கு அளவில்லாத ஆனந்தம். ஏதாவது சிறுவர் பட்டாளம் பட்டம் விட்டுக் கொண்டே இருக்கும். ஒருவரும் அறியாவண்ணம் மன்னர் ஒளிந்து ஒளிந்து போவார். கவண் வில்லில் கல்லை வைத்து, வானில் பறந்து கொண்டிருக்கும் காற்றாடியைக் குறி பார்த்து அடிப்பார். சிறுவர்கள் பதறித் தவிக்கும் போது அவர்களுடன் தானும் சேர்ந்து கொண்டு வருந்தி நாடகமாடி மகிழ்வார்.

யாராவது பம்பரம் ஆடிக் கொண்டிருந்தால் போதும். தானும் ஆட வருவதாகக் கூறிச் சேர்ந்து கொள்வார். ராஜாவின் ஆட்டத்திற்குச் சிறுவரால் ஈடு கொடுக்க முடியுமா? மற்றவர் பம்பரத்தைப் பிளக்க வைத்து விட்டு வந்து விடுவார்.

பச்சைக் குதிரை ஆட்டம் மன்னருக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் யானை மாதிரி உருவம் படைத்த ராஜாவை பச்சைக் குதிரையாகச் சுமக்க யாரால் முடியும்? எல்லோரும் பயந்து ஓடிப் போய் விடுவார்கள். ராஜாவுக்குப்

பயந்து கொண்டே தலைமுழுங்காப்பட்டியில் சிறுவர்கள் பச்சைக் குதிரை ஆடுவதே இல்லை!

எந்தக் குழந்தையாவது பலூன் வைத்து விளையாடிக் கொண்டிருந்தால் மன்னருக்குப் பொறுக்காது. என்னமாவது பண்ணி அந்த பலூனை உடைக்க வைத்து, அந்த சத்தத்தைக் கேட்டு குழந்தையை பயந்து அலற வைத்து மகிழ்வார் மன்னர்.

ஒருநாள் காட்டுப் பிள்ளையார் கோவிலில் மன்னர் நாவல் பழம் பொறுக்க வந்திருந்தார். ஏற்கெனவே கினார். அந்த நேரத்தில் ஒரு சுண்டெலி, யார் கண்ணிலும் படாமல் ஓரமாகக் கிடந்த ஒரு சின்னத் துண்டுத் தேங்காயை வாயில் கௌவிக் கொண்டு ஓடியது. மன்னர் அதைப் பார்த்து விட்டார். சிதறு விட்ட தேங்காயில் சிறுவர்களைப் பயப்படுத்தி அதிகமாகப் பொறுக்கியவர் அவர்தான். இருந்தும் ஒரு சின்னத் துண்டை சுண்டெலி இழுத்துக் கொண்டு போவதை அவரால் தாங்க முடியவில்லை. துரத்தினார். சிறு கல்லைத் தூக்கி எறிந்தார். அது ஓடிக் கொண்டிருந்த சுண்டெலி மேல் பட்டு விட்டது.



மாடு மேய்க்கும் சிறுவர்கள் சிலர் அங்கு இருந்தனர். அவர்கள் அரும்பாடுபட்டு, கிளைகளை உலுக்கி, பழங்களை விழ வைத்ததும், அவர்களுக்குப் போட்டியாக மன்னரும் பழங்களைப் பொறுக்க ஆரம்பித்தார். அந்தச் சமயத்தில் யாரோ சிதறு தேங்காய் விட்டார்கள். சிறுவர்களுக்குப் போட்டியாகப் பாய்ந்து பாய்ந்து மன்னரும் தேங்காய்த் துண்டுகளைப் பொறுக்

வலி தாங்காத சுண்டெலி, தேங்காய்த் துண்டைப் போட்டு விட்டு, உயிரைக் காத்துக் கொள்ள ஓடியது. அப்படி ஓடிப் போன அது, அருகே இருந்த காட்டுப் பிள்ளையார் கோவிலுக்குள் நுழைந்து பதுங்கிக் கொண்டது.

கோவிலுக்குள் இருந்த பிள்ளையாரைப் பார்த்ததும் சுண்டெலிக்குக் கோபம் கோபமாக வந்தது.

"பிள்ளையாரே, இங்கு நடப்பதைப் பார்த்துக் கொண்டும் இப்படிப் பேசாமல் இருக்கிறீர்களே! உங்களுக்கு வெட்கமாக இல்லை?" என்று கேட்டது சுண்டெலி.

"என்ன ஆச்சு இப்பொழுது?" என்று கேட்டார் பிள்ளையார்.

"இன்னும் என்ன ஆகணும்? உங்களுடைய பக்தர்கள் அடிக்கடி வேண்டிக் கொண்டு, பிரார்த்தனைக்காக விடப்படும் சிதறு தேங்காயை சிறுவர்கள்தான் சாதாரணமாகப் பொறுக்கிக் கொள்வார்கள். ஆனால், இந்த ராஜா எல்லாப் பிள்ளைகளோடும் போட்டி போட்டுத் தானே அதிகம் பொறுக்கிக் கொண்டார். கவனிக்காது கிடந்த ஒரு சின்னத் துண்டை நான் எடுத்து வந்தேன். அதைக் கூட இந்தக் கோமாளி ராஜா விடவில்லை. கல்லை வீசி, கொலை மிரட்டல் காட்டி, தட்டிப் பறித்துக் கொண்டார்! இந்த அநியாயத்தை எல்லாம் தெய்வமான நீங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று சாடியது சுண்டெலி.



"பிள்ளையாரே, நாங்கள் உங்கள் வாகனம். பாதிக்கப்பட்ட எங்கள் சுண்டெலி இனத்திற்கு இப்படி ஒரு அநியாயம் நடந்திருப்பதை இனியும் என்னால் தாங்க இயலாது. இதற்கு நீங்கள் என்னமாவது பண்ணி, இந்தக் கோமாளி ராஜாவைத் தண்டிக்க வேண்டும். இல்லாவிட்டால் இனி நான் உங்களுக்கு வாகனமாக இருக்க மாட்டேன்" என்று பிள்ளையாரின் காலடியில் இருந்த சுண்டெலி எழுந்து சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டது.

பிள்ளையார் பாவம். சுண்டெலியின் சண்டித்தனத்தைப் பார்த்து பயந்து போனார். சுண்டெலியை விட்டால் அவருக்கு வாகனமாக இருக்க எது முன் வரும்?

சிதறு தேங்காய்த் துண்டுகளை எண்ணிக் கொண்டிருந்த மன்னர் தூங்கி விழுந்தான், பிள்ளையார் தன்னை அழைப்பதைக் கேட்டதும் ஓடி வந்து பணிந்தார்.

"தூங்கி விழுந்தான் மன்னா, என்னுடைய கோவில்களில் விடப்படும் சிதறு

தேங்காய்த் துண்டுகளைப் பொறுக்குவதில் முன்னுரிமை குழந்தைகளுக்குத் தான். சிறுவரோடு நீ போட்டி போடுவது அநியாயம். மன்னிக்க முடியாத குற்றம். அதோடு என் வாகனமாகிய சுண்டெலி கௌவிக் கொண்டு வந்த சின்னத் துண்டுத் தேங்காயைக் கூட விடாமல் நீ பொறுக்கிக் கொண்டது மாபெரும் குற்றம். உடனே அந்தத் தேங்காய்த் துண்டை சுண்டெலிக்குத் திருப்பிக் கொடுத்து விடு."

மன்னருக்கு அந்த நிலையில் கூட பிள்ளையாரின் உத்தரவுக்குக் கீழ்ப் படிந்து தேங்காய்த் துண்டை இழக்க மனம் வரவில்லை. இருந்த துண்டுகளில் ஒன்று சற்று அழுகலாக இருந்தது. எடுத்து சுண்டெலியிடம் வீசினார்.

அதைக் கடித்துப் பார்த்த சுண்டெலி, "பிள்ளையாரே, உங்களையே இந்தக் கோமாளி ராஜா ஏமாற்றுகிறார். அழுகிப் போன துண்டத்தைப் போட்டிருக்கிறார்" என்று முறையிட்டது.

பிள்ளையாருக்குக் கோபம் பயங்கரமாக வந்தது.

"என்னையே ஏமாற்ற நினைத்த உன்னை, இனியும் தண்டிக்காது வைத்திருப்பது தவறு. இன்று முதல் நான்கு பேருக்கு நடுவே நீங்கள் பேசினால் உங்கள் மூக்கு பூசணிக்காய் அளவுக்கு வளர்ந்து விடும்" என்று சாபம் கொடுத்தார்.

மன்னர் அழுது கண்ணீர் விட்டார்.

"பிள்ளையாரே, நான் உங்களை ஏமாற்ற முயன்றது குற்றம்தான். அதற்காக இத்தனை பெரிய தண்டனையா? நான் திருந்தி நல்லவனாக வாழ ஒரு வாய்ப்புத் தரக் கூடாதா?"

மன்னரின் கெஞ்சல் பிள்ளையாருக்குப் பாவமாக இருந்தது.

"சரி, எந்த புத்திசாலிப் பெண்ணாவது உண்மையாகவே சம்மதித்து, உங்களை மணந்து கொண்டால் இந்தச் சாபம் பலிக்காமல் இருக்க அவளே வழி கூறுவாள்" என்று கூறி மறைந்தார் பிள்ளையார்.

தீராத கவலையுடன் மன்னர் நாடு திரும்பி அரண்மனைக்குள் அடைந்து கொண்டார். யாரையும் பார்க்க மறுத்தார். அவரது அம்மா, மகாராணியாரிடம் மட்டும் நடந்ததைக் கூறி விட்டார்.

"பிள்ளையார் கூறினால், நல்லதே நடக்கும்" என்று மகனுக்குத் தைரியம் ஊட்டிய ராணியார், தூங்கிவிழுந்தானை மனப்பூர்வமாக மணந்து கொண்டு ராணியாக விருப்பம் உள்ள இளம்பெண்கள் வரலாம்" என்று முரசறையச் செய்தார்.

மன்னரின் கோமாளித்தனம் நாடறிந்தது. அதனால் வெகு நாட்கள் வரை எந்தப் பெண்ணும் மன்னரை மணக்க முன்வரவில்லை.

கடைசியில் பொன்னி என்று ஒரு பெண் முன்வந்தாள். அவள் மிகவும் ஏழையானாலும் புத்திசாலி. அவள் தந்தை மண்பாண்டக் கலைஞர். தூங்கி விழுந்தான் கோமாளித்தனமானவர்தான் என்றாலும், இப்பொழுது பிள்ளையாரிடம் பெற்றுள்ள சாபம் அவரை மாற்றியிருக்கும் நம்பிக்கை அவளுக்கு இருந்தது.


மன்னர் பேசாத பொம்மையாகவே இருந்தார். திருமணம் முடிந்தது.

"மன்னவா, நாலு பேருக்கு நடுவே பேசினால்தானே உங்கள் மூக்கு பூசணிக்காய் அளவுக்கு வளர்ந்து விடும் என்று பிள்ளையார் சாபம் கொடுத்திருக்கிறார்? மூன்று பேருக்கு நடுவே மட்டும் பேசுவது என்று முடிவு செய்து கொள்ளுங்கள். மூன்று பேருக்கு மேல் கூடியிருக்கும் இடங்களில் நீங்கள் பேசாதீர்கள். உங்களுக்குப் பதில் நான் பேசுகிறேன்" என்றாள் பொன்னி.

தூங்கிவிழுந்தானை அடக்கி, மாற்றி, மக்களுக்கு நல்லாட்சி வழங்க முற்றிலும் பொருத்தமானவள் என்று பொன்னியை வியந்து கொண்டார் பிள்ளையார்.

"ஏண்டா, அந்த ஒரு கேள்வியையே மூக்கி மூக்கிப் படிக்கிறே?"
"அது மூக்கிய கேள்வின்னு சார் சொல்லிட்டாங்கடா!"

— சீர்காழி. வி. ரேவதி



# பஞ்சராயிட்டால்...

## கூத்தபிரான்

*(நாடகத்தைப் படிக்குமுன் உங்களுடன் ஒரு வார்த்தை. அன்புத் தம்பி தங்கைகளே, இந்த நாடகத்தில் வரும் பாத்திரங்கள் உங்களைப் போன்றவர்களே. அதனால் நாடகத்தைப் படிக்கவும் படிக்கலாம்; சிரமமின்றி உடனே நடிக்கவும் நடிக்கலாம். காரணம், பெரியவர்கள் பாத்திரத்திற்கு நீங்களே வேடமிட்டு நடிக்க வேண்டிய அவசியம் இல்லை - கூத்தபிரான்.*

### காட்சி : 1

**வாசு:** என்ன கஸ்தூரி... புது புஸ்தகங்கள் எல்லாம் வாங்கிட்டியா?

**கஸ்தூரி:** வாங்கியாச்சு. இதிலே பாடமும் தொடங்கியாச்சு.

**வாசு:** இந்த வருஷம் நல்லா படிச்சு நிறைய மார்க்கு வாங்கணும்.

**கஸ்தூரி:** வாசு... எப்பவும் நல்லா படிக்கணும். நிறைய மார்க்கு வாங்கணும். ஆமாம், அங்கே வர்றது யாரு? நம்ம சிக்குடுதானே?

**வாசு:** ஆமாம் கஸ்தூரி. அவனேதான் பாவம். அவன் இந்த வருஷம் பாஸாகலே.

**கஸ்தூரி:** அதான் ரொம்ப வருத்தமா வர்றான்.

**வாசு:** அவனுக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்வோம். சிக்குடு சிக்குடு, இங்கே வாயேன். எங்கே போறே!

**சிக்குடு:** ஒருத்தரைப் பார்க்கப் போறேன். எங்கப்பா போயி பார்க்கச் சொல்லி இருக்காரு.

**கஸ்தூரி:** ஆமாம்... நீ பாஸாகல்லியாமே?

**சிக்குடு:** யார் சொன்னது? என்னை பெயிலாக்கிட்டாங்க.

**வாசு:** நல்லா படிக்கிறதுதானே?



**சிக்குடு:** நான் படிச்ச எதிலேயும் கேள்வியே வரல்லே.

**வாசு:** ஆமாம். உனக்கு எந்தப் பாடம் போச்சு?

**சிக்குடு:** நமக்கு வெச்சிருந்த எல்லாப் பாடத்துலேயும் போச்சு.

**கஸ்தூரி:** பார்த்து எழுதக் கூடாதா?

**சிக்குடு:** என் முன்னால இருக்கிறவனைப் பார்த்து எழுதறதா? அவன் ரெண்டு வருஷம் சேர்ந்தாப்பல பெயிலானவன்.

**கஸ்தூரி:** நான் சொல்றது கவனமா யோசிச்சு எழுதக் கூடாதான்னு?

**சிக்குடு:** யோசிக்கவே என்னால முடியலியே...!

**வாசு:** ஏன் சிக்குடு?

**சிக்குடு:** நான் தமிழை நல்லா படிச்சிக்கிட்டுப் போன அன்னிக்கு கணக்குப் பரீட்சை. கணக்கை நல்லாப் போட்டுப் பார்த்துக்கிட்டுப் போன அன்னிக்கு ஆங்கிலப் பரீட்சை.

**கஸ்தூரி:** அது எப்படி?

**சிக்குடு:** தப்பு என்மேலதான். எனக்கு, என்னிக்கு என்னன்ன பரீட்சைன்னு கூட நினைவிலே வெச்சுக்க முடியல்லே.

**வாசு:** அப்போ எப்படி பாடங்களைப் படிச்சு மனசிலே வெச்சுக்கிட்டே?

**சிக்குடு:** மனசிலே வெச்சுக்கிட்டேன்னு யார் சொன்னாங்க? எது படிச்சாலும் எனக்கு உடனே பனிச்சுன்னு மறந்து போயிடும்.

**வாசு:** அப்படியில்லே சிக்குடு. நீ எதையும் கவனமா கேட்கணும்.

**கஸ்தூரி:** வகுப்பிலே வாத்தியார் பாடம் சொல்லித் தரும்போது உன்னிப்பா கேட்கணும்.

**சிக்குடு:** நான் அப்படித் தான் தினம் கேட்பேன். வாத்தியார் வகுப்பை விட்டுப் போனதும், நான் கவனமா கேட்டது எல்லாம், அவர் பின்னாலேயே போயிடுது.

**கஸ்தூரி:** சிக்குடு! நீ பாஸாகல்லியே, அதுப்பத்தி நீ நினைக்கிறதே கிடையாதா?

**சிக்குடு:** நினைச்சுப் பார்த்தா மட்டும் பாஸாயிடுமா?

**வாசு:** ஆமாம்... இனிமேலே என்ன செய்யப் போறே?

**சிக்குடு:** நல்லா படிச்சு, பாஸ் பண்றவங்களைப் பார்த்து சந்தோஷப்படப் போறேன். அதுக்கு காசு, பணமே செலவாகாது...

**கஸ்தூரி:** இல்லே நீ படிக்கணும்.

**வாசு:** படிப்பு ரொம்ப அவசியம்.

**சிக்குடு:** அதுக்கு புத்தி ரொம்ப அவசியம். அதுதான் என்கிட்டே இல்லையே?


**வாசு:** ஆமையும், முயலும் கதை தெரியுமா?

**சிக்குடு:** பள்ளிக்கூடத்திலே பரீட்சையை பாடங்களிலே வெக்கிறாங்க. ஓட்டப் பந்தயத்திலே இல்லே.

**கஸ்தூரி:** நாங்க சொல்ல வந்தது எதிலேயும் முயற்சி வேணும்னு.

**சிக்குடு:** இதை நான் ஒத்துக்கறேன், ஆனா...

**வாசு:** என்ன சிக்குடு ஆனா? உனக்கு படிக்கத்தானே ஆசை?





**சிக்குடு:** அப்படி ஆசை இல்லேன்னா நல்லா திறமையா படிக்கிற உங்களோட இவ்வளவு நேரம் நின்னு பேசுவேனா? உங்க பக்கத்தில நின்னா லாவது அடுத்த வருஷம் பாஸாகும். ஆனா?

**கஸ்தூரி:** என்ன மறுபடியும் ஆனா?

**சிக்குடு:** எங்கப்பா படிச்சது போறும் னுட்டாரு.

**வாசு:** ஏன் அப்படி சொல்லிட்டாரு?

**சிக்குடு:** அவரும் அதிகமா படிக் கலே. அதனால சொல்லிட்டாரு.

**வாசு:** அப்படியா? பாவமாயிருக்கு.

**சிக்குடு:** பாஸ் பண்ணிட்டு சந்தோஷமா இருக்கறீங்க. எதுக்காக என்னை நினைச்சு கவலைப்படணும்? நல்லா படிங்க. நான் வரட்டுமா?

## காட்சி - 2

**ஸ்ரீராம்:** என்ன வாசு, கஸ்தூரி, எங்கே போயிகிட்டு இருக்கீங்க?

**வாசு:** உன்னைத்தான் ஸ்ரீராம் பார்க்க வந்தோம்.

**கஸ்தூரி:** எங்க அதிர்ஷ்டம் நீயே வந்துட்டே!

**ஸ்ரீராம்:** என்ன விஷயம்?

**கஸ்தூரி:** நம்ம கிளாஸ் சிக்குடு இல்லே...

**ஸ்ரீராம்:** ஆமாம்... பாவம்... பெயிலா யிட்டான்.

**வாசு:** பெயிலானா என்ன? மறுபடி யும் படிச்சு பாஸ் பண்ணலாம்.

**கஸ்தூரி:** பண்ணலாம் இல்லியா? அதைப் பண்ண மாட்டேங்கறான் இந்த சிக்குடு.

**ஸ்ரீராம்:** காரணம் கேட்டீங்களா?

**வாசு:** கேட்டதுக்கு அவன் அப்பா வேண்டாம்னு சொல்லிட்டாராம்.

**ஸ்ரீராம்:** அப்படியா! இதை நாம இப் படியே விட்டுடக் கூடாதே. என்ன செய் யலாம்?

**கஸ்தூரி:** அவன் படிக்க செலவா கும்னு, அவன் அப்பா விட்டிருந் தார்னா?

**வாசு:** அந்தச் செலவை நாம ஏத்துக் கலாமா?

**ஸ்ரீராம்:** தாராளமா. அது ஒண்ணும் நமக்குப் பெரிய விஷயமில்லே. நம்ம பிரண்ட்ஸ்கிட்டேயிருந்து பாக்கெட் மணியை கொடுக்கச் சொல்லலாம். முதல்ல சிக்குடுவைப் பார்ப்போம். அதோ... நம்ம பத்மா வராளே! ஏன்? வேகமா ஓடி வர்றா பத்மா?

**பத்மா:** வாசு கஸ்தூரி, நீங்க இங்கேயா இருக்கீங்க?

**கஸ்தூரி:** என்ன பத்மா?

**பத்மா:** நம்ம சிக்குடு இல்லே, அவன் ஒரு சைக்கிள் கடையிலே, சைக்கிளை கிளீன் பண்ணிக்கிட்டு, காத்தடிச்சுக் கிட்டு இருந்தான். என்னைப் பார்த்ததும் நம்ம எல்லோரையும் விசாரிச்சான். நம்ம எல்லாரையும் நல்லாப் படிக்கச் சொன்னான். நல்லாப் படிச்சா நமக்கு இனிப்பு வாங்கித்தருவானாம்.

**ஸ்ரீராம்:** அப்படியா! முதல்ல போயி, அவனைக் கூட்டிக்கிட்டு வருவோம்.

**கஸ்தூரி:** அவனுக்குத்தான் எவ்வளவு நல்ல மனசு!

**வாசு:** அந்த மனசிலே படிப்பு நிக்கலி யேங்கறதுதான் ரொம்ப வருத்தமா இருக்கு.

**ஸ்ரீராம்:** அதுக்கு நாம பாடுபடு வோம். பத்மா, நீ எங்கே போயிகிட்டு இருக்கே? கையிலே என்ன பாட்டில், சீட்டு?

**பத்மா:** எங்கம்மாவுக்கு மருந்து வாங் கப் போறேன்.

**வாசு:** சிக்குடு எங்கேயிருக்கான்னு எங்களுக்குக் காட்டு. (போகிறார்கள்.)

## காட்சி-3

**சிக்குடு:** என்ன இது! ஸ்ரீராம், வாசு, கஸ்தூரி, பத்மா... எங்கே இப்படி?

**ஸ்ரீராம்:** உன்னைப் பார்க்கத்தான் வந்தோம். முதல்ல எங்க கூட புறப்படு...


**சிக்குடு:** அதுசரி. பள்ளிக்கூடம் போகாமே இப்படி சுத்தினா?

**வாசு:** படிக்காமே, நீ இப்படி சைக் கிளுக்கு பஞ்சர் ஒட்டிக்கிட்டு இருந்தா எப்படி?

"பிராக்ரெஸ் ரிப்போர்ட் வந்துடிச் சாடா...?"

"பிராக்ரெஸ் இல்லைன்னு ரிப்போர்ட வீட்டுக்கு வந்துடிச்சுடா!"

- சீர்காழி. வி. ரேவதி



**ஸ்ரீராம்:** இதோ பாரு சிக்குடு. சைக் கிள்ளே ஒரு பஞ்சர் ஏற்படுதுன்னு வைச்சுக்க.

**வாசு:** அதுக்காக சைக்கிளையேவா தூக்கி எறிஞ்சுடறோம்?

**கஸ்தூரி:** இல்லையே... பஞ்சர் ஒட்டி சைக்கிளை விடும்படி நானே பஞ்சர் ஒட்டித் தரேனே?

**பத்மா:** பஞ்சருக்கு ஒரு நியாயம். படிப்புக்கு ஒரு நியாயமா? ஒரு தடவை பெயிலாயிட்டா அதுக்குன்னு அப் படியே படிப்புக்கு தலைமுழுகிடறதா?

**ஸ்ரீராம்:** நீ மேலே படிக்கணும். அதுக் காக உதவ நாங்க இருக்கோம்.

**வாசு:** உங்கப்பாகிட்ட சொல்றோம்.

**கஸ்தூரி:** நீங்க இத்தனை பேரும் ஒண்ணாச் சேர்ந்து என்னைப் பாஸாக்கி விடறதுன்னு கங்கணம் கட்டிக்கிட்டு நிக்கறதைப் பார்த்தா எனக்கும் நாம்ப படிச்சு பாஸாயிடுவோம்னு நம்பிக்கை பிறக்குது. ஆனா....

**பத்மா:** என்ன சிக்குடு ஆனா...

**சிக்குடு:** இந்த சைக்கிள் கடையில எடுபிடியா வேலைல சேர்ந்துட்டேன். நேத்து இந்த சைக்கிள் கடையிலே முன் பணமா பத்து ரூபா வாங்கி எங்கப்பாவுக் குக் கொடுத்தேன்.

**பத்மா:** அதை நான் தர்றேன். இந்தா பத்து ரூபா.

**வாசு:** பத்மா! அம்மாவுக்கு மருந்து வாங்கணும்னு சொன்னியே?

**பத்மா:** நான் செய்த இந்தக் காரியத் தைக் கேட்டா, எங்கம்மா சந்தோஷப்படு வாங்க. சிக்குடுவைப் பத்தி எங்கம் மாவுக்கு நல்லாத் தெரியும். மறுபடி காசு கொடுத்து மருந்து வாங்கி வரச் சொல் வாங்க. இந்தா பணம். வாங்கிக்க...

**வாசு:** பத்மா... உனக்கு நல்ல மனசு.

**கஸ்தூரி :** இந்த மாதிரி நல்ல மனசு எல்லோருக்கும் வேணும்.

**வாசு:** அப்போ தான் நம்ம மாதிரி குழந்தைகள் வாழ்வு சிறக்கும்.

**சிக்குடு :** போகலாமா!

**கஸ்தூரி :** எங்கே சிக்குடு?

**சிக்குடு :** உங்களோடு சேர்ந்து படிக் கத்தான். இனிமே எப்பொழுதும் படிப்பு படிப்பு படிப்புத்தான். எனக்காச்சு இந் தப் படிப்புக்கு ஆச்சு. பார்த்துடறேன் ஒரு கை!

# சார் தபால்!

★ கோகுலத்தைத் தவறாது படிக்கும் இலங்கைவாழ் ...க் குடும்பம் எங்களுடையது. என் மகன் ஆ. குருகுல ...் போட்டிக் கூப்பனை அனுப்பியுள்ளேன். வெளிநாட்டு ரசகர்களுக்குப் போதிய இடம் அளிப்பதில்லை என்ற குறை எங்களுக்கு இருக்கிறது. என் மகன் தனது பெயர் ஒருமுறையாவது கோகுலத்தில் இடம்பெறாதா என்று ஏங்குகிறான். - திருமதி சற்குணா ஆழ்வார் பிள்ளை வவுனியா, இலங்கை.

(இந்த மாதிரி மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, நேபாளம், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் இருந்து வாசகர்கள் ஆர்வ மாகக் கடிதம் எழுதுகிறார்கள். தங்கள் குழந்தைகளின் படைப்புகளை அனுப்பு கிறார்கள். போட்டியிலும் கலந்து கொள் கிறார்கள். ஆனால் பெரும்பாலா னோர் இந்தியாவில் தொடர்பு மூக வரியை (நண்பர் அல்லது உறவினர் ஒருவரது மூகவரியை) எழுதுவ தில்லை. இது மிகவும் அவசியம். இது இல்லாது வருபவைகளைக் கோகுலத்தில் வெளியிடவோ, பரிசு வழங்கவோ இயலாது. இந்த இதழில் வெளியாகியுள்ள ''குறில் நெடிலைச் சேருங்கள்'' போட்டியில், சிங்கப்பூரைச் சேர்ந்த ஒரு சிறுமி பரிசு பெற்றிருக்கிறாள். தொடர்பு மூகவரி இருந்ததால் பரிசில ளைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தொடர்பு மூகவரி யுடன் அனுப்புங்கள். உங்கள் ஆர்வத்திற்கும், ஆதரவுக்கும் நன்றி. - ஆசிரியர்.)

''ரமலானின் சிறப்பை, 'ரமலான் திருநாள்' கட்டுரை ...ம் தெரிந்து கொண்டேன். நன்றி!'' - மேல்மலையனூர், எஸ். செந்தில்குமார்.

★ கவிக்குயிலின் பிறந்த மாதத்தில் புதிய செய்திகளை எங்களுக்குக் கொடுத்து, அவருக்கும் புகழாரம் சூட்டி விட்டீர்கள். - திருவாரூர், மு. தனகோபாலன்.

★ குழந்தைக் கவிஞரின் மனைவி என்பதில் மிகவும் பெருமை யடைகிறேன் என்று வள்ளியப்பாவின் மனைவி கூறியிருப்பது மிக மிக அருமை. எல்லோர் நெஞ்சிலும் குழந்தைக் கவிஞர் வாழ்கிறார். - தேனி, முருகேசன், சர்க்கார் கொல்லப்பட்டி, பெரு. இளங்கம்பன் மற்றும் பலர்.

★ ''நான் பார்த்துக்கறேன்'' நாடகம் காலம் பொன் போன்றது, அதைத் தக்க முறையில் செயல்படுத்த வேண்டும் என்ற கருத்தை உணர்த்தியது. - திருக்கண்ணங்குடி, அ. சிங்காரவேல், பா. சரவண குமரன், ஆரணி கே. யுவராஜ்.

★ ''பரிமாணம் பற்றித் தெளிவாக விளக்கியது, 'நான்காவது பரிமாணம்'. துணிச்சலான பயனுள்ள கட்டுரை. - மேல்மலைய னூர், எஸ். சரவணன், சர்க்கார்கொல்லப்பட்டி, ஒவியக்கம்பன்.

★ ''கம்மர்கட் கண்ணப்பர்!'' - கன்னத் தாடையெல்லாம் வலிக்கச் சிரிப்பை வரவழைத்து, அதோடு அவர் மேல் பரிதாபப்படவும் வைத்து விட்டார். - சென்னை - 1, ஏழுகிணறு, எஸ். பாலாஜி, மேலப்பாதி, எஸ். நாகராஜன்.

★ கே. குப்புராஜ் அவர்களின் கலைப் பொருள் செய்வோம் -7ல் ''துணியால் ஆன ரோஜா'' செய்தேன். வீட்டில் மிகுந்த பாராட்டுக் கிடைத்தது. - விருத்தாசலம், வி. பிரபாகர், இரா. பிரசன்னகுமார், திருவாரூர், த. சாந்தி.

★ அப்பா பாடம் சொல்லித் தருவாரா? பேட்டியைச் சரியான நேரத்தில் வெளியிட்டு மாணவர்கள், பெற்றோர்கள் மனதில் பதியச் செய்து விட்டீர்கள். சபாஷ்! - ஆரணி, கே. யுவராஜ், மேலப்பாதி, ராஜலெட்சுமி நாகராஜன்.

★ வரிக்கு வரி மர்மத்தையும், சஸ்பென்ஸையும் தருகிறது வாண்டுமாமாவின் ரத்தினபுரி ரகசியம். படங்களும் கண்ணுக்குக் குளுமை. - திருக்கண்ணங்குடி, பா. சரவணகுமரன், அ. கமல். சென்னை - 32, பி. சுதா, முரளி, சுந்தர், தம்மம்பட்டி, க. கிருஷ்ணமூர்த்தி, மேல்மலையனூர், எஸ். சரவணன், எம். எஸ். பெருமாள், எம். எஸ். கிருஷ்ணன், திருவாரூர், த. பரதன்.

★ வசந்த காலம் என்பது எது என்ற நுணுக்கு பிப்ரவரி, மார்ச் இரு இதழ்களிலும் வெளிவந்துள்ளது. இது போன்ற தவறுகளை ஏன்தான் செய்கிறீர்களோ தெரியவில்லை. - அம்மாப்பேட்டை, ஜி. கௌரிப்ரியா, சென்னை - 82, ம. ராமநாராயணன், கோய முத்தூர், ஸ்ரீவித்யா மற்றும் பலர்.

★ 'மாதாந்திரப் போட்டியில் விடைகளை வெட்டி (கவரில்) அனுப்பச் சொல்கிறீர்கள். அதற்குப் பதிலாக ஒவ்வொன்றுக்கும் நம்பர் கொடுத்து அதனை இணைத்து, தபால் கார்டில் எழுதி, முகவரி கூப்பனை ஒட்டி அனுப்பச் சொன்னால் தம்பி தங்கைகளுக்கு செலவு குறையுமே? - திருவாரூர், மு. தன கோபாலன்.


(நல்ல யோசனை, கவனிக்கிறோம். - ஆசிரியர்.)

★ 'கேளுங்கள் சொல்லப்படும்' பகுதியில் நீரே அருந்தாத உயிரினம் கோலாகரடி என்ற பதில் இருக்கிறது. ஆனால் 16.2.95 (வியாழன்) 1.00 மணிக்கு தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ''சிந்திக்க ஒரு நொடி'' நிகழ்ச்சியில் கங்காரு, எலி என்று பதிலளித்தார்கள். எது சரி?

(இரண்டுமே நீர் அருந்தாதவைதான். - ஆசிரியர்)

★ ஒரு காலையும், தலையையும் வெளியே தெரியாதபடி உள்ளே இழுத்துத் தூங்கும் பூ நாரையை பற்றி, அறிந்து கொண்டேன். வியந்தேன். - திருக்கண்ணங்குடி, அ. சிங்காரவேல். திருவாரூர், த. வரதன், சர்க்கார்கொல்லப்பட்டி, ஆர். ஜெயலட்சுமி ரமேஷ்.

## கலைப் பொருள் செய்வோம் - 9



# கூம்பு ராஜா


படத்தில் உள்ளதுதான் கூம்பு ராஜா பொம்மை. இது உடல், மார்பு, கழுத்து (முகம்), தொப்பி என்ற நான்கு பகுதிகளாகச் செய்யப்பட்டு இணைக்கப்பட்டது.


**இதைச் செய்யத் தேவையானவை :**

1. செ.மீ. அளவு குறிக்கப்பட்ட ஸ்கேல்
2. பென்சில்
3. தபால் கார்டை விட சற்றுக் கனமான அட்டை
4. பெவிகால்,
5. கத்தரிக்கோல்
6. கறுப்புக் கம்பளி நூல் (ஸ்வெட்டர் போடும் நூல்)
7. வண்ணச் சமிக்கி பொட்டுகள் அல்லது ஜிகினாவில் பஞ்சிங் மிஷினில் ஓட்டை செய்யப்பட்ட பளபள வண்ணப் பொட்டுகள், அல்லது பல வண்ண பளபள பாசி மணிகள்.
8. கோல்டன் லேஸ் ஒரு மீட்டர்
9. மெல்லிய பழைய வண்ணத் துணி பிட்டுகள் அல்லது வண்ணக் காகிதம்.
10. பழைய பிள்ளையார் குடையின் குச்சி, அல்லது காலண்டர் ஓரக் கம்பி.
11. சின்ன பிளாஸ்டிக் கப்

**செய்முறை : உடல் பகுதி :**

மளிகைக் கடைகளில் சாமான் வாங்கும் போது நியூஸ் பேப்பரைக் கூம்பு வடிவில் சுருட்டி சாமான்களைக் கட்டிக் கொடுப்பதைக் கவனித்திருப்பீர்கள். அதே போன்ற ஒரு கூம்பு வடிவம், இந்த பொம்மையின் உடலைச் செய்யத் தேவை. எனவே, முதலில் இதை நியூஸ் பேப்பரில் செய்து கொண்டு, பிறகு அட்டையில் செய்யவும். இதைச் செய்ய கால் வட்டத்தின் வடிவில் ஓர் அட்டை தேவை. படத்தில் தரப்பட்டுள்ள அளவுக்கு இதை வெட்டி, A,B பகுதிகளை இணைத்து ஒட்டிக் கொள்ளவும். இது தரையில் சமமாக உட்காரும்படி, அவசியமானால் கத்தரித்து கீழ்ப்பகுதியைச் சரிசெய்து கொள்க.






கே. குப்புராஜ்


# பொம்மை

இதைக் கடைசியிலும் செய்து கொள்ளலாம். இதன் மேல் வண்ணத் துணியை சுருக்கம் இல்லாது ஒட்டி கீழே உள் பக்கம் மடித்து விடவும். நீள்வாட்டில் கோல்டன் லேஸ்களைக் கத்தரித்து பட்டை பட்டையாக வரிவரியாக இதன் மேல் ஒட்டவும். அதிகமான லேஸ் வந்தால் சுருக்கம் இல்லாது கீழ்ப் பகுதியில், உள்பக்கமாக மடித்து ஒட்டி விடவும். இந்த பட்டைப் பகுதிகளுக்கு நடுவில் பல வண்ண சமிக்கி பொட்டுகளை அல்லது ஜிகினா பொட்டுகளை ஒட்டவும். இப்பொழுது உடல் தயார்.





***மார்புப் பகுதி :***

மார்புப் பகுதி என்பது மடிக்கப் பட்ட அரை வட்டமே. 14 செ.மீ. விட்டப் பகுதி இருக்கும்படி ஒரு வட்டத்தை, அட்டையில் வரைந்து கத்தரித்து எடுத்துக் கொள்ளவும். இதன் நடுவில் ஒரு சின்ன ஓட்டை (நடித்த பேனாவைச் சொருகும் அளவுக்கு) செய்து கொள்ளவும். உடல் பகுதிக்கு ஒட்டிய அதே வண்ணத் துணியை இதன்மேல் ஒட்டி அதிகப்படி துணியை உட்பக்கம் மடித்து, சுருக்கம் இல்லாது செய்து கொள்ளவும். உடல் பகுதிக்கு ஒட்டியது மாதிரியே கோல்டன் லேசைக் கத்தரித்து வட்டத்தில் ஒட்டவும். பிறகு இதை அப்படியே பாதியாக மடிக்கவும். ஒரு பக்க டடிப்பின் ஓரத்தில் சமிக்கி பொட்டுகளை ஒட்டவும். நடுவில் ஓட்டைப் பகுதி இருக்க வேண்டும்.




இப்பொழுது பிளாஸ்டிக் கப்பில் களி மண்ணைக் குழைத்து அடைத்து நடுவே குச்சியை நட்டு உலரவிட்டு அதில் பொம்மையின் உடல் பகுதியைச் சொருகவும். அதற்குமேல் மார்புப் பகுதியைச் சொருகவும். தலை, தொப்பிப் பகுதிகளையும் சொருகும் அளவுக்குக் குச்சியை வைத்துக் கொள்க.




**தலை (முகம்) பகுதி :**

11 செ.மீ. நீளமும், 3 செ.மீ. உயரமும்

# புதிய ஆண்டே வருக!

புதிய ஆண்டே வருக - நெஞ்சில்
புதுமை உணர்வைத் தருக!
இதயம் யாவும் அன்பால் - என்றும்
இணையும் நிலைமை பெருக!

உன்றன் வரவை நாங்கள் - இங்கு
உவகையோடு ஏற்போம்!
என்றும் இன்பம் நிறைய - புவ
இனிய ஆண்டே வருக!

பழைய ஆண்டு போக - வந்த
புதிய ஆண்டில் வளங்கள்



செழிக்க வாழ வேண்டும் - நமது
திறமை ஓங்க வேண்டும்!

ஆண்டு மாற மாற - நெஞ்சில்
அறிவு ஊறும் ஊறும்!
வேண்டி நாங்கள் விரும்பும் - பள்ளி
விடுமுறையும் தொடங்கும்!

ஓடி ஓடி மகிழ்வோம் - பல
ஊர்கள் சென்று வருவோம்
ஆடி முடிந்த பின்னர் - பள்ளி
அடுத்த ஆண்டு செல்வோம்!

- வெற்றியூர் சுப. திருஞானம்

உள்ளதாக ஒரு அட்டைத் துண்டை வெட்டி A,B பகுதிகளை ஒட்டி விடவும். இணைத்து ஒட்டிய பிறகு நீளம் 11 செ.மீ. இருக்க வேண்டும். இங்கே உள்ள முகத்தை அப்படியே டிரேஸ் பண்ணி அட்டையில் ஒட்டி, கத்தரித்து, இதில் ஒட்டி விடவும். இந்த முகத்தை, உடல் பகுதி சொருகப்பட்டுள்ள கூம்புப் பகுதியில் சொருக வசதியாக இதில் கத்தரிக் கோலால் ஓட்டை செய்து சொருகவும். கறுப்பு உல்லன் நூல்களை தலையின் இரு பக்கமும் தொங்கும்படி கத்தரித்து தேவையான அளவுக்கு தலைப் பகுதிகளில் (இடது, வலது, உச்சி, பின்னால்) ஒட்டி விடவும். இப்பொழுது தொப்பியைச் சொருக தலை வரை தயார்! தலைக்கு மேல் இந்தக் குச்சிப் பகுதி நீட்டிக் கொண்டு இருக்க வேண்டும்.

**தொப்பிப் பகுதி :**

11 செ.மீ. நீளமும் 6 செ.மீ. உயரமும் (அகலமும்) கொண்டதாக ஒரு அட்டையை வெட்டி உயரப் பகுதிகள்ள ஒட்டி இணைக்கவும். இணைத்த பிறகு 10 செ.மீ. இருக்கலாம். இதில் ஒரு வண்ணத் துணியை சுருக்கம் இல்லாது வெட்டி ஒட்டிக் கொள்ளவும். உடல், தலைப் பகுதிகளுக்குச் செய்தது போலவே கோல்டன் லேசை பார்டராகவும், வரி வரியாகவும் ஒட்டி, இடையிடையே சம்கி அல்லது ஜிகினா பொட்டுகளை ஒட்டவும். தொப்பியை தலையில் சரியாகப் பொருந்தும்படி ஒட்ட, பின்பக்கத்தில் (காற்றாடிக்கு சுங்கு வைக்கக் கத்தரிப்பது போல்) கத்தரித்து, பெவிகால் தடவி தலையில் ஒட்டி விடவும்.

உடல், மார்பு, தலை, தொப்பிப் பகுதிகளை உங்கள் கற்பனையைப் பயன்படுத்தியும் அழகு செய்யலாம். இதேபோல் ராணி பொம்மையையும் செய்யலாம். வரவேற்பு அறை இவைகளால் அழகு பெறுவதுடன் உங்கள் கைவண்ணத்தின் பெருமையையும் உணர வைக்கும்.

பாதன் அச்சகத்தில் பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி, ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

அழகுப் பையன் கைகளில்
ஆட்டுக் குட்டி அடைக்கலம்!



GOKULAM (Tamil) April '95 REGISTERED NO. TN MS (S) 281 Registered as Newspaper in Sri Lanka

# அன்பார்ந்த குழந்தைகளே!
# கோரஸ் வாங்கி உங்கள் வீட்டிலே மீன் பிடியுங்கள் ஆனந்தமாக!



## ப்ரிட் சக்தியின் உதவியால்

கோரஸ் வழங்கும் ப்ரிட் க்ளு ஸ்டிக் கொண்டு இந்த அழகான டேங்க்ளர் மற்றும் மற்ற வண்ணமயமானப் பொருட்களை செய்யுங்கள்.

செய்வது எளிதானது, சுத்தமானது மற்றும் விரைவானது. பிசுபிசுப்பற்றது. பள்ளி ப்ராஜெக்ட், போஸ்டர், கிரீடிங் கார்ட், கைவினைப் பொருட்கள், வெகுமதிகள் போன்றவைகளுக்கு மிகவும் சிறந்தது. உங்கள் கற்பனாசக்திக்கு உத்வேகம் கொடுத்து புதிய பொருட்களை உண்டாக்குங்கள். உங்கள் ஆசிரியர், நண்பர்கள் உங்களைப் புகழ்வார்கள்.

கோரஸ் ப்ரிட் க்ளு ஸ்டிக் கொண்டு உங்களுக்குப் பிடித்தமானதைச் செய்யுங்கள். அனைத்து ஸ்டேஷனரி கடைகளில் மற்றும் ஜெனரல் ஸ்டோர்களில் கிடைக்கிறது.



**கோரஸ்**




இலவசம்!

கோரஸ் (இந்தியா)
த.பெ.எண் 6558, பம்பாய் 400

ப்ரிட் கொண்டு ஒட்டவைக்கவும். இதுவே சர்வதேச விருப்பம்

AKA/67